தெரிந்த ஈரோடு தெரியாத செய்திகள்

செ.இராசு

தெரிந்த ஈரோடு
தெரியாத செய்திகள்

தொகுப்பாசிரியர்

புலவர் **செ.இராசு** எம்.ஏ., பிஎச்.டி.

வெளியீடு

கொங்கு ஆய்வு மையம்

ஈரோடு - 638 011.

நூற்குறிப்பு

இந்நூல் ஈரோடு மாமரத்துப்பாளையம்
சக்தி மசாலா நிறுவனங்களின் உரிமையாளர்கள்
டாக்டர் **பி.சி. துரைசாமி**
டாக்டர் **சாந்தி துரைசாமி**
ஆகியோர் பொருட்கொடையால் வெளியிடப் பெறுகிறது.
அவர்கட்கு எங்கள் நன்றி உரியதாகுக.

நூலின் பெயர்	:	தெரிந்த ஈரோடு தெரியாத செய்திகள்
நூல் பொருள்	:	நகர வரலாறு
ஆசிரியர்	:	புலவர் செ. இராசு
மொழி	:	தமிழ்
நூல் உரிமை	:	கொங்கு ஆய்வு மையத்திற்கு
பதிப்பு ஆண்டு	:	2017
நூலின் அளவு	:	11 செ.மீ. × 18 செ.மீ.
பக்கங்கள்	:	136
அச்சு எழுத்து	:	11 புள்ளி
விலை	:	ரூ. 130 /-
நூல் கிடைக்குமிடம்	:	கொங்கு ஆய்வு மையம் 58/2, பாலக்காட்டுத் தோட்டம் புதிய ஆசிரியர் குடியிருப்பு வழி ஈரோடு - 638 011. போன் : 0424-2262664 செல் / 97900 38380, 95009 38384
நூல் & அட்டை வடிவமைப்பு	:	வாழ்க வளமுடன் ஆப்செட் பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிடெட், 29 நாச்சியப்பா வீதி, ஈரோடு - 638 001. போன் : 0424-2258511, 22

முனைவர் **எஸ்.பிரபாகர்** இ.ஆ.ப.,
ஆட்சியர்,
ஈரோடு மாவட்டம்.

ஈரோடு
5.9.2017

அணிந்துரை

"தெரிந்த ஈரோடு தெரியாத செய்திகள்" என நூலின் பெயர் அமைந்திருப்பினும் கொங்கு நாடு குறித்த அரிய தகவல்கள் நூலெங்கும் விரவிக்கிடப்பதை அறிய முடிகிறது. குறிப்பாக கொங்கு மண்டலம் 24 நாடுகளாகப் பிரிக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்ட செய்தி ஒரு வரலாற்றுப் பதிவாக உள்ளது.

கோவை மாவட்டத்தில் ஈரோடு இருந்தமையும், ஈரோட்டின் இருப்புப்பாதை வரலாறு, ஈரோடு தாலுக்கா உருவான வரலாறு போன்ற தகவல்கள் மக்கள் அறியக்கொடுத்த அரிய தகவல்கள்.

"வரலாறு படிக்காமல் வரலாறு படைக்க முடியாது
ஆனால் இந்நூலே
வரலாறாக விளங்கும் என்பதில் சந்தேகமில்லை".

கழுமரம் குறித்த செய்தியைப் படிக்கும் போதே நேரில் காணும் ஆவலும் வரலாற்றின் மீது ஆர்வமும் மிகுதியாகிறது.

நூலின் ஒவ்வொரு பக்கமும் அரிய தகவல்களைக் கொண்டுள்ளதால் ஒரே மூச்சில் படிக்கத் தூண்டுவதை உணர முடிந்தது. நூலைப் படிக்கும் எவருக்கும் தான் பிறந்த ஈரோட்டின் மீது பெருமிதத்தையும், பெருமையையும் ஏற்படுத்தும்.

பல ஆண்டுகளாக ஈரோடு பெற்று வந்த சமூக பொருளாதார வளர்ச்சியை அடிப்படைக் கட்டமைப்புகளில் பெற்ற மாற்றங்களை விளக்கும் வரலாற்று ஆவணமாய் இந்நூல் விளங்கும்.

பேரழிவுக்கு உள்ளாகி வெறும் 400 இடிந்த வீடுகளுடன் இருந்த ஈரோடு நகரம் இன்று இவ்வளவு பெரிய வளர்ச்சி பெற்று ஒரு மாவட்டத்திற்கே தலைநகரமாக விளங்கிக் கொண்டிருப்பதை எண்ணும் போது வியப்பும் ஆச்சரியமும் ஏற்படுகிறது.

எதிர்காலத் தலைமுறையினர் குறிப்பாக ஈரோடு மாவட்ட மக்கள் தங்கள் அடையாளத்தை அறிந்து கொள்ளும் வகையில் ஆக்கம் செய்யப்பட்டிருக்கும் நூல் இதுவாகும்.

ஈரோட்டின் வரலாற்றைப் பேசும் போதெல்லாம் புலவர் செ. இராசு அவர்களின் பெயரை உச்சரிக்காமல் போக முடியாத அளவிற்கு வரலாற்றைத் தொகுத்திருக்கிறார்.

ஈரோட்டின் மணிமகுடத்தில் மின்னும் வைரங்களில் புலவர் செ. இராசுவும் ஒருவர். அவர் பணி சிறக்க வாழ்த்துக்கள்.

வாழ்த்துக்களுடன்
எஸ். பிரபாகர்

முனைவர் **பி.சி.துரைசாமி**
முனைவர் **சாந்தி துரைசாமி**
சக்தி மசாலா நிறுவனங்கள்

6.மாமரத்துப்பாளையம்
ஈரோடு-638004.
0424 2533601

அணிந்துரை

"தெரிந்த ஈரோடு தெரியாத செய்திகள்" ஒரு அரிய செய்திக் கோர்வை. நமது ஈரோடு நகருக்கு இவ்வளவு பெருமைகளா என்று வியக்க வைக்கும் செய்திகள் ஏராளம். குறிப்பாக நமது தேசப்பிதா அண்ணல் காந்தி அவர்கள் நான்கு முறை நமது நகருக்கு வந்துள்ளார் என்ற செய்தி நம்மில் பெரும்பாலோருக்குத் தெரியாத ஒன்று.

விக்டோரியா மகாராணி, பல ஆங்கிலேய மாவட்ட ஆட்சியர், ஆளுநர்களின் பெயர் களில் இருந்த தெருக்கள் எல்லாம் பெயர் மாற்றம் கண்ட பின்பும் பிரப் சாலை பெயர் மாற்றம் காணாமல் இருப்பதன் காரணம் நமக்குத் தெரியாத ஒன்று தான்.

காலிங்கராயன் வாய்க்கால் பற்றி பல செய்திகளைக் கேள்விப்பட்டுள்ள நமக்கு, அது தொடங்குவதற்கு முன் அனைத்துத் தரப்பினரையும் கூட்டி எடுத்த முயற்சிகள், மற்றும் காலிங்கராயன் வாய்க்காலில் அன்று கட்டிய பாலம் இந்தியாவின் தொன்மையான பாலங்களில் ஒன்று என்ற வரலாற்றுச் சிறப்புப் பெற்றது நம்மில் பலர் அறியாத செய்தி.

ஈரோடு இலக்கிய சங்கம் என்ற சங்கத்தைத் தொடங்கியதே எச்.ஏ.பாப்லி என்ற ஆங்கிலேயர் தான் என்ற செய்தியும், ஈரோட்டில் ஐம்பதிற்கும் மேற்பட்ட இதழ்கள் வெளிவந்தன என்பது வும், விடுதலை வேண்டி பல அரசியல் மற்றும் இளைஞர் அமைப்புகள் இருந்தன என்பதும், அறிஞர் அண்ணா அவர்களின் முதல் நாடகம் அரங்கேறியதும் நமது ஈரோட்டில் தான் என்பதுவும் நமக்கு தெரியாத செய்திகள் தான்.

இன்று பன்னீர்செல்வம் பார்க் பற்றி தெரியாதவர்கள் ஈரோட்டில் இருக்க வாய்ப்பில்லை. ஆனால் யார் இந்த பன்னீர்செல்வம் ? என்பது பற்றி எத்துணை பேருக்குத் தெரியும் என்பதுவும் தெரியவில்லை. ஆனால் இந்த நூல் பன்னீர்செல்வம் பற்றிய செய்திகளை அழகாகத் தொகுத்துக் கொடுத்துள்ளது.

சமூக நீதியின் பிறப்பிடம் ஈரோடு என்று நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் 1930 களிலேயே உணவகங்களில் சாதி பார்த்தால் அவ்வுணவகங்கள் நடத்த அனுமதி இல்லை என்ற புரட்சிகரமான தீர்மானம் ஈரோடு நகரமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது நமக்கெல்லாம் தெரியாத செய்தி.

பெண்களுக்கு உரிமை வழங்குவதில் நாட்டிற்கே முன்னோடியாக நமது நகரம் விளங் கியிருக்கிறது என்பதை எண்ணி நாமெல்லாம் பெருமை கொள்ள வேண்டும். மேலும் இந்த நகரில் இருந்த தாழி ஏரி, பொய்கை ஏரி ஆகியன காணாமல் போனது பற்றியும், பெரும்பள்ளம் ஓடை, பிச்சைக்காரன் ஓடை ஆகியன சாக்கடை வடிகால்கள் ஆனதையும் வெகு கவலை யோடு விவரிக்கிறது இந்தக் கையேடு.

பொதுவாக 'ஒரு நாட்டின் வரலாற்றைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால், உன் ஊரின் வரலாறு அறிந்துகொள்' என்று சொல்வர் சான்றோர். அந்த அடிப்படையில் இந்த நூல் நமது நகர் பற்றிய அரிய தகவல்களைத் தொகுத்து வழங்கப்பட்ட ஒரு ஆவணம்.

இப்படி ஒரு அரிய ஆவணத்தை வெளியிட வேண்டும் என்ற புலவர் செ. இராசு அவர்களின் தீராத வேட்கை, அவரை இந்த தள்ளாத வயதிலும் புத்துணர்ச்சியோடு செயல்பட வைத்திருக் கிறது. புலவர் செ. இராசு என்ற ஒரு மாமனிதர் மட்டும் இந்த முயற்சியை எடுக்காமலிருந்தால் ஈரோடு பற்றிய வரலாறே நமக்கெல்லாம் முழுமையாகத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அவரை வாழ்த்த எங்களுக்கு வயதில்லை, அதனால் வணங்குகிறோம் உங்களின் இந்த மாபெரும் முயற்சிக்கு.

அன்புடன்

முனைவர் **பி.சி. துரைசாமி**
முனைவர் **சாந்தி துரைசாமி**

ஈரோடு
5.9.2017

இனிய நம் ஈரோடு

தொல்பொருள் சிறப்பும், வரலாற்றுப் பெருமையும், இலக்கியப் புகழும் உடையது ஈரோடு.

உலகத் தொழில் அனைத்தையும் உவந்து செய்து பல்வேறு தொழில்கள் முனைந்து செய்வதிலும், அதன் வளர்ச்சியிலும் மாநிலத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்ற ஊர் ஈரோடு.

தமிழ்நாட்டின் எட்டாவது பெருநகரமாக வளர்ந்து எப்பொழுதும் சுறுசுறுப்பாக இயங்கும் மக்களைக் கொண்ட ஊர் ஈரோடு.

நிலவளமும், நீர்வளமும், மக்கள் மன வளமும் உட்படப் பலவளமும் பெற்றிருப்பதால் வந்தார் அனைவரையும் வரவேற்று அரவணைத்து வாழவும், வளரவும் வைக்கும் ஊர் ஈரோடு.

இனம், மதம், மொழி வேறுபாடு இல்லாமல் அனைவரும் ஒரு குடும்பமாக நேசித்து மனிதநேய ஒற்றுமையுடன் வாழும் ஊர் ஈரோடு.

அன்னிய ஆட்சியை அகற்ற நாடு வீறுகொண்டு எழுந்த போது அந்த அறப்போரில் தன்னையும் இணைத்துக் கொண்டது ஈரோடு.

அண்ணல் காந்தியடிகளுக்கு முதன் முதல் (1927) சிலை வைத்து மகிழ்ந்த ஊர் ஈரோடு.

கட்டுமானத்துறையில் தமிழ்நாட்டில் புகழ் பெற்ற பல பெரு நிறுவனங்கள் இருப்பது ஈரோடு.

கல்வி கற்பிப்பதை ஒரு வேள்வியாகக் கருதி மாணவர்கட்காகப் பாடுபடும் பல கல்வி நிறுவனங்கள் உள்ளது ஈரோடு.

45 ஆண்டுகட்கு முன் இருசக்கரவாகனம் (ஸ்வேகா மொபட்) வாங்க சேலம் சென்றோம் (விலை 1400 ரூபாய்). இன்று இருசக்கர வாகனப் பெரு நிறுவனங்கள் அனைத்தின் வெற்றிகரமான முகவர்கள் இருப்பது ஈரோடு.

மஞ்சளுக்கும், ஜவுளி ரகங்களுக்கும் நாட்டின் அடையாளம், மையப்புள்ளியாக இருப்பது ஈரோடு.

அரசு ஊழியர்களும், பிற அலுவலர்களும், தொழில் முனைவோரும், தொழில்களில் பணிபுரிவோரும், வணிகர்களும் வாழ்வியல் வசதிகளால் மிகவும் விரும்பிப் போற்றிப் பணியேற்க விரும்பும் ஊர் ஈரோடு.

'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை' உயர் கல்வி அளிப்பதிலும், மருத்துவத்திலும் இதனைச் சாதித்துள்ளது ஈரோடு.

ஏறக்குறைய 75 ஆண்டுகள் தமிழக அரசியல், சமுதாய உணர்வு ஆகியவற்றின் தொட்டிலாக விளங்கியது ஈரோடு.

புகழ் பெற்ற பொதுநல அமைப்புக்கள் பல தன்னலமற்றுப் பணிசெய்து சிறக்கும் ஊர் ஈரோடு.

தாழ்ந்த சமுதாயத்தைத் தலைநிமிரச் செய்த பகுத்தறிவுப் பகலவன், சமூக விஞ்ஞானி தந்தை பெரியார் பிறந்த ஊர் ஈரோடு.

இன்று ஐவுளி ரகங்கள் சங்கமிக்கும் பெருங்கடலாக உலகத் தரம் வாய்ந்த நவீன நிறுவனம் 'டெக்ஸ்வேலி' அமைந்த ஊர் ஈரோடு.

கைத்தறிக்கும், விசைத்தறிக்கும் கடமை தவறாத காவல் அரணாக விளங்குவது ஈரோடு.

வாகனப் போக்குவரத்து, கட்டிடப் பொருள் விற்பனை, மருத்துவ வசதி போன்றவற்றில் சிறப்பிடம் பெறுவது ஈரோடு.

வாசிப்பை நேசிக்க ஆர்வமூட்டும் மக்கள் சிந்தனைப் பேரவையின் புத்தகத் திருவிழாவில் பிற ஊர்களுக்கு வழிகாட்டியாக விளங்குவது ஈரோடு.

ஈரோடு நலத்திற்கு 'ஒளிரும் ஈரோடு', இலக்கிய நலத்திற்கு 'இலக்கியச் சுற்றம்', 'இலக்கியப் பேரவை' போன்ற பல அமைப்புக்கள் சிறப்புப் பணியாற்றுவது ஈரோடு.

அக்காலத்தில் செல்வம் என்று கருதப்பட்ட கால்நடை மிகுதியாலும், நீர் வளத்தாலும், நில வளத்தாலும் இரட்டரும், கங்கரும், சேரரும், சோழரும், பாண்டியரும், போசளரும், விசயநகராரும், உம்மத்தூர்த் தலைவர்களும், மதுரை நாயக்கர்களும், மைசூர் உடையாரும், ஐதரும்-திப்புவும், கிழக்கிந்தியக் கம்பெனியாரும் போட்டி போட்டுக் கொண்டு தங்கள் அதிகாரத்தின் கீழ் ஈரோடு பகுதியைக் கொண்டு வர விரும்பினர்.

தமிழகத்தைப் படை கொண்டு தாக்கிப் பணிய வைக்க வந்த அத்துணை அன்னியப் படை நாயகர்களும் புகுந்த மூன்று பெருவழிகளும் இம்மாவட்டத்தின் வடக்கு, மேற்கு எல்லைகளிலேயே உள்ளன. படையோடு வந்தவர்களும், அவர்களின் வருகையைத் தடுத்தவர்களும் நடத்திய பல்வேறு கடுமையான பெரும் போர்களினால் ஏற்பட்ட அழிவையும், கொள்ளையடிக்கப்பட்ட பெருஞ்செல்வ இழப்பையும், பெரும் துன்பத்தையும் ஈரோடு தாங்கியது.

3000 வீடுகளைக் கொண்டு முக்கிய வணிக மைய ஊரான ஈரோடு முற்றிலும் அழிக்கப்பட்டு ஆள்நடமாட்டம் இல்லாத 400 இடிந்த வீடுகளைக் கொண்டிருந்தது 1792ல்! அழிவிற்கு இது ஒரு சான்று.

மெல்ல மெல்ல உயிர் பெற்று இன்று நிமிர்ந்து வீறுநடை போடுகிறது ஈரோடு. அணுகுண்டு வெடிப்பிற்குப் பின் ஜப்பான் எழுச்சி பெற்றதை இதற்கு எடுத்துக் காட்டாகக் கூறலாம்.

காலம்தோறும் ஈரோடு பெற்ற பன்முக வளர்ச்சிச் செய்திகளையும், நிகழ்வுகளையும் விளக்கி விரிவாக எழுத முற்பட்டால் பல்லாயிரம் பக்கங்களாக விரியும்.

ஒரு சமயம் "நாமிருக்கும் நகரம்" என்ற தலைப்பில் நூல் எழுத அறிவித்தும் முயன்றும் அது நடைபெறவில்லை.

ஈரோட்டின் அனைத்துப் பள்ளிகளும் கலந்து கொண்ட கல்விப் பொருட்காட்சி ஒன்றில் ஈரோடு பற்றி "உங்கள் நகரைத் தெரிந்து கொள்ளுங்கள்" என்ற அரங்கு வைத்தபோது பார்வையாளர்கள் ஆர்வத்தை உணர முடிந்தது.

சென்னை, மதுரை, காஞ்சிபுரம் போன்ற பல ஊர்கள் பற்றிய நூல்கள் வெளி வந்துள்ளன.

கோயம்புத்தூர் பற்றி கோவை கிழார் சி.எம்.இராமச்சந்திரஞ் செட்டியார் "இதுவோ எங்கள் கோவை" என்ற தலைப்பில் நூல் எழுதியுள்ளார். "தெரிந்த கோவை தெரியாத கதைகள்" என்ற பெயரில் நண்பர் பாபு அவர்கள் ஒரு நூல் எழுதியுள்ளார்.

"தெரிந்த ஈரோடு தெரியாத செய்திகள்" என்ற தலைப்பில் இந்நூல் தொகுக்கப் பட்டுள்ளது. இவற்றில் தெரியாத செய்திகள் என்று சொல்லப்பட்ட செய்திகள் சில பலரும் அறிந்த செய்தியாக இருந்தாலும் செய்தியின் முக்கியத்துவம் கருதி நூலில் இடம் பெற்றுள்ளன.

பல ஆண்டுகளாகத் தொகுத்த செய்திகளில் ஒரு பகுதியே இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

இந்நூல் தொகுப்புச் செய்தி அறிந்ததும் ஈரோடு மாமரத்துப்பாளையம் சக்தி மசாலா நிறுவனங்களின் உரிமையாளர்கள் டாக்டர் பி.சி.துரைசாமி, டாக்டர் சாந்தி துரைசாமி ஆகியோர் நூல் வெளியீட்டுக்கு உதவி செய்வதாக அறிவித்து உரிய பொருள் உதவி செய்தனர்.

ஒரு நிறுவனம் நாடு, மக்கள் நலப் பணிகளில் எவ்வாறெல்லாம் ஈடுபடலாம் என்பதற்கு நாட்டிலேயே எடுத்துக்காட்டாக விளங்கும் நிறுவனம் சக்தி மசாலா. அவர்கள் உதவியைப் பெரும்பேறாகக் கருதுகின்றேன். அவர்கள் பேருதவியால் நான் வெளியிடும் மூன்றாவது நூல் இது. அவர்கட்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அன்பான அவர்கள் அணிந்துரைக்கும் நன்றி.

என் பணிகளைப் பாராட்டிச் சிறப்பான அணிந்துரை வழங்கிய ஈரோடு மாவட்ட ஆட்சியர் முனைவர் எஸ். பிரபாகர் இ.ஆ.ப., அவர்கட்கு என் நன்றி.

இந்நூலைப் பொதுவாக வரலாற்று ஆர்வலர்களும், ஈரோட்டுப் பொதுமக்களும், குறிப்பாக இளைஞர்களும், மாணவர்களும் ஆதரிப்பார்கள் என எண்ணுகிறேன்.

இந்நூல் வெளிவருவதில் என் குடும்பத்தார் அனைவரும் பேரார்வம் காட்டினர்.

இந்நூலைச் சிறந்த முறையில் குறித்த காலத்தில் வடிவமைத்து அச்சிட்டு உதவிய 'வாழ்க வளமுடன் ஆப்செட் பிரிண்டர்ஸ்' உரிமையாளர், அச்சக அலுவலர்கள் அனைவருக்கும் என் நன்றி உரியதாகுக.

அன்புடன்,
வரலாற்றுப் பணியில்,
செ.இராசு

ஈரோடு
10.09.2017

பொருளடக்கம்

1.	கொங்கு நாட்டின் மையப்புள்ளி ஈரோடு	1
2.	வடகொங்கு நாட்டில் ஈரோடு	2
3.	பூந்துறை நாட்டில் ஈரோடு	3
4.	காஞ்சித் துண்டத்தில் ஈரோடு	4
5.	கட்டமனையின் தலைநகர் ஈரோடு	4
6.	நொய்யல் வடக்கு மாவட்டத்தில் ஈரோடு	4
7.	கோவை மாவட்டத்தில் ஈரோடு	5
8.	பெருந்துறைத் தாலூகாவில் ஈரோடு	5
9.	தாலூகா ஆனது ஈரோடு	6
10.	ஈரோடு : எத்துணை பெயர்கள் !	7
11.	ERODE - ERODU ஆகுமா ?	10
12.	கி.பி. 1800ல் ஈரோடு	11
13.	ஈரோடு மாவட்டம் ஆனது	13
14.	மாவட்டம் ஆகும் முன்பே மாவட்ட நிறுவனங்கள்	15
15.	ஈரோட்டுப் போர்கள்	16
16.	மூக்கறுப்புப் போர்	17
17.	ஆதி அம்மன்	18
18.	தொல்பழங்காலச் சின்னம் - முது மக்கள் தாழிகள்	19
19.	நடுகற்கள்	20
20.	காணக் கிடைக்காத கழுமரம்	21
21.	ஈரோடு கோட்டை	22
22.	அகழி மேடாகி அகில்மேடு வீதி	22
23.	கல்வெட்டுகள்	23
24.	செப்பேடுகள்	27
25.	பரசுராமன் சிலை	28
26.	முதல் சோழர் கோயிலில் வெண்ணைக் கூத்த நாயனார்	29
27.	திருத்தொண்டீசுவரர்	30
28.	சிவன் எப்படித் தொண்டீசன் ஆகலாம் ?	32
29.	பள்ளிகொண்ட பெருமாள்	33
30.	தெப்பக்குளத்தில் மைதானம்	34
31.	பக்தியில் சிறந்த பண்டைய மகளிர்	35
32.	பெண்டிர் பெற்ற பெருமைப் பெயர்கள்	36
33.	கிருஷ்ணன் கோயில்	36
34.	அகத்தியர் ஈரோடு வந்தார்	37
35.	இராவணன் முன்னோரின் லிங்கப் பிரதிஷ்டை	38
36.	கரிகாலன் கட்டிய கோயில்	39

37. பொன்மழை பூமழை பெய்தது 40
38. அழியாமல் தொடரும் கொடை 40
39. தர்காவிற்கு இந்துக்கள் கொடை ! 41
40. வாகீச பக்த சமாஜம் - அப்பர் சுவாமிகள் மடம் 42
41. ஈரோடு நகரம் ஆனது 43
42. ஈரோடு மாநகரம் ஆனது 43
43. ஊருக்குள் நுழைந்தால் வரி 44
44. நாய்க்கும் வரி 45
45. சாதி பார்த்தால் அனுமதியில்லை 46
46. பிரப் ரோடு ஏன் பெயர் மாறவில்லை ? 47
47. பிரப் நினைவு தேவாலயம் 49
48. பாப் புலி : பாப்லி 50
49. கம்பெனி வழங்கிய மின்சாரம் 51
50. தண்ணீர்த் தொட்டிகள் 51
51. ஈரோடு வாக்காளர் சங்கம் 52
52. சுயேச்சை அரசியல் சங்கம் 52
53. தேசிய உணர்வு 53
54. இங்கிலாந்து மன்னர் முடிசூட்டு விழா 54
55. ஈரோட்டில் காந்தியடிகள் 55
56. காந்தியடிகள் நினைவு 57
57. பந்தலைப் பிரித்த நேருஜி 58
58. பாரதியார் வருகை 59
59. தியாகராயர் சதுக்கம் 61
60. அலி சௌக் 62
61. விடுதலை வேண்டிய அமைப்புக்கள் 63
62. 17ஆம் நூற்றாண்டு நாடகம் 64
63. ஈரோட்டார் இதழ்கள் 65
64. ஈரோட்டுப் பெயரில் இதழ்கள் 68
65. 19ஆம் நூற்றாண்டு இலக்கியம் 69
66. இலக்கியம் பெற்ற அரசுப் பணியாளர்கள் 69
67. வாசக சாலைகள் 72
68. நூல் வெளியீட்டகங்கள் 74
69. திண்டல் புதூர் 76
70. முத்து வீரப்ப நாயக்கர் சத்திரம் 78
71. ஜெயமுரி (செயமுரி) எது ? 79
72. அக்கிரகாரங்கள் ! 80
73. மங்கல கிரியும் மங்கலமும் 81
74. காலப்பள்ளி ஆன லக்காபுரம் 81
75. கங்காபுரம் பழனியம்மாள் 82

76. "பேச்சுப் பாறையான பேய்ச்சி பாறை' 82
77. சந்திரமதி முதலியார் மடம் 83
78. காவிரிக் குடிநீர் 84
79. வ.உ.சி. பூங்கா வரலாறு 85
80. காலிங்கராயன் அமைத்த 'தாவுதுறை'க் குழு 88
81. காலிங்கராயனுக்கு கொங்கலம்மன் தந்த அனுமதி 89
82. காரைவாய்க்காலும் கோணவாய்க்காலும் 90
83. 13 ஆம் நூற்றாண்டுப் பாலம் 91
84. உரிமை பெற்ற மக்கள் 92
85. பாம்புக் கோயில் 92
86. தெய்வமான காலிங்கராயன் 93
87. தேர்தலில் வென்ற பெரியார் 94
88. நகர விரிவாக்கம் செய்த பெரியார் 95
89. பெரியார் நடத்திய இந்திப் பள்ளி 95
90. குடி அரசும் விடுதலையும் 96
91. முதல் ஆலயப் பிரவேசம் - 1929 98
92. வெங்கட நாயக்கர் தர்ம வைத்தியசாலை 99
93. பெண்ணுரிமை பேணிய பெண்மணி 100
94. காந்தியடிகள் பாராட்டிய ஈரோட்டுப் பெண்கள் 101
95. மாமியாரும் மருமகளும் செய்த திருப்பணி 102
96. பெரியார் மண்டியில் சமத்துவம் 104
97. அண்ணாவின் முதல் நாடகம் 105
98. யார் இந்தப் பன்னீர்செல்வம் ? 107
99. அன்றைய புலனாய்வுச் சோதனை 108
100. புயலும் பூகம்பமும் 109
101. பூங்காக்கள் 110
102. மறைந்த ஏரிகள் 112
103. படகுப் போக்கு வரத்து 113
104. முதல் ரயில் ஓடியது 113
105. பழைய இரயில் நிலையம் 114
106. கல்விப் பணியில் மகாஜனங்கள் 115
106.அ.பெயர் மாறிய கல்லூரி 117
107. சாதிப்பெயர் நீக்கிய தெரு 118
108. "டெக்ஸ்வேலி' 119
109. ஈசுவரன் தந்த கீழ்பவானித் திட்டம் 120
110. பொருட்காட்சி எரிந்தது 121
111. 13ஆம் நூற்றாண்டில் இரண்டு பெரிய சந்தைகள் 122
112. ஈரோடு நகர சுதந்திரப் போராட்ட வீரர்கள் 123

1 கொங்கு நாட்டின் மையப்புள்ளி ஈரோடு



2 வடகொங்கு நாட்டில் ஈரோடு

நமது தமிழ்நாடு சேர, சோழ, பாண்டிய நாடுகளுடன் கொங்கு நாட்டையும், தொண்டை நாட்டையும் சேர்த்து ஐந்து பிரிவாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

இதனை "வியன் தமிழ்நாடு ஐந்து" என்று தண்டியலங்கார மேற்கோள் பாடலும், "தமிழ்மண்டிலம் ஐந்து" என்று திருமூலரின் திருமந்திரமும் கூறுகிறது.

வடக்கே பெரும்பாலை, தெற்கே பழனிமலை, கிழக்கே குளித்தலை, மேற்கே வெள்ளியங்கிரி ஆகிய எல்லைகளைக் கொங்குநாடு கொண்டுள்ளது.

'வடக்குப் பெரும்பாலை வைகாவூர் தெற்கு
குடக்குப் பொருப்புவெள்ளிக் குன்று - கிடக்கும்
களித்தண் டலைமேவும் காவிரிசூழ் நாடு
குளித்தண் டலையளவு கொங்கு'

என்ற பழம்பாடல் இதனை விளக்கும்.

வடக்கே தலைமலை என்றும், தெற்கே பன்றிமலை என்றும், கிழக்கே கொல்லிமலை என்றும், மேற்கே வாளையாறு என்றும் கூறும் ஆவணங்களும் உள்ளன.

கொங்கு நாட்டை கீழ்கொங்கு, தென் கொங்கு, வடகொங்கு, மேல் கொங்கு என்று நான்கு பகுப்பாகப் பிரிப்பர். காவிரிக்குக் கிழக்கில் உள்ள கீழ்கொங்கு நாட்டை மழ கொங்கு என்றும் கூறுவர்.

நொய்யல் ஆற்றை மையமாக வைத்து தென் கொங்கு, வட கொங்கு என்று இரண்டாகப் பிரிப்பர். வடகொங்கில் வானியாற்றில் என்பது ஒரு பாடல் பகுதி.

சில காலங்களில் தென்கொங்கு, வடகொங்கு என இரு பிரிவுகளே மிகவும் சிறந்து விளங்கின.

தென்கொங்கு நாட்டை வீரகேரளரும், வட கொங்கு நாட்டை கொங்குச் சோழரும் ஆட்சி புரிந்தனர்.

கொங்குச் சோழர்கள் வீர கேரளரை வென்று 'இரு கொங்கும் ஆண்ட' என்ற சிறப்பைப் பெற்றனர்

வட கொங்கு நாட்டின் மிக முக்கிய ஊராக ஈரோடு விளங்கியது.

சில கல்வெட்டுகள் வட கொங்கு நாட்டில் அடங்கிய உள்நாடுகளைப் பட்டியலிட்டுக் கூறுகின்றன.

'கொங்கதின் மண்ணே சுகம் தரும் அலால் - வேறு
கோருவோர் அறிவு குறையும்'
கொற்றவேல் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார்
பாழையகோட்டைப் பட்டக்காரர்

3 பூந்துறை நாட்டில் ஈரோடு

கொங்கு நாட்டை நிருவாக வசதிக்காக 24 நாடுகளாகப் பிரித்தனர். அவற்றுள் முதல் நாடாகக் கூறப்படுவது பூந்துறை நாடு. மக்கள் கொங்கு நாட்டில் முதலில் புகுந்து உறைந்த (வசித்த) நாடு ஆதலின் பூந்துறை எனப் பெயர் பெற்றது என்பர். சங்க காலத்தில் 'புன்றுறை' என்ற குறுநில வேளிர் தலைவர் ஆட்சி புரிந்ததால் பூந்துறை எனப் பெயர் பெற்றது என்றும் கூறுவர்.

தெற்கே நொய்யலாற்றையும் (காஞ்சி). வடக்கே பவானி ஆற்றையும் (வானி). கிழக்கே காவிரியாற்றையும் (பொன்னி). மேற்கே சென்னிமலையையும் எல்லையாக உடையது பூந்துறை நாடு. காவிரிக்கு மேற்கே உள்ள காரணத்தால் மேல்கரைப் பூந்துறை நாடு என்பர்.

பூந்துறை நாட்டில் கீழ்க்கண்ட 32 ஊர்கள் உள்ளன. அவை

பூந்துறை	காளமங்கலம்	அறச்சலூர்	பேரோடு
வெள்ளோடை	குழாநிலை	விளக்கேத்தி	சித்தோடு
நசியனூர்	கிழாம்பாடி	ஈஞ்சம்பள்ளி	திண்டல்புதூர்
எழுமாத்தூர்	முடக்குறிச்சி	சத்திமங்கலம்	இலவமலை
பிடாரியூர்	அநுமன்பள்ளி	சேமூர்	திருவாச்சி
ஈங்கூர்	பழமங்கலம்	மங்கலம்	பனயம்பள்ளி
பெருந்துறை	குலவிளக்கு	வீரகநல்லூர்	ஓடாநிலை
சாத்தம்பூர்	காகம்	ஈரோடு	முருங்கைத்தொழு

இதனை ஊர்த்தொகைப் பாடலும் கூறுகிறது.

பூந்துறைசை வெள்ளோடை நசியனூர் எழுமாதை
புகழ்சேர் பிடாரிநகரம்
பூங்கமழும் ஈங்கியூர் பெருந்துறை சாத்தம்பூர்
பொன்காள மங்கலம் அதும்

ஆய்ந்ததமிழ் கூறும் குழாநிலை கிழாம்பாடி
ஆண்மைகொள் முடக்குறிச்சி
அநுமநகர் பழமங்கை குலவிளக்குக் காகம்
அறச்சலூர் விளக்கேத்தியும்

வேந்தர்மகிழ் ஈஞ்சநகர் சத்திமங் கலம்அதும்
மிக்கசே மூர்மங்கலம்
வீரநகர் ஈரோடு பேரோடு சித்தோடு
மிக்கான திண்டல்புதூர்

சேர்ந்துமழை பெய்ந்திடும் இலவமலை திருவாச்சி
திகழ்பனசை ஓடாநிலை
தென்முருங் கைத்தொழுவு முப்பத்தி ரண்டூர்
சிறந்தபூந் துறைசை நாடே

என்பது ஊர்த்தொகைப்பாடல்.

4 காஞ்சித் துண்டத்தில் ஈரோடு

பூந்துறை நாட்டின் வடமேற்குப் பகுதியும். காஞ்சிக் கூவல் நாட்டின்தென்கிழக்குப் பகுதியும் இணைந்து "காஞ்சித் துண்டம்" என்ற பெயர் வழங்கப்பட்டது. சில கல்வெட்டுகள் ஈரோடு 'மேல்கரைப் பூந்துறை நாட்டுக் காஞ்சித்துண்டத்து ஈரோடு' என்கிறது. சில காலம் மட்டுமே இப்பிரிவு இருந்தது.

5 கட்டமனையின் தலைநகர் ஈரோடு

கொங்கு 24 நாடுகளும் நான்கு கட்டமனை ஆகப் பிரிக்கப்பட்டது. கட்டமனையை மாகாணம் என்று கூறலாம். ஈரோடு ஒரு கட்டமனையின் தலைநகரம். ஈரோடு கட்டமனைக்கு காங்கயம் பல்லவராயர்தலைவராக இருந்துள்ளார். இப்பிரிவு நீண்ட காலம் இயங்கவில்லை.

6 நொய்யல் வடக்கு மாவட்டத்தில் ஈரோடு

திப்புசுல்தான் 4.5.1799இல் நடைபெற்ற நான்காம் மைசூர்ப் போரின்இறுதியில் போர்க்களத்தில் வீர மரணம் அடைந்தார். உடனடியாக ஈரோடு மாவட்டப் பகுதி ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி வசமானது.

கோவை மாவட்டப் பகுதியை நொய்யலாற்றை மையமாக வைத்து 1.7.1799இல் "நொய்யல் வடக்கு மாவட்டம்" "நொய்யல் தெற்கு மாவட்டம்" எனப் பிரித்தனர். வடக்குப் பகுதிக்குப் பவானியையும், தெற்குப் பகுதிக்குத் தாராபுரத்தையும் தலைநகர் ஆக்கினர்.

நொய்யலுக்கு வடக்கே இருந்த காரணத்தால் கோவை நகரம், கொள்ளேகாலம் கூடப் பவானி அதிகாரத்திற்கு உட்பட்டிருந்தது. பவானிக்கு கேப்டன் மேக்ளியாட் என்பவரையும், தாராபுரத்திற்கு ஹர்டிஸ் என்பவரையும் ஆட்சியராக நியமித்தனர். 2.5.1802 முதல் பவானிக்கு வில்லியம் கேரோ ஆட்சியர் ஆனார்.

7 கோவை மாவட்டத்தில் ஈரோடு

பவானியும், தாராபுரமும் நிர்வாக வசதிக்கு ஏற்ற இடமாக இருக்கவில்லை என்று எண்ணிய கம்பெனி நிர்வாகத்தால் பவானி-தாராபுரம் பகுதிகளை இணைத்து ஒரே மாவட்டம் ஆக்கி 24.11.1804 அன்று கோயம்புத்தூரைத் தலைநகராகக் கொண்டு மாவட்டம் அமைக்கப்பட்டது. பவானியில் கலெக்டராக இருந்த வில்லியம் கேரோ கோவை கலெக்டராக நியமிக்கப்பட்டார்.

புதிய கோயம்புத்தூர் மாவட்டத்தில் கீழ்க்கண்ட 15 தாலூக்காக்கள் இருந்தன.

1) அந்தியூர்
2) ஈரோடு
3) கரூர்
4) காங்கயம்
5) கொள்ளேகால்
6) கோயம்புத்தூர்
7) சத்தியமங்கலம்
8) செங்கணாச்சேரி
9) சேவூர்
10) டணாயக்கன் கோட்டை
11) தாராபுரம்
12) நீலகிரி
13) பல்லடம்
14) பெருந்துறை
15) பொள்ளாச்சி

பின் ஈரோடு தாலூகா தகுதி இழந்து பெருந்துறையோடு இணைக்கப்பட்டது. 1911 வரை கரூர் கோயம்புத்தூர் மாவட்டத்தில் இருந்தது.

8 பெருந்துறைத் தாலூகாவில் ஈரோடு

24.11.1804 அன்று தனித் தாலூகாவாக ஆக்கப்பட்ட ஈரோடு சிறிது காலத்தில் தாலூகா தகுதியை இழந்து பெருந்துறைத் தாலூகாவுடன் இணைக்கப்பட்டது. இந்நிலை 1868 வரை நீடித்தது. பல ஓலை ஆவணங்கள் "கோயம்புத்தூருச் சில்லா பெருந்துறை தாலூகாவுக்குச் சேர்ந்த ஈரோடு கிராமம்" என்று கூறுகின்றன.

பெருந்துறை பல சாலைகள் இணையும் மைய ஊராக இருந்ததும், கோட்டை இருந்ததுமே இதற்குக் காரணம். இன்றும் தேசிய நெடுஞ்சாலை பெருந்துறை வழியாகவே செல்கிறது.

'இந்த தாலூகாவில் 800 தறிகள் உள்ளன. பெருந்துறையில் 118 வீடுகள் உள்ளன. 24 வீடுகள் பிராமணருடையவை. மண் கோட்டை ஒன்றுள்ளது. உள்ளே எவரும் இல்லை. பல வீடுகள் இடிந்து கிடக்கின்றன'.

– பிரான்சிஸ் புக்கானன் (6.11.1800)

9 தாலூகா ஆனது ஈரோடு

பழமை மாறாத ஈரோடு தாலூகா அலுவலகம்

சேலம்- போத்தனூர் இரயில்பாதை ஈரோடு வழியாக 12.5.1862 முதல் இயங்கியது. ஈரோடு-திருச்சி இரயில்பாதை 1.1.1868 முதல் இயங்கியது. ஈரோடு இரயில்வே சந்திப்பு ஆனது. அதனால் 1868 முதல் ஈராடு தாலூகா ஆனது. பெருந்துறை தாலூகா நீக்கப்பட்டு ஈரோட்டுடன் இணைக்கப்பட்டது. பின்னர் பெருந்துறை தனித் தாலூகா ஆனது.

நீண்ட நாள் கொடுமுடி தனித்தாலூக்காவாக ஆக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை இருந்தது. அண்மையில் ஈரோடு தாலூகாவிலிருந்து பிரிக்கப்பட்டு கொடுமுடி. மொடக்குறிச்சி தனித் தாலூகாவாக அமைக்கப்பட்டது. ஈரோடு தாலூகா அலுவலக வளாகத்தில் கிளைச் சிறைச்சாலை உள்ளது.

நொய்யல் வடக்கு மாவட்டத் தலைமையிடம் (பவானி)

10 ஈரோடு : எத்துணை பெயர்கள் !

1) ஈரோடை 2) ஈரோடு

3) மயிலை 4) உறந்தை

5) மறந்தை 6) புறந்தை

7) கபாலபுரி 8) மத்யபுரி

9) நட்டூர் 10) திருவரங்கம்

11) இருங்கோழி 12) மூவேந்த சோழச் சதுர்வேதமங்கலம்

என்று பலபெயர்களால் பலரால் பலகாலத்தில் ஈரோடு குறிக்கப்பட்டுள்ளது. அதற்குக் காரணம் பல கூறுகின்றனர்.

இரண்டு ஓடை - ஈரோடை

'பூந்துறைப் புராணம்' பாடிய காளியண்ணக் கவிராயர் 32 ஊர்களைக் கொண்ட பூந்துறை நாட்டில் ஓடைகளால் பெயர்பெற்ற ஊர்கள் நான்கு என்று கூறி அவற்றை ஈரோடை, பேரோடை, சிற்றோடை, வெள்ளோடை என்று வரிசைப் படுத்துகிறார். இரண்டு ஓடை - ஈரோடை; பெரிய ஓடை - பேரோடை, சிறிய ஓடை - சிற்றோடை, வெண்மை ஓடை - வெள்ளோடை என்பது அவர் கருத்து.

ஆனால் பழைய ஆவணங்களான கல்வெட்டு, செப்பேடு, ஓலைப்பட்டயங்களில் ஒன்றில் கூட 'ஈரோடை' என்று எங்கும் குறிக்கப் பெறவில்லை. எல்லாவற்றிலும் ஈரோடுதான் இடம் பெற்றுள்ளது. சிற்றோடையை(சித்தோடு) 'சிற்றில் ஓடு' என்றே ஆயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட வள்ளிஎறிச்சில் வட்டெழுத்துக் கல்வெட்டுக் கூறுகிறது.

ஈரோட்டில் இரண்டு ஓடை எவை ? அவை ஈரோட்டின் மையப்பகுதியில் ஓடுகின்ற 'ஈரோட்டின் கூவம் பெரும்பள்ளமும்', (சூளை) பெரிய அக்கிரகாரத்தின் எல்லையில் ஓடும் பிச்சைக்காரன் பள்ளமும்தான்.

புராணப் பெயர்கள்

புராணச் செய்திகள் அடிப்படையில் ஈரோட்டிற்குப் பல பெயர்கள் கூறப்படுகின்றன. தனிப்பாடல் ஒன்றில்

"தரணிபுகழ் உயர்மறந்தை புறந்தை என்ற

தகவுடைய மயிலை ஈரோடு பெற்றீர்"

என்ற தொடர் வருகிறது.

மயிலை

கைலாயத்தில் சிவபெருமான் மகாமந்திரப் பொருளை உபதேசம் செய்து கொண்டிருந்தார்.

பார்வதி தேவியோ மகாமந்திரப் பொருளைக் கவனிக்காமல் சிவபெருமான் கழுத்தில் இருந்த கருநீல கண்டத்தைப் பார்த்து இரசித்துக் கொண்டிருந்தார். அதைக்கண்ட சிவபெருமான் கோபித்து அம்மையே! நீ மகாமந்திரப் பொருளை அவமதித்தாய். அதனால் நீ பெண் மயில் வடிவு கொண்டு கொங்கு நாட்டில் ஈரோட்டில் வாழ்ந்து என்னை வணங்கிக் கொண்டிருப்பாயாக. உன் பணிவிடையையும் தவத்தையும் கண்டு உரியகாலத்தில் நான் பாராட்டி ஆண் மயில் வடிவெடுத்து உன்னை ஆட்கொள்வோம் என்றாராம்.

பார்வதி மயில் வடிவெடுத்துத் தங்கியதால் இவ்வூருக்கு மயிலை என்று பெயராயிற்றாம்.

4.2.1918 அன்று கொங்குநாட்டுப் பெரும்புலவர் தி.அ.முத்துசாமிக்கோனார் அவர்கள் தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதய்யர் அவர்கட்குக் கடிதம் ஒன்றை எழுதினார். அதில் கொங்குநாட்டில் மயிலை என்ற ஊர் இருக்கிறதா என்று வினவிய நினைவு இருக்கிறது. ஈரோட்டுக்குப் பழைய பெயர் மயிலை. அந்தக் கோயில் பூஜாந்தரத்தில் தாசிகள் பாடும் அம்மானைப் பாடல்களில் மயிலை என்று அவ்வூருக்குப் பெயர் வருகிறது என்று எழுதியுள்ளார்.

பெருந்துறையை அடுத்துள்ள சீனாபுரத்தில் கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பவணந்தி முனிவர் நன்னூல் இலக்கணம் இயற்றினார். அவர் சமகாலத்தவரான மயிலை நாதர் நன்னூலுக்கு உரை எழுதியுள்ளார். அவர் மயிலை என்ற பெயருடைய ஈரோட்டினர் என்கிறார் கோனார்.

மறந்தை

படைக்கும் தொழிலை மேற்கொண்ட பிரமதேவன் அத்தொழிலை மறந்து உறங்கிக் கொண்டிருந்தானாம். உலகில் படைப்புத் தொழில் நின்று விட்டது. காளிதேவி பிரமனின் ஐந்து தலைகளில் ஒன்றைத் துண்டித்தாராம். ஐந்து முகங்களையுடைய பிரம்மா-நான்முகன் ஆனார்.

பிரமன் தன் படைப்புத் தொழிலை மறந்து உறங்கிய இடம் ஈரோடாம். அதனால் ஈரோட்டுக்கு மறந்தை என்று பெயர் ஆயிற்றாம். காளிதேவி பிரமனின் தலையை ஈர்த்ததால் ஈர்த்த + ஓடு ஈரோடு ஆயிற்றாம்.

உறந்தை

உறந்தை என்பது உறையூரின் மறுபெயர். உறையூர் சோழர்களின் உள்நாட்டுத் தலை நகர்களில் ஒன்று. அவர்கள் தங்கள் கோநகர் உறந்தையின் (உறையூர்) பெயரை ஈரோட்டிற்கும் வைத்தனராம். அதனால் ஈரோட்டுக்கும் உறந்தை என்று பெயர் ஆயிற்று.

புறந்தை

சென்னிமலை நா.ம.கி. கருப்பண முதலியார் தம் சென்னிமலைப் புராணப் பதிப்பில் ஈரோட்டிற்குப் புறந்தை என்ற பெயரைக் குறிக்கின்றார்.

கபாலபுரி

இரண்டு ஓடையை இருமண்டையோடு என்று பொருள் கொண்டு ஈரோட்டுக்கு கபாலபுரி என்று பெயரிட்டழைத்தனர் சிலர் (கபாலம்-மண்டையோடு). கங்கையாறு தலையில் உள்ளதால் சிவன் மண்டையோடு ஆர்த்திர கபாலம் ஆயிற்று.

மத்தியபுரி

ஈரோடு பெரும்பள்ளம், பிச்சைக்காரன் பள்ளம் என்ற இரண்டு பள்ளங்களுக்கு (ஓடைகளுக்கு) மத்தியில் இருப்பதால் ஈரோட்டுக்கு மத்தியபுரி என்ற பெயரை ஓர் இலக்கியம் கூறுகிறது.

திருவரங்கம்

இரண்டு ஆறுகட்கு இடைப்பட்ட நிலப்பகுதியை "அரங்கம்" என்பர். 'அரங்கம் என்பது ஆற்றிடைக்குறை' என்பர் சான்றோர். காவிரி-கொள்ளிடம் இரண்டு ஆறுகட்கு உட்பட்ட பகுதி திரு அரங்கம் எனப்பட்டது.

"ஆறிரண்டும் காவேரி
அதன்நடுவே சீரங்கம்
சீரங்க நாதர்தந்த
செல்வமகன் நீதானோ"

என்பது ஒரு தாலாட்டுப் பாடல்பகுதி.

ஈரோட்டின் இருபுறமும் இரண்டு ஓடைகள் ஓடுகின்றன. ஓடை என்பதும் அளவில் சிறிய ஆறுதானே. இரண்டு ஓடைகட்கு உட்பட்ட ஈரோடும் ஒரு வகையில் திருவரங்கம் தானே.

ஒரு பாடல் மேற்கண்ட கருத்தை உட்கொண்டு" இந்த நகரே திருவரங்கம்" என்று கூறுகிறது.

சிலர் ஈரோட்டை இடை அரங்கம் என்பர். மைசூர் சீரங்கப்பட்டணம் தலை அரங்கம். திருச்சி திருவரங்கம் கடையரங்கம். இரண்டு அரங்கங்கட்கு இடைப்பட்ட ஈரோடு இடையரங்கம் ஆயிற்று.

இருங்கோழி

திருப்பூர் பழனிசாமிப்புலவர், உறையூருக்குக் கோழி, கோழியூர் என்ற பெயர்கள் உண்டு. உறந்தை என்ற பெயரைக் கோழியோடு தொடர்புபடுத்தி இருங்கோழி என்பது ஈரோட்டுப் பெயர். இருங்கோழி ஈரோடு ஆயிற்று என்பார். அதே போல் வெண்கோழி (வெள்ளோடு) பெருங்கோழி (பேரோடு) சிறுங்கோழி(சித்தோடு) என்ற பெயர்களையும் தொடர்புடைய பெயராகக் கூறுகிறார்.

சைவர்கள் கூறுவது

தானே முழு முதற்கடவுள் என்று பிரமன் செருக்குற்ற போது சிவபெருமானால் ஒரு தலை துண்டிக்கப்பட்டுச் சிதைவுற்றது. தலையின் ஈரமான பகுதி விழுந்தது ஈரோடு. (பெரிய பகுதி பேரோட்டிலும், சிறிய பகுதி சித்தோட்டிலும், வெண்மைப்பகுதி வெள்ளோட்டிலும் விழுந்ததாம்).

வைணவர்கள் கூறுவது

மது, கைடபர் ஆகியோர் விஷ்ணுவின் வாயில் காவலர்கள். ஒரு முறை தேவர்கள் பலர் ஒன்று கூடி விஷ்ணுவை தரிசிக்கச் சென்றனர். தேவர் கூட்டத்தை மது, கைடபர்தடுத்து நிறுத்தினர். உள்ளே அனுமதிக்க மறுத்தனர். தேவர்கள்' பிடிசாபம்' என்று மது கைடபர்

தலைகள் வெடித்து ஈரமான ஓடு வந்து விழுந்த இடம் ஈரோடு ஆயிற்று என்பர். இதே போல் பெரிய ஓடு விழுந்த இடம் பேரோடு ஆயிற்று என்றும். சிறிய ஓடு விழுந்த இடம் சித்தோடு ஆயிற்று என்றும். வெண்மையான ஓடு விழுந்து இடம் வெள்ளோடு ஆயிற்று என்றும் கூறுவர்.

மூவேந்த சோழச் சதுர்வேதமங்கலம்

கஸ்தூரி ரங்கநாதர் கோயில் கல்வெட்டில் 'ஈரோடான மூவேந்த சோழச் சதுர்வேத மங்கலம்' என்ற தொடர் வருகிறது. நான்கு வேதங்கள் ஓதக்கூடிய அந்தணர்கட்குக் கொடையாக அளிக்கப்படும் ஊர்தான் சதுர்வேதமங்கலம். சோழர் காலத்தில் அந்தணர் கொடைபெற்றுள்ளனர்.

ஈரோட்டிலும் ஈரோட்டைச் சுற்றியும் பல அந்தணர் குடியிருப்புக்கள் முன்பு இருந்தன என்று பல ஆவணங்களால் தெரிகிறது.

பேகம்பூர்

டணாயக்கன் கோட்டைக்கு ஹ்ஸைனாபாத் என்றும். சத்தியமங்கலத்திற்கு சலாமாபாத் என்றும். அந்தியூருக்கு அஹமதாபாத் என்றும். காங்கயத்திற்கு குரேமாபாத் என்றும் பெயரிட்ட திப்புசுல்தான் ஈரோட்டிற்கும் பேகம்பூர் என்று பெயரிட்டார்.

இவை அனைத்தும் வழக்கில் இல்லை.

ERODE - ERODU ஆகுமா ?

7.8.11.1800 அன்று ஃபிரான்ஸ் புக்கானன் ERODU என்றே எழுதினார்

தாமஸ் மன்றோ குறிப்பில் HERROAD

கம்பெனி வரை படத்தில் EROAD

மக்கென்சி ஆவணத்தில் IRODU

இன்று ERODE

ஈரோடு எப்போது சரியான உச்சரிப்பில் ERODU ஆகும் ?

12

கி.பி. 1800ல் ஈரோடு



கம்பெனியாட்சியில் இந்தியாவின் கவர்னர் ஜெனரல் மார்க்ஸ் வெல்லெஸ்லிபிரபு. பிரான்சிஸ் புக்கானன் என்பவரிடம் சென்னை மாநிலப் பகுதியில் பயணம் செய்து அறிக்கை தருமாறு கேட்டுக் கொண்டார்.

மலபாரை நோக்கிய தம் பயணத்தில் புக்கானன் 1800 ஆம் ஆண்டு நவம்பர் 7. 8 தேதிகளில் ஈரோட்டில் தங்கியிருந்து பல குறிப்புக்கள் சேகரித்தார். அன்றைய ஈரோட்டைப் புத்கானன் வார்த்தைகளிலேயே காணலாம்.

1800 நவம்பர் 7

நான் எட்டு மலபார் மணிப்பயணம் சென்று ஈரோடு அடைந்தேன். இவ்வூர் EROAD என்றே கம்பெனி நிலப்படங்களில் குறிக்கப்பட்டுள்ளது (புக்கானன் ERODU என்கிறார்).

ஈரோட்டில் ஒரு மண்கோட்டை உள்ளது. ஒரு பட்டாளம் சிப்பாய்கள் இருக்கிறார்கள். இந்தப் பக்கம் நிறையப்பேர் பட்டாளத்தில் சேர்கிறார்கள். அண்மையில் சிப்பாய்களின் படியை கம்பெனி உயர்த்தியதிலிருந்து திப்புவின் வீரர்கள் பலர் பட்டாளத்தில் சேர முன்வந்துள்ளனர்.

ஐதர்அலி ஆட்சியில் ஈரோட்டில் 3000 வீடுகள் இருந்தன. திப்புவின் ஆட்சியில் அது மூன்றில் ஒரு பங்காகக் குறைந்தது. ஜெனரல் மெடோசின் படையெடுப்பின் போது இவ்வூர் முற்றிலும் அழிந்துவிட்டது. இப்போது ஈரோடு உயிர்பெற்று வருகிறது. இப்போது 400 வீடுகள் உள்ளன. நிலமை திருந்தியும் செழிப்பாகவும் இருப்பதால் விரைவில் ஈரோடு பழைய புகழை அடையும். இது நடுநாயகமாய் இருப்பதால் பட்டாளத்திற்குத் தகுந்த இடம்.

கைக்கோளர், சேடர், பறையர் எனச் சுமார் 2000 நெசவாளர்கள் இந்த வட்டாரத்தில் உள்ளனர்.

பவானியிலிருந்து ஈரோடு வழியே வரும் வாய்க்கால் மிகவும் நேர்த்தியான வேலைப்பாடு. ஈரோட்டில் ஒரு ஓடையைக் கடப்பதற்காக ஒரு பாலம்வழியே வாய்க்கால் செல்கிறது. நல்ல செல்வமும் செல்வாக்கும் மிக்க காலிங்கராயர் என்ற வேளாளர் இந்த வாய்க்காலை வெட்டினார். இது சுமார் 400 ஆண்டுகட்கு முன்பு நடந்தது. தான் முடித்த மிகப் பெரிய வேலைக்கு அவர் எந்தவிதமான நன்றிக் கடனையும் ஏற்றுக் கொள்ளவில்லை.

1800 நவம்பர் 8

இன்றும் ஈரோட்டிலேயே தங்கித் தாசில்தாரிடம் பல செய்திகளைக் கேட்டறிந்தேன். ஈரோடு தாசில்தார் நல்ல புத்திசாலிப் பிராமணர்.

மிளகு என்ற நெல்ரகம் 8 மாதப் பயிர் நெல். விதைக்கவும் படுகிறது. ஒரு ஆண்டில் இதற்கப்புறம் வேறு பயிர் கிடையாது. இரண்டு போகம் விளையும் நிலங்களும் உள்ளன. 5 மாதப் பயிர் அன்னதானம் சம்பா, தேவராயன் சம்பா, செந்தலை போன்ற நெல் ரகம் பயிரிடப்படுகிறது.

திப்புவின் ஆட்சியில் தென்னையும், வெற்றிலையும் இருந்து அழிந்துவிட்டன. இப்போது 20000 தென்னையும் 100000 பனைமரமும் வைக்க ஏற்பாடாகியுள்ளது. வெட்டவெளித் தோற்றத்தை மாற்றவும், வீடுகள் கட்டவும் இவை பயன்படும்.

காலிங்கராயன் அணை

13

ஈரோடு மாவட்டம் ஆனது



1974ல் "மாநில நிர்வாக சீர்திருத்தக்குழு" புதிய மாவட்டங்கள் அமைப்பது பற்றிப் பல பரிந்துரைகள் செய்தது. அதன் அடிப்படையில் 8.5.1976 மற்றும் 10.12.1976 ஆகிய நாள்களில் புதுதில்லியில் கூடிய மாநிலத் தலைமைச் செயலர்கள் கூட்டத்தில் பரப்பளவு, மக்கள் தொகைக்கு ஏற்பப் புதிய மாவட்டங்கள் அமைக்க முடிவெடுக்கப்பட்டது.

மாநில வருவாய் ஆணையம் கோயமுத்தூர் மாவட்டத்தைப் பிரித்து ஈரோட்டைத் தலைநகராக்கி புதிய மாவட்டம் அமைக்கப் பரிந்துரை செய்தது. மேலும் அந்த ஆணையம் தாராபுரத்திலிருந்து காங்கயத்தையும், கோபிசெட்டிபாளையத்திலிருந்து சத்தியமங்கலத்தையும் தனித்தாலூக்காவாகப் பிரிக்கப் பரிந்துரைத்தது.

மற்றொரு முக்கியமான திட்டத்தையும் அந்த ஆணையம் அறிவித்தது. தாராபுரம், சத்தியமங்கலம் தாலூக்காக்கள் கோயமுத்தூர் மாவட்டத்துடனும், சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த சங்ககிரி, திருச்செங்கோடு தாலூக்காக்களை ஈரோடு மாவட்டத்துடனும் சேர்க்க வேண்டும் என்றும் பரிந்துரை செய்தது.

சேலம் மாவட்டத்தின் சங்ககிரியையும், திருச்செங்கோட்டையும் ஈரோடு மாவட்டத்தோடு சேர்க்க சேலம் மாவட்டத்தில் கடும் எதிர்ப்பு ஏற்பட்டது. சேலம், ஈரோடு மாவட்டங்களுக்கு காவிரியாறு இயற்கை எல்லையாக இருப்பதாலும், தொழில் வளம் மிக்க சங்ககிரி, திருச்செங்கோட்டை ஈரோட்டோடு சேர்த்தால் சேலம் மாவட்டம் மிகப் பாதிக்கப்படும் என்பதாலும் காவிரியில் சில புதுப்பாலங்கள் அமைக்க வேண்டியிருக்கும் என்பதாலும் அரசு சங்ககிரி, திருச்செங்கோடு ஆகிய தாலூக்காக்களை ஈரோடு மாவட்டத்தில் சேர்க்கும் திட்டத்தைக் கைவிட்டது.

அதற்குப் பதிலாக கோயமுத்தூர் மாவட்டத்தோடு சேர்க்க ஆணை பிறப்பிக்கப்பட்ட தாராபுரம், சத்தியமங்கலம் தாலூக்காக்களை ஈரோடு மாவட்டத்திலேயே வைத்துக் கொள்ளலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது. காங்கயம், பெருந்துறை, சத்தியமங்கலம் ஆகிய புதிய தாலூக்காக்கள் உருவாக்கவும் முடிவு செய்யப்பட்டது.

ஆந்திராவில் "பிரகாசம் மாவட்டம்" அமைந்திருப்பதை எடுத்துக்காட்டி கோயமுத்தூர் மாவட்டத்தைப் பிரித்து ஈரோட்டைத் தலைமையிடமாகக் கொண்டு அமைக்கப்படும் புதிய மாவட்டத்திற்குத் "தந்தை பெரியார் மாவட்டம்" என்று பெயர் சூட்டவும் முடிவு செய்யப்பட்டது. பின் பலருடைய வேண்டுகோளுக்கு இணங்கத் "தந்தை" என்ற சொல் நீக்கப்பட்டது. 17.9.1979 அன்று பெரியார் நூற்றாண்டு விழா முதல் பெரியார் மாவட்டம் என இயங்கும் என்ற ஆணையை அரசு 31.8.1979 அன்று பிறப்பித்தது.

பின்னர் எல்லா மாவட்டங்களிலும் தலைவர்கள் பெயர் நீக்கப்பட்டு தலைநகரப் பெயர்களால் மாவட்டங்கள் அமைந்த போது பெரியார் மாவட்டம் ஈரோடு மாவட்டம் ஆனது. பின் காங்கயம், தாராபுரம் வட்டங்கள் திருப்பூர் மாவட்டத்தில் இணைந்தது.

- சங்க கால நாகரிகத்திற்கு எடுத்துக் காட்டாக விளங்கும் நொய்யல் கரைக் கொடுமணல் அமைந்திருப்பது ஈரோடு மாவட்டம்.
- கொங்கு நாட்டில் அழியாமல் எஞ்சியிருக்கும் சமணசமயக் கோயில்கள் இருப்பது ஈரோடு மாவட்டம் (பூந்துறை, வெள்ளோடு, விசயமங்கலம், சீனாபுரம், திங்களூர்).

பார்சுவநாத தீர்த்தங்கரர்
பூந்துறை சமணக் கோயில்

கொடுமணல் வண்ணப் பாசிகள்

14

மாவட்டம் ஆகும் முன்பே மாவட்ட நிறுவனங்கள்

ஈரோடு மாவட்டம் தந்தைபெரியார் நூற்றாண்டு விழாவையொட்டி 17.9.1979 அன்று தொடங்கப்பட்டது. ஆனால் அதற்கு முன்பே மாவட்ட நிர்வாக அமைப்புக்கள் ஈரோட்டில் தொடங்கப்பட்டன.

ஈரோடு மாவட்டக் கழகம்

கோயம்புத்தூர் மாவட்டக் கழகம் பெரும் பரப்பளவில் இருப்பதால் நிர்வாக வசதிக்காக அதை இரண்டாகப் பிரித்து 27.11.1935 அன்று ஈரோடு மாவட்டக் கழகம் ஈரோட்டைத் தலைமை இடமாகக் கொண்டு அமைக்கப்பட்டது. பழைய கோட்டைப் பட்டக்காரர் நல்ல தம்பிச் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார் அதன் தலைவர். சில ஆண்டுகளில் ஈரோடு மாவட்டக் கழகம் கலைக்கப்பட்டது.

மாவட்ட மருத்துவமனை

கோவை மாவட்ட மருத்துவ மனை கோவையில் இருந்தது. கோவையில் மருத்துவக் கல்லூரி ஏற்பட்டபோது மாவட்ட மருத்துவமனை மருத்துவக் கல்லூரியுடன் இணைக் கப்பட்டது.

புதிய மாவட்ட மருத்துவமனை திருப்பூர் அல்லது ஈரோட்டில் அமைக்கப் பரிசீலிக்கப் பட்டது. ஈரோடு மு. சின்னசாமி அவர்கள் முயிற்சியில் 1972ல் மாவட்ட மருத்துவமனை ஈரோட்டில் அமைந்தது. 1.1.1973ல் ஈரோடு நகராட்சிப் பயணியர் விடுதியை மாவட்ட மருத்துவமனை அலுவலகத்திற்கு நகராட்சி அளித்தது. அத்துடன் 7½ லட்சம் ரூபாய் நன்கொடையும் அளித்தது.

ஈரோடு மாவட்டக் கழக அலுவலகம்
(நல்லதம்பிச் சர்க்கரை ஹால்) பன்னீர் செல்வம் பூங்கா அருகில்

15 ஈரோட்டுப் போர்கள்

17, 18 ஆம் நூற்றாண்டுகளில் அதிகாரம், ஆதிக்கம் தொடர்பாக நடைபெற்ற பல போர்களில் ஈரோடு முக்கிய இடமாகத் திகழ்ந்தது. அதற்குக் காரணம் ஈரோட்டில் ஒரு பெரிய மண்கோட்டை அமைந்திருந்தது தான். கி.பி.1628, 1656, 1672, 1768, 1790 ஆகிய ஆண்டுகளில் ஈரோட்டில் 5 போர்கள் நடைபெற்றுள்ளன.

முதல்போர்

1628 ஆம் ஆண்டு மதுரை திருமலை நாயக்கர் தளபதி இராமப்பையனுக்கும், தாரமங்கலம் கட்டிமுதலிக்கும் நடை பெற்ற போர் ஈரோட்டில் நடைபெற்றது. கொங்கு நாட்டுப் பாளையக் காரர்கள் பலர் கட்டி முதலிக்குத் துணை நின்றனர். கட்டிமுதலி மதுரை நாயக்கர் மேலாண்மையை ஏற்காமல் தன் பெயரிலேயே கல்வெட்டுகள் பொறித்துக் கொண்டது போரின் காரணம்.

மிகச் சிறந்த வரலாற்று இலக்கியமான 'இராமப்பய்யன் அம்மானை'

"ஈரோடு தன்னில் இருந்து பொருங் கட்டி"

"ஈரோடு தன்னில் எண்ணவொண்ணாக் கொங்கு மன்னர்"

அப்பாச்சிக் கவுண்டன், கணக்கதிகாரி கவுண்டர், கொம்பக்கவுண்டர், குறிக்கவுண்டர், மெய்க்கவுண்டர் ஆகியோர் என்று கூறுகிறது. இப்போரில் கட்டிமுதலியை இராமப் பய்யனால் வெற்றிகொள்ள முடியவில்லை. தன் இயலாமையை திருமலை நாயக்கருக்கு எழுதினார். கட்டிமுதலியின் வீரம், ஆற்றல் கண்டு நண்பராக்கிக் கொண்டார் திருமலை நாயக்கர். மைசூர் தாக்கத்தைத் தடுத்து நிறுத்தத் துணைபுரியுமாறு கேட்டுக்கொண்டார்.

இரண்டாம் போர்

கண்டீரவ நரசராஜா (1638-1659) என்ற மைசூர் மன்னன் தளபதி ஹம்பையன் சத்தியமங்கலம், ஈரோடு வழியாக மதுரைவரை படையெடுத்தான். ஈரோட்டில் மைசூர்ப் படையை திருமலை நாயக்கர் (1623-1659) படை எதிர்த்தது. சேதுபதி படையால் மைசூர்ப் படை ஈரோட்டில் தடுக்கப்பட்டது. திருமலை நாயக்கர் தம்பி முத்தியாலு நாயக்கர் என்ற குமாரமுத்து நாயக்கர், திண்டுக்கல் அரங்கண்ண நாயக்கர் ஆகியோர் ஈரோட்டில் மைசூர்ப் படையைத் தோற்கடித்து விரட்டினர்

மூன்றாம் போர்

மதுரை நாயக்க அரசர்கட்கும் மைசூர் தொட்டதேவராய உடையாருக்கும் நடைபெற்ற கொங்கு நாடு பற்றிய உரிமைப் போர் பல இடங்களோடு ஈரோட்டிலும் முக்கியப்போர் நடைபெற்றது. கி.பி. 1672 ல் மதுரை சொக்கநாத நாயக்கர் படைகட்கும், மைசூர் உடையார் தொட்டதேவராயன் தளபதி சிக்கதேவராயருக்கும் போர் ஈரோட்டில் நடைபெற்றது. மதுரை நாயக்கருக்குத் துணையாக செஞ்சி நாயக்கர் படையும், பீஜப்பூர் சுல்தானின் படையும், தஞ்சை மராட்டியர் படையும், ஆட்சியை இழந்த விஜயநகர மன்னன் மூன்றாம் சீரங்கனும் 100 யானை பல்லாயிரம் குதிரைப் படையோடு போரிட்டனர். மைசூர்ப் படையே வெற்றி பெற்றது. இதை ஈரோட்டுப்போர் என்றே கூறுவர்.

நான்காம்போர்

கி.பி. 1768 இல் கிழக்கிந்தியக் கம்பெனிப் படைகட்கும் மைசூர் ஐதர் படைகட்கும் ஈரோட்டில் போர் நடைபெற்றது. கம்பெனிப் படை பின் வாங்கியது. ஈரோடு ஐதர் அலி வசம் ஆயிற்று.

ஐந்தாம் போர்

1790ல் திப்புசுல்தானுக்கும் கம்பெனிப் படைத் தலைவன் தளபதி மெடோஸ் என்பவன் படைக்கும் ஈரோட்டில் போர் நடந்தது. 1790 ஆம் ஆண்டு ஆகஸ்டு ஆறாம் நாள் கம்பெனிப்படை திப்பு சுல்தானைத் தோற்கடித்தது. நவம்பரில் திப்பு மீண்டும் ஈரோட்டைக் கைப்பற்றினார்.

திப்பு சுல்தான் 4.5.1799ல் போர்க்களத்தில் வீரமரணம் அடையும் வரை ஈரோடு திப்புசுல்தான் வசமே இருந்தது.



16

மூக்கறுப்புப் போர்

தோல்வியடைந்தவனை மூக்கறுபட்டான் என்றும், அவமானப் படுத்துவதை நோஸ்கட் என்றும் கூறுவர். ஆனால் இங்கு மூக்குக்கு எந்தச் சேதமும் ஏற்படுவதில்லை. ஆனால் 1658 வாக்கில் ஈரோடு மக்கள் பலர் உண்மையிலேயே மூக்கறுபட்டனர். ஏன்?

மைசூர் மன்னன் கண்டீரவ நரச ராஜா (1638-1659) வேலூர் மீது படையெடுப்பதை பீஜப்பூர் மூலம் திருமலைநாயக்கர் (1623-1659) தடுத்தார். சினம் கொண்ட கண்டீரவன் மதுரை நாயக்கர் மீது படையெடுத்தான். சத்தியமங்கலத்தை எதிர்ப்பு இன்றிக் கைப்பற்றிய மைசூர் கண்டீரவன் படை ஈரோட்டில் எதிர்ப்பைக் கண்டது. கண்டீரவன் ஏவலால் மைசூர்ப் படையினர் போரிட்ட மதுரை வீரர்களை மட்டும் அல்ல ஈரோட்டில் எதிர்ப்பட்ட இளையோர், முதியோர், ஆண்கள், பெண்கள் அனைவரையும் மூக்கரிந்தனர். அறுபட்ட மூக்குகளை மூட்டை மூட்டையாக சீரங்கப் பட்டணத்துக்கு அனுப்பினர்.

மேல் உதட்டோடு சேர்த்து மூக்கை அரிய மைசூர் வீரர்கள் தனிக் கருவியைப் பயன் படுத்தினர். மதுரை வரை சென்ற மைசூர்ப் படையை சேதுபதி உதவியால் மதுரையார் வென்றனர்.

17

ஆதி அம்மன்

ஈரோட்டில் கொங்கிலம்மன், அங்காளம்மன், மாரியம்மன், பச்சையம்மன் எனப் பல அம்மன் கோயில்கள் இருந்தாலும் எல்லா அம்மனையும் விட ஆதி அம்மன் ஒருவர் உள்ளார். அவர் பெயர் 'பட்டாலம்மன்'.

சி.எஸ்.ஐ. வசம் உள்ள பெரிய மைதானத்தின் தெற்கே உள்ளது பெரிய பங்களா. அது முன்பு ஈரோடு சப்கலெக்டர் இல்லம். அதன் கிழக்கேதான் பட்டாலம்மன் கோயில் இருந்தது. வழிபாடும் நடந்தது. இன்றைய பிரப் ரோட்டிலிருந்து பட்டாலம்மன் கோயில் செல்ல தனி வழி இருந்தது. பழைய நகராட்சி வரைபடங்களில் கோயிலும் பாதையும் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது.

சி.எஸ்.ஐ. நிர்வாகம் தங்கள் செல்வாக்கால் பட்டாலம்மன் கோயிலையும் அகற்றி அம்மனைக் கொண்டுவந்து பெரிய மாரியம்மன் கோயிலில் வைத்துவிட்டார்கள். பழைய வழக்கம் மாறாமல் இன்றும் பட்டாலம்மனுக்கு முதலில் பூசை செய்து வழிபட்ட பின்னரே மாரியம்மன் கோயில்கட்குப் பூச்சாட்டு விழா நடைபெறுகிறது. மாரியம்மன் கோயிலுக்கு வழிபடச் செல்வோர் பட்டாலம்மனையும் வழிபடலாம்.

பல ஊர்களில் ஆதி அம்மனுக்குத் தனிக் கோயில்கள் இருப்பதுபோல் ஈரோடு ஆதி அம்மன் பட்டாலம்மனுக்குத் தனிக்கோயில் அமையுமா?

ஆதி அம்மன் பட்டாலம்மன்

18

தொல்பழங்காலச் சின்னம்
முது மக்கள் தாழிகள்

தொல்பொருள் சின்னம்
பெருங்கற்படை

பழங்காலத்தில் 2000 ஆண்டுகட்கு முன் வயதில் மிகவும் முதிர்ந்து இருக்கும் தருவாயில் உள்ள பெரியவர்களைத் தாழிக்குள் உட்கார வைத்து உணவளித்துவருவர். அவர்கள் மரணம் அடைந்தால் அதை அப்படியே புதைத்து மூடி விடுவர். அதனை முதுமக்கள் தாழி, மூத்தாந்தாழி, மதமதக்கசால் என்று பல்வேறு பெயரில் அழைப்பர். கி.பி. 3 ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் இவ்வழக்கம் மறைந்துவிட்டது.

தாழி என்றால் தாழ்தல், பூமிக்குள் தாழ்வாகப் புதைத்தல் என்று பொருள்படும். இப்படிப்பட்ட முதுமக்கள் தாழிகள் தொல் பழங்காலச் சின்னங்களுடன் ஈரோட்டில் பல இடங்களில் கிடைக்கின்றன. பவர் ஹவுஸ் ரோடு, எஸ்.கே. சென்னியப்பகவுண்டர் வீதி, மாணிக்கம்பாளையம் போன்ற பல இடங்களில் இவை கிடைத்துள்ளன. முத்துவேலப்ப கவுண்டர் வீதியில் உள்ள கலைமகள் குழந்தைப் பள்ளியில் 14.3.1973 அன்று குடிநீர்க் குழாய் தோண்டும்போது மிகப்பெரிய முதுமக்கள்தாழி கிடைத்தது.

பவர் ஹவுஸ் உள்ளேயும், மகாசன பள்ளி விளையாட்டு மைதான வட புறத்திலும், சேலம் திருச்சி இரயில் பாதை பிரியும் இடத்திலும் தாழிகள், தொல்பொருட் சின்னம் அடையாளம் உள்ளது. இதனால் ஈரோட்டின் தொன்மை தெரிகிறது.

முது மக்கள் தாழி

19

நடுகற்கள்

அக்காலத்தில் போரில் வீரமரணம் எய்தியவர்கட்கும், பல்வேறு இடையூறுகளிலிருந்து ஊரைக் காத்தவர்களுக்கும், செயற்கரிய செய்த செம்மல்களுக்கும் நினைவாக அவர்களைப் போற்றும் வகையில் நடுகல் எடுத்து வழிபடுவது வழக்கம்.

தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியங்களிலும் நடுகற்களைப் பற்றிய பல குறிப்புகள் வருகின்றன.

ஈரோட்டில் சித்தோடு சாலையில் சூளை என்ற பகுதியில் மாணிக்கம்பாளையம் செல்லும் வழியின் வடபுறமும், பிச்சைக்காரன் பள்ளத்தின் தென்புறமும் உள்ள தோட்டத்தில் இரண்டு பழமையான நடுகற்கள்இருந்தன.

அவை இப்போது ஈரோடு கலைமகள் கல்வி நிலைய அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்படுகின்றன.

போரிடும் நிலையில் அழகிய உடை, அணிகலன், தலையலங்காரத்துடன் காணப்படும் இந்த நடுகற்கள் சுமார் 700 ஆண்டுகட்கு முற்பட்டவை. இதன் அமைப்பு புதுமையானது என ஆய்வாளர் கூறுவர்.

கலைமகள் பள்ளி அருங்காட்சியகத்திலும், அரசு அருங்காட்சியகத்திலும் பல நடுகற்கள் உள்ளன. இன்று தலைவர்கட்கு சிலைகள் வைப்பது நடுகல் வழக்கத்தின் தொடர்ச்சிதான்.



ஈரோடு நடுகற்கள்

20

காணக் கிடைக்காத கழுமரம்

பழங்காலக் கடுமையான தண்டனை முறைகளில் 'கழுவேற்றுதல்' என்பதும் ஒன்று. இது மரண தண்டனையாகும். இதற்காக மரத்தால் செய்யப்பட்ட 'கழுமரம்' பயன்படுத்தப் படும். சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி "STAKE FOR IMPALING CRIMINALS" என்று கூறுகிறது. நடுவே கூர்மையான முனை இருப்பதால் திவாகர நிகண்டு இதனைச் சூலம் என்று கூறுகிறது.

திருஞானசம்பந்தர் காலத்தில் மதுரையில் எண்ணாயிரம் சமணர்களைக் கழுவேற்றி யதைப் பெரியபுராணம் கூறுகிறது. திருவிளையாடல் புராணம், தக்கயாகப் பரணி, தமிழ் நாவலர் சரிதை ஆகிய நூல்களிலும் கழுவேற்றக் குறிப்புகள் உண்டு. ஊர் எல்லையில் இது அமைக்கப்படும்.

மதுரை உள்ளிட்ட பல ஊர்க் கோயில்களில் சமணர் கழுவேற்றும் காட்சி ஓவியமாக உள்ளது. திருவோத்தூர் போன்ற பல ஊர்களில் கழுவேற்றுச் சிற்பங்கள் உள்ளன. தமிழகத்தில் பலஊர்க் கோயில்களில் "கழுவேற்று உற்சவம்" நடைபெறுகிறது.

இப்படிப்பட்ட கழுமரம் தமிழ்நாட்டில் எங்கும் இன்று காணக்கிடைக்கவில்லை. சென்னை அருங்காட்சியகத்தில் ஆந்திர மாநிலத்தில் கிடைத்த கழுமரம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. நாம் காணும் வகையில் ஈரோட்டில் காலிங்கராயன் கரையில் உள்ள அய்யனாரப்பன் கோயிலில் மட்டும் ஒரு கழுமரம் நல்ல நிலையில் வழிபாட்டில் உள்ளது.

இந்நூலாசிரியர் மூலம் கேள்விப்பட்ட எழுத்தாளர் எஸ். இராமகிருஷ்ணன் அவர்கள் இக்கழுமரத்தைப் பார்வையிட்டுத் தன் நூலில் கட்டுரை எழுதியுள்ளார்.



கழுமரம்

21 ஈரோடு கோட்டை

ஈரோட்டின் நடுநாயகமாக கோயில்கள் உள்ள பகுதிக்கு இன்றும் கோட்டை என்ற பெயர் வழங்குகிறது. முன்பு அப்பகுதியில் பெரிய மண் கோட்டை இருந்தது. கடைவீதியின் (நேதாஜி சாலை. மணிக்கூண்டுக்கும்) கிழக்கே உள்ள பகுதிக்குப் 'பேட்டை' என்றும். மேற்கே உள்ள பகுதிக்கு 'கோட்டை' என்றும் பெயர் வழங்கியது. தந்தை பெரியாரின் தந்தை . மண்டி ஈ. த. வெங்கட நாயக்கர் 1904 ஆம் ஆண்டு ஈரோடு பெருமாள் கோயிலில் வெட்டிய கல்வெட்டில் தாம் பேட்டையில் இருப்பதாகக் கூறுகிறார்.

பிரப் சாலையில்உள்ள பெரியமாரியம்மன் கோயில் 'கோட்டை மாரியம்மன் கோயில்' என்றே அழைக்கப்பட்டது. பதினேழாம் நூற்றாண்டுப் பாடல் ஒன்று மேல் கரைப் பூந்துறை நாட்டில் ஈரோடு. பெருந்துறை. கொளா நல்லி ஆகிய மூன்று ஊர்களில் கோட்டைகள் இருப்பதாகக் கூறுகிறது.

- மதுரை மன்னன் திருமலை நாயக்கர் காலத்தில் 23 கோட்டைகள் புதுப்பிக்கப்பட்டன. அவற்றில் ஈரோடு கோட்டையும் ஒன்று எனப் பட்டியல் கூறுகிறது.

- 12.6.1761 அன்று எழுதப்பட்ட ஓர் ஆவணத்தில் ஈரோடு கோட்டையில் தளவாய், கந்தாசாரம், அட்டவணை, சேனைபாகம், சேர்வைகாரர் முதலிய அலுவலர்கள் இருந்ததாகக் கூறப்படுகிறது.

- 1779இல் மைசூர் ஐதர் அலிக்கும் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கும் சமரசம் செய்ய தஞ்சையிலிருந்து பயணம் செய்த பாதிரியார் கிறிஸ்டியன் ஃபிரடரிக் ஸ்வார்ட்ஸ் ஈரோடு வழியாகச் சென்றவர் ஈரோடு கோட்டை பற்றிச் சிறப்புடன் குறிப்பிடுகிறார்.

முன்பு கோட்டைதான் ஒரு அரசின் பலம். கோட்டை வீழ்ந்தால் கோட்டைக்குரிய அரசும் வீழும் .அதனால் தான் தோல்வி அடைந்தவனைக் "கோட்டை விட்டான்" என்று கூறுகிறோம்.

22 அகழி மேடாகி அகில்மேடு வீதி

1878 ஆம் ஆண்டு ஏற்பட்ட தாது வருடப் பஞ்சநிவாரணப் பணிக்காக இடிக்கப்பட்ட பெரிய மண் கோட்டை மண்ணை கோட்டையைச் சுற்றிலும் வளைந்து வளைந்து இருந்த அகழியில் கொட்டினார்கள். அகழி மேடு ஆனதால் அகில்மேடு வீதிகள் ஆயின.

23

கல்வெட்டுகள்



கல்வெட்டு இருந்த பெருமாள் கோயில்
ஸ்ரீ பாத மண்டபம்

எழுத்துக்களைக் கல்லில் பொறித்தால் அவை நீண்ட காலம் அழியாமல் நிலைத்து நிற்கும் என்பதை நம் முன்னோர் கண்டறிந்தனர். அவ்வாறு கல்லில் வெட்டப்பட்டதை கல்வெட்டு என்றுஅழைக்கிறோம். ஈரோட்டில் பல கல்வெட்டுகள் உள்ளன.

பள்ளிகொண்ட பெருமாள் கோயில்

1. திருவேங்கடமுடையான் சன்னதி கட்டும்போது தாயஞ்சாத்தன் என்பவன் திருநிலைகால் கொடைக் கல்வெட்டு.

கி.பி 10 ஆம் நூற்றாண்டு

2. சாளக்கிராமத்தைச் சேர்ந்த காஞ்சிக்குறியில் (காஞ்சிக் கோயில்) வாழ்ந்த ஒரு பார்ப்பனப் பெண் அரங்களிகரஞ்சி வளஞ்சியம் என்னும் வணிகக் குழுவைச் சேர்ந்த பன்னாட்டான் ஆச்சன் என்பவன் நலத்தின் பொருட்டு 40 நாழி எடையுடைய எறிமணி (சேகண்டி) கொடைக் கல்வெட்டு.

கி.பி 10 ஆம் நூற்றாண்டு

இரண்டு கல்வெட்டுகளும் கோயில் பிரிக்கப்பட்டதால் மேற்குப் பிரகாரத்தில் மண்ணில் புதைக்கப்பட்டுள்ளன.

3. வெண்ணெய்க் கூத்த நாயனார் (கிருஷ்ணர்) பூசைக்காக திருவாய்ப்பாடி நாட்டார் (இடையர்) திருமண வரியும், சுடுகாட்டு வரியும் (கண்ணாலக் காணம், சுடுகாட்டுப் பாட்டம்) கொடுத்த கல்வெட்டு. முதல் பராந்தக சோழன் காலம்.

கி.பி.922

4. பூந்துறை நாட்டார் கொளா நல்லியில் கூடி செயமுரி என்னும் ஆறமாத்தூர் வல்லிச் சதர்வேதி மங்கலம் என்ற ஊரை பெருமாளுக்குக் கொடை கொடுத்த கல்வெட்டு. வீரபாண்டியன் காலம்.

கி.பி.1276

5. பூந்துறைநாட்டார் ஈரோட்டில் கூடி பள்ளி கொண்ட பெருமாள், திருத்தொண்டீசுவரர் இருவருக்கும் சாத்தனூர் (சாத்தம்பூர்)கிராமத்தைச் சேர்ந்த காலப்பள்ளி என்னும் லக்காபுரத்தைக் கொடை கொடுத்த கல்வெட்டு. உம்மத்தூர் தலைவன் வீரசிக்கராயன் காலம்.

கி.பி.1527

6. அம்மையப்பன் மக்கள் முத்துப் பொன்னி, சின்னப் பொன்னி, தங்கை பள்ளி கொண்டாள் மூவரும் கோயிலில் தேவரடியார் ஆக நியமிக்கப்பட்டனர். மாச்ச நாயக்கன் குட்டையில் இவர்கட்கு ஒரு மாநிலம் கொடுத்த கல்வெட்டு. ராணிமங்கம்மாள் காலம். இக்கல்வெட்டு இப்போது இல்லை. அழிந்துவிட்டது.

கிபி.1699

7. அழிந்த நிலையில் இருந்த முன் வாத்திய மண்டபத்தை லக்காபுரம் முத்துக் குமார கவுண்டர் செய்த திருப்பணிக் கல்வெட்டு.

19 ஆம் நூற்றாண்டு

8. முன் வாத்ய மண்டப கிழபுற வாயிலையும் படிக்கட்டையும் கொண்டமல்லி அய்யங்க நாயக்கர் மகன் சின்ன முராரி நாயக்கர் திருப்பணிக் கல்வெட்டு.

19 ஆம் நூற்றாண்டு

9. தந்தை பெரியாரின் தாயார் சின்னத்தாயம்மாளும், அவர் சின்ன மாமியார் சென்னம் மாளும் (இராம நாயக்கர் மனைவி) தங்கள் சிறுவாட்டுப் பணம் கொண்டு பிரகாரத்தில் கடப்பைக்கல் பாவிய கல்வெட்டு. கல்வெட்டு பொறித்தவர் தந்தை பெரியாரின் தந்தை ஈ.த. வெங்கட நாயக்கர்.

1904

திருத்தொண்டீசுவரர் கோயில்

1. பூவாணிய நாட்டு ஆவணிப்பேரூரில் பில்லன்குலவேளாளர் விக்கிரம சோமயரையன் வாழ்ந்தார். அவர் மகனுக்கு அக்கன்சோமன் மாமணியாழ்வான் என்று பெயர் வைக்கப்பட்டது. பெயர் சிறக்ககோயிலுக்குக் கொடை கொடுத்த கல்வெட்டு. சேரன் கோரவிகோதை காலம்.

கி.பி.10 ஆம் நூற்றாண்டு

2. கோரவிகோதை மன்னன் அந்தியூர் பெரிய குளத்தின் கீழ் நன்செய் நிலத்தை கொடையாகக் கொடுத்த கல்வெட்டு.

கி.பி.10 ஆம் நூற்றாண்டு

3. பூந்துறை நாட்டார் வெள்ளோட்டில் கூடி திண்டல் கிராமத்தைக் கொடை கொடுத்த கல் வெட்டு. மூன்றாம் வீரவல்லாளன் காலம்.

கி.பி. 1341

4. உம்மத்தூர் தலைவன் வீரராய தாவக்க மாரைய நாயக்க உடையார் பாலமேடு குறவன் கரையில் 20 மாநிலம் கொடை கொடுத்த கல்வெட்டு.

கி.பி.1504

5. ஒக்கிலியர்களில்ஆதியப்ப கவுண்டர், மல்லைய கவுண்டர் ஆகியோர் சங்கராந்தி பூசைக்காக குருவராயன்பொன் 15 கொடை கொடுத்த கல்வெட்டு. கிருஷ்ணதேவராயர் காலம்.

கி.பி.1527

6. மதுரை வீரப்ப நாயக்கர் தொண்டீசுவரர், பள்ளி கொண்ட பெருமாள் இருவருக்கும் கொடை நிலம்அளித்தார். விசயநகரம் வீரவெங்கடபதிராயர் காலம்.

கி.பி. 1589

கொங்கலம்மன் கோயில்

1. வீரபாண்டியன் காலத்தில்பூந்துறை நாட்டார் ஈரோடு கொங்கலம்மைக்கு பூந்தோட்டம் என்ற பகுதியில் நன்செய், புன்செய்நிலம் அளித்த கல்வெட்டு.

கி.பி.13 ஆம் நூற்றாண்டு

2. பெண்ணாலி கோத்திரம் தாமோதரம் பிள்ளை மக்கள் செலம்பண பிள்ளை, ரங்கையம் பிள்ளை, சிதம்பரம்பிள்ளை மூவரும் தூரிக்கல், கருடகம்பம், கொறடு அமைத்த கல்வெட்டு.

கி.பி.1815



ஈரோடு கொங்கலம்மன் கோயிலில் வீரபாண்டியன் கல்வெட்டு
(கி.பி.13 ஆம் நூற்றாண்டு)

கொல்லம்பாளையம்

தென்னவன் பேரரையன் ஆன வஞ்சிவேள் தாழி என்பவன் நிலம் வாங்கி ஏரி ஒன்றை அமைத்தான். ஏரியின் பெயர் தாழி ஏரி.

கி.பி.948

காவிரிக்கரை

ஷேக்அலாவுதீன் தர்காவிற்கு ஈரோடு கோட்டை அதிகாரிகள் 5 மா நிலம் கொடை கொடுத்த கல்வெட்டு.

காலம் 12.6.1761

கருங்கல் பாளையம்

காவிரிக்கரை கிருஷ்ணன் கோயிலுக்கு அர்த்தநாரி பிறவியான் என்பவர் காடு கொடை கொடுத்த கல்வெட்டு.

கி.பி.18ஆம்

வ.உ.சி.பூங்கா

சந்திரமதி முதலியார் மடத்துக்கு புன்செய் நிலம் கொடை கொடுத்த கல்வெட்டு.

விப, தைமாதம்

காலிங்கராயன் கரை

கண்டம் பிடாரியான் என்பவர் நீர் வெளியேறும் மதகு அமைத்ததைத் தெரிவிக்கும் கல்வெட்டு. காலிங்கராயன் கால்வாயோடு தொடர்புடையதாக இருக்கலாம்.

கி.பி.13ஆம் நூற்றாண்டு

காவிரிக்கரை சோழீசுவரர் கோயில்

விளம்பி வருஷம் ஆனி மாசம் 4 தேதி கெர்ப்பக் கிரகம் அர்த்த மண்டபம் றெஷபக்கொறடு தேவாலயம் முத்துக் கருப்பணபிள்ளை, வரதப்ப செட்டியார், அருணாசல ஆசாரியார் இவர்கள் உபயம்.

கொல்லம்பாளையம், காலிங்கராயன் கரைக் கல்வெட்டுகள் கலைமகள் பள்ளி அருங் காட்சியகத்தில் உள்ளன.

சிவன்-பெருமாள் கோயில் கல்வெட்டுகளை மைய அரசு கல்வெட்டுத் துறையினர் 1891, 1910, 1968, 1977 ஆம் ஆண்டுகளில் படி எடுத்துள்ளனர். 1891 கல்வெட்டுகள் மட்டும் அச்சிட்டுள்ளனர். ஈரோடு மாவட்டக் கல்வெட்டுகள் முதல் தொகுதியில் அனைத்தும் அச்சிடப்பட்டுள்ளன.

'கல்வெட்டுகளைக் காப்பது நமது கடமை'

24 செப்பேடுகள்

இடைக்காலச் சேர மன்னன் கோ ரவி கோதையின் செப்பேடுகள் மூன்று கிடைத்துள்ளன. அவற்றில் இரண்டு செப்பேடுகள் ஈரோட்டில் கிடைத்துள்ளது சிறப்புக்குரியது. இரண்டு செப்பேடுகளையும் கொங்கு ஆய்வு மையம் கண்டுபிடித்தது.

1. முதல் செப்பேடு

கோ ரவி கோதை கொங்கு நாட்டை வென்று கரூர் சித்ரா கூடத்தில் வீற்றிருக்கும் போது செல்லன் தேவன், வேம்பன்பண்ணன், நக்கன் முதலி மூவரும் காணி வேண்டும் எனக் கேட்கும் போது அவர்கள் மூவருக்கும் பூந்துறை நாட்டு அனுமன்பள்ளியை சர்வ மானியமாகக் கொடுத்தவிபரம் கூறப்படுகிறது. (இன்றும் செல்ல குலத்தாரும், பண்ணை குலத்தாரும் அனுமன்பள்ளிக் காணியாளர்களாக உள்ளனர்).

2. இரண்டாவது செப்பேடு

கொங்கு நாட்டை வென்ற சேர மன்னன், கோரவி கோதை தன்னைக் கொங்கு நாட்டு மன்னனாக ஈரோடு பெருமாள் கோயிலில் அபிஷேகம் செய்துகொண்டான். அதனால் ஈரோடு பெருமாள் கோயில் அபிஷேக விண்ணகரம் பெருமாள் கோயில் எனப்பட்டது. அபிஷேகப் புறமாக உசாவூர் உன்ற ஊரைத் தானமாக அளித்தான். திருவகழி மங்கலம் என்ற பெயரும் அவ்வூருக்கு உண்டு. அவ்வூருக்கு நாற்பாங்கு எல்லை கூறப்பட்டுள்ளது.

இரண்டு செப்பேடுகளும் 10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. இந்த ரவிகோதையின் மூன்று கல்வெட்டுகள் ஈரோட்டில் இருப்பதும் சிறப்புக்குரியது.



கோரவிகோதை செப்பேடு

25

பரசுராமன் சிலை

ஈரோடு பெரிய மாரியம்மன் கோயிலில் மேற்குப் பிரகாரத்தில் கையில் 'பரசு' என்ற ஆயுதத்துடன் (கோடரி) சுகாசனத்தில் அமர்ந்த நிலையில் ஒரு உருவம் உள்ளது. அது பரசுராமன் சிலையாகும். பரசுராமன் (இரேணுகாதேவி) மாரியம்மனின் மகன் என்பது புராண வழக்கு.

முன்பொருமுறை சிவபெருமான் 'சமதக்கினி' முனிவராகவும், பார்வதி தேவி ரேணுகா தேவியாகவும் பிறந்து பூமியில் வாழ்ந்தனர். ரேணுகாதேவி கற்பில் ஐயம் கொண்ட சமதக்கினி முனிவர் தாயின் தலையை வெட்டுமாறு மக்களைக் கேட்டுக்கொண்டார். மூன்று மக்கள் மறுத்துவிடவே பரசுராமன் தாய்கழுத்தைத் துண்டித்தான்.

சமதக்கினி முனிவர் மகிழ்ந்து "உனக்கு என்ன வரம் வேண்டுமோ கேள்" என்றார். அதற்குப் பரசுராமன், "ஐயா தந்தை சொல் மிக்கமந்திரம் இல்லை" என்பதன்படி தாய் தலையைத் துண்டித்தேன். "தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை" என்பதற்கேற்ப என் தாயை உயிர்ப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டான். ரேணுகாதேவி உயிர்பெற்றதும் தன்மகன் பரசுராமனை அருகில் வைத்துக் கொண்டாள்.

ஈரோட்டில் மாரியம்மனின் மகனாகக் கருதப்படும் பரசுராமன் சிலை ஈரோடு மாரியம்மன் கோயிலில் இருப்பதைப் போல் வேறு எங்கும் இருப்பதாகத் தெரியவில்லை.

மாரியம்மனை வழிபடச் செல்வோர் பலருக்கும் பரசுராமன் சிலை பற்றித் தெரியாது. அன்பர்கள் பரசுராமனையும் வணங்கலாம்.

பரசுராமன்

26

முதல் சோழர் கோயிலில் வெண்ணைக் கூத்த நாயனார்

பிற்காலச் சோழர்ஆட்சியை நிறுவிய விஜயாலயன்(846-881) மகன் ஆதித்தசோழன் (871-907) கொங்குநாட்டைக் கைப்பற்றினான். அவன் மகன் பராந்தக சோழன் (907-953) கொங்கு நாட்டுக் கோயில்கள் மீது முதல் கவனம் செலுத்தினான். கொங்குநாட்டுக் கோயில் பணிகளைக் கவனிக்க கொங்கு ஸ்ரீகார்யம் காரி நக்கன் என்பவனை நியமித்தான்.

சோழர் படைகட்கும் அதிகாரிகட்கும் காவிரிக்கரை வழியாகப் பயணம்செய்வது எளிதாக இருந்தது. ஈரோடு வந்தனர். தங்கள் சோழநாட்டுப் பகுதியில் பெரிய வைணவத் தலமாக விளங்கும் திருவரங்கம் போல ஈரோட்டில் ஒரு கோயில் கட்டத் தொடங்கினர். பராந்தகனின் 15 ஆம் ஆட்சியாண்டு வாக்கில் ஈரோடு விஷ்ணு கோயில் அமைக்கப்பட்டது. திருவரங்க அமைப்பிலேயே பெருமாளைப் பிரதிஷ்டை செய்து பள்ளி கொண்ட பெருமாள் என்று பெயர் வைத்தனர்.

இக்கோயில் கருவறை நிலையின் இருபுறமும் பராந்தக சோழனின் 15 ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு உள்ளது (கி.பி.922). கொங்கு நாட்டில் கிடைக்கும் பராந்தகன் கல்வெட்டு இது ஒன்றேயாகும். இது கொங்கு நாட்டின் முதல் சோழர் கோயில் ஆகும்.

இக்கோயிலில் திருவாய்ப்பாடி நாட்டார் (இடையர்கள்) வெண்ணைக் கூத்த நாயனார்க்குத் திருமண வரியும், சுடுகாட்டு வரியும் கொடுத்துள்ளனர் (கண்ணாலக் காணம், இடுகாட்டுப் பாட்டம்).

இதேபோல் முதல் கொங்குச் சோழர் கோயில் ஈரோடு மகிமாலீசுவரர் கோயில் மகிமாலய இருக்குவேள் கட்டியது.



வெண்ணைக் கூத்த நாயனார் (நவநீத கிருட்டிணன்)
ஈரோடு பெருமாள் கோயில்

27

திருத்தொண்டீசுவரர்

ஈரோட்டின் நடுநாயகமாகத் திகழும் கோட்டைப் பகுதியில் சிறப்புடன் விளங்கும் சிவாலயத்தில் அருள்புரியும் சிவபெருமான இன்று 'ஆருத்ரகபாலீசுவரர்' என இந்து சமய அறநிலையத் துறையினரும், மக்களும் அழைக்கின்றனர். இது மாறிய பெயராகும். சிவபெருமான் பழம் பெயர் 'திருத்தொண்டீசுவரர்'. ஆலயப்பெயர் 'திருத் தொண்டீசுவரம்'.

அக்கோயில் கல்வெட்டுகளில் சிவபெருமான் பெயர்

''ஆளுடையார் திருத் தொண்டீசுவரம் உடையார்"

"திருத்தொண்டீசுவரம் உடைய தம்பிரானார்"

"திருத்தொண்டீசுவரம் உடைய பிடாரர்"

"நாயனார் தொண்டர்கள் நாயனார்"

"திருத்தொண்டியப்பர்'

என்று பலவாறாகக் குறிக்கப் பெறுகின்றது.



திருத்தொண்டீசுவரர் கோயில்
(பழைய தோற்றம்)

ஊர்ப்பெயர் ஈரோடு. இங்குள்ள சிவன் பெயர் 'ஈரோடு ஈசுவரன்'. இதனை 'ஈரமான ஓடு உடைய ஈசுவரன்' எனத் தவறாகப் பிரித்து இதனை வடமொழியில் மொழிபெயர்த்து ஆருத்ரகபாலீசுவரர் (மண்டையோடு - கபாலம்) ஈரோடும் ஆருத்ர கபால புரியாம்.

வடமொழியில் வழிபாடு கூடாது புரியும் தமிழில் வழிபாடு வேண்டும் என்கிறோம். இறைவன் பெயரையே மாற்றி வடமொழியில் உச்சரிப்பது எந்த வகையில் நியாயம்?

சிவபெருமானுக்குதிருத்தொண்டீசர் என்ற பெயர் எதனால் ஏற்பட்டது. பக்தராகிய தொண்டர் ஒருவருக்கு அருள் செய்த காரணத்தால் தான் என்கிறது தலபுராணம்.

கொங்கு மண்டல முதல் இலக்கியப் பதிப்பாளர் தி. அ. முத்துசாமிக் கோனார் 1933ல் தாம் எழுதிய கொங்குநாடு என்னும் நூலில் இதற்குரிய காரணத்தைக் கூறுகிறார்.

அவருடைய எழுத்திலேயே காண்போம்.

''இவ்வூரில் தாண்டவன் என்று ஒரு ஏழைக் கைக்கோளன் தினமும் தான் நெய்த வேலைக்கான கூலி வாங்கித் தான் உணவுப் பொருள் வாங்கிச் சீவிப்பன். ஆனால் அதிகாலை தொண்டீசுரர் கோவில் வாயிலில் நின்று ஒரு கும்பிடு போட்டுச் செல்வன். உள்ளன்புள்ளவன்.

இவனது அன்பை வெளிப்படுத்துதற்காக தொண்டீசுரர் ஒரு மெலிந்த தளர்நடை ஏழையாக நடுங்கிக் கொண்டு தாண்டவன் குடிசைக்குச் சென்றார். ''குளிர் சகிக்க முடியவில்லை. ஒரு கந்தல் இருந்தால் பிழைப்பேன்'' என்று கேட்டனர். ''ஐயா என்

கணவனார் நெசவுக்குப் போயிருக்கிறார். அவரிருந்தாலும் இடையில் சுற்றியுள்ள ஒரு துண்டுதானிருக்கிறது" என்று கூறினாள். அவர் புறப்பட்டார். "சுவாமி எங்கே இருப்பு" என்றனள். " தொண்டீசர் கோயில் வெளியிலிருப்பவன்" எனக் கூறி நடந்தனர். இரவு 5 நாழிகைக்கு மேல் கணவன் வந்தவுடன் கூறினள்.

திடீரென்று தான் தொழில் செய்யும் தலைவனிடம் சென்று அஞ்சி நின்று "ஒரு துண்டு கொடுங்கள். கொஞ்சம் கொஞ்சமாகக் கடனைக் கட்டிவிடுகிறேன்" எனக் கெஞ்சிக் கேட்டு வாங்கி ஓடி வந்தனன். ஆலயமுகப்பில் இரு முழங்காலிடையில் தலையைக் குனிந்து வைத்துக் கைகளால் மேலையும் போர்த்து நடுங்கிடும் பெரியவரைக் கண்டு வருந்திக் கொண்டு வந்த சிறு துண்டை விரித்துப் போர்த்து வணங்கிச் சென்றனன்.

அதிகாலை கோவில் திருக்காப்புத் திறந்து பூசகர் பார்க்கவே. அர்த்தசாமத்துச் சாத்திய பரிவட்டமில்லை. ஏதோ ஒரு புதுத்துண்டு போர்த்தப்பட்டிருந்தது. நடுங்கி வெளியே ஓடிவந்து கூறினர். குருக்கள் விவரம் சொன்னார். துண்டைப் பார்த்தார்கள். இத் தாண்டவன் தொழிற்சாலைத் தலைவனும் பார்த்தான். இத்துண்டு நேற்று ராத்திரி தாண்டவன் என்னிடம் வாங்கி வந்தது தான் என்றான்.

அவனை அழைத்துக் கேட்டார்கள். நடந்ததையே சொன்னான். இவன் உண்மை சொல்வதில்லை என அவனைப் பிடித்துத் தாம்புக் கயிறு கொண்டு வந்து தூணுடன் சேர்த்துப் பின் கட்டாகக் கட்டினார்கள். சாட்டை கொண்டு அடிக்க ஆரம்பித்தார்கள். தாண்டவன் ஆ ஆ ஈசுரா இதற்கு நான் என் செய்வேன் என ஓலமிட்டான்.

ஏழைக்கிரங்கும் தொண்டீசுரர் ஊர் அதிகாரியின் சிறுபிள்ளை மீது ஆவேசித்து" நில் நில்" என்னுமுன்பே கட்டிய தாம்பு அறுந்துவிட்டது. "இவனது அன்பை உலகத்துக்கு வெளிப்படுத்தவே இச்செயல் செய்யப்பட்டது" என்று சொன்னவுடன் மருள் தெளிந்துவிட்டது. யாவரும் தாண்டவனது அன்பைப் பாராட்டினர். தொண்டீசர் திருவருளையும் கொண்டாடினார்கள்.

இதனை தொண்டீசுவரர் பதிகப் பாடலும் விளக்குகிறது.

தாண்டவன் எனும்பெயரான் தனி
நாதனை வணங்கிவந்தான்
ஆண்டவன் ஆட்கொண்டார் இந்த
அன்பினை யார் பெறுவீர்
நீண்டநாள் வாழகில்லீர் நெடு
மாலொடு அயன்வணங்கும்
ஊண் தரும் உறந்தைநகர் திருத்
தொண்டீச் சுரத்தானே

என்பது பதிகப்பாடல்.

திருத்தொண்டீசுவரம் கோயில் அம்மன் பெயர் வாரணியம்மன். ஈரோடு அய்யனாரப்பன் பள்ளு இலக்கியத்தில் பள்ளர் சமூகத்தினர் மழை வேண்டி

'வாரணி பங்காளனே மழைதாராய்'

என்று பாடுகின்றனர்.

28 சிவன் எப்படித் தொண்டீசன் ஆகலாம் ?

சிவபெருமானே!

பிரம்மாவிற்கு உலகத்தைப் படைக்க நீர்தான் வரம் கொடுத்தீர். பிரம்மா படைத்த உலகைக் காக்கும் பொறுப்பைத் திருமாலுக்கு நீரேஅளித்தீர். பேரரசனான பருவதராசன் மகளை மணம் செய்து கொண்டீர். எப்பொழுதும் பார்வதியை இடப் பாகத்தில் வைத்துள்ளீர். பொன் மயமான மேருமலை உமக்குச் சொந்தம். உலகப் புகழ் உடைய மறந்தை, புறந்தை மயிலை என்று பல பெயருடைய ஈரோட்டை உரிமையாகப் பெற்றீர். நீர் தேவாதி தேவர்க்கெல்லாம் அரசன். இப்படி இருக்க தொண்டீசன் என்ற பெயரை உமக்கு இட்டது யார்?

இதைக்குறிக்கும் பாடல்

மறையவனைச் செகம்படைக்க வரம்கொ டுத்தீர்
மாவுலகம் இரட்சிக்கை மாலுக்கு ஈந்தீர்
பருவதரா சன்மகளை இடத்தில் வைத்தீர்
பைம்பொனுரு மேருதனைப் படைத்தீர் பின்னும்
தரணி புகழ் உயர்மறந்தை புறந்தை என்ற
தகவுடைய மயிலை ஈரோடு பெற்றீர்
இறைஅரச னானஉமை தொண்டீசன் என்றே
இவ்வூரி லேபெயரை இட்டது யாரோ?

திருத்தொண்டீசுவரர் கோயில் கோபுரங்கள்

29

பள்ளிகொண்ட பெருமாள்

ஈரோடு கோட்டைப் பெருமாள் கோயில் பெருமாள் இன்று கஸ்தூரி அரங்கநாதர் என்று அழைக்கப் பெறுகிறார். ஆனால் பெருமாளின் பண்டைய பெயர் பள்ளி கொண்ட பெருமாள் என்பதேயாகும்.

கல்வெட்டுகளில்
'பள்ளிகொண்டருளுகிற தேவர்'
'பள்ளிகொண்டாழ்வார்'
'பள்ளி கொண்ட பெருமாள்'
'பள்ளி கொண்டு அருளிய பெருமாள்'
பள்ளிகொண்ட தேவர்'

என்ற பெயர்களைக் காணுகிறோம்.

திருச்சி திருவரங்கம் பள்ளிகொண்ட பெருமாள்
அரங்கத்துப் பெருமானடிகள்
ஆழ்வார் திருவரங்க தேவர்
அரங்கத்து ஆழ்வார்
அரங்கநாத தேவர்
கஸ்தூரி ரங்கநாதர்

என மாற்றம் பெற்றது போல ஈரோட்டிலும் பெருமாள் பெயர் மாற்றம் பெற்றார்.

காவிரி-கொள்ளிடம் இடையில் அரங்கம் உள்ளது போல பெரும்பள்ளம்-பிச்சைக்காரன் பள்ளம் இடையில் உள்ளதால் ஒரு புலவர் ஈரோட்டைத் திருவரங்கம் என்று பாடுகிறார். அரங்கத்தில் உள்ளவர் அரங்கநாதர் ஆனார்.

பெருமாள் திருஉரு சாளக்கிராமம். சுதையால் ஆனதால் அபிஷேகம் இல்லை. உற்சவமூர்த்திக்கே அபிஷேகம் நடைபெறும். மூலவர் அரங்கநாதர்க்கு வருடம் ஒரு முறை ஆனி மாதம் கேட்டை நட்சத்திரத்தில் தைலக்காப்பு நடைபெறும். இதை ஜேஸ்டாபிஷேகம் என்பர். சந்தனக்கட்டை, அகில், சாம்பிராணி, நாட்டு சர்க்கரை, தேன், வெட்டிவேர் இவை களை காய்ச்சிய தைலத்தில் பச்சைக் கற்பூரம், புனுகு, அரகஜா முதலிய வாசனைப் பொருள் கலந்து பூசப்படுவதால் வாசனைமிக்க கஸ்தூரி அரங்கநாதர் என்று பெயர் பெற்றார்.

பள்ளிகொண்ட பெருமாள் கோயில்

30 தெப்பக்குளத்தில் மைதானம்

முக்கியமான கோயில்களில் தெப்பக்குளம் இருக்கும். சிதம்பரத்தில் சிவகங்கை, மதுரையில் பொற்றாமரை, திருப்பதியில் கோனேரி, திருவாரூரில் கமலாலயம்.

ஈரோட்டில் சிவாலயம் திருத்தொண்டீசுவரர் கோயில், பெருமாள் கோயிலான பள்ளிகொண்ட பெருமாள் கோயில் இரண்டிற்கும் பொதுவாக கமலபுஷ்கரணி என்ற பெயரில் தெப்பக்குளம் ஒன்றிருந்தது.

இது கி.பி 1588 ஆம் ஆண்டு விசயநகர மன்னன் இரண்டாம் வீரவெங்கடபதிராயர் (1586-1614) காலத்தில் வெட்டப்பட்டது. தெப்பத் திருவிழா போன்றவை சிறப்பாக நடைபெற்றன. தெப்பக்குளம் அருகில் நந்தவனம் இருந்தது.

நாளடைவில் குளத்தில் நீர் இல்லை. பயன்பாடு இல்லாமல் படிகளும் சிதைந்தன. குப்பை கொட்டும் இடமாக மாறியது. பாதுகாப்பற்ற நிலை இருந்தது.

கோவை மாவட்ட ஆட்சியர் கோயில் நிர்வாகிகளிடம் குளத்தைப் பழுது பார்க்கிறீர்களா? மூடுகிறீர்களா? என்று கேட்டார். மூடுவது எளிதாக இருந்தது. குளம் மூடப்பட்டது. அந்த இடம் தெப்பக்குள மைதானம் என்று அழைக்கப்பட்டது. பொதுக் கூட்டங்கள் நடைபெற்றன.

அதன் பரப்பளவு 14900 சதுர அடி. அரசு அதன்மீது கண் வைத்தது. 18.10.1964 அன்று இந்த இடத்தை ரெவின்யூ புறம்போக்கு என்று அறிவித்து விற்பனை வரித்துறைக் கட்டிடம் கட்ட அரசு ஆணையிட்டது. (ஆணை என் 2494)

பயன்படுத்தாமல் இருந்த கோயில் நிர்வாகம் தனக்குரியநிலம் என்று வாதாடியது. 24.7.1970 அன்று நிலம் கோயிலுக்கு உரியதாக அறிவிக்கப்பட்டது (அரசு ஆணை எண் 2356).

திருமணமண்டபம், சமுதாயக்கூடம் கட்ட அறநிலையத்துறை உயர் அலுவலர்கள் பலமுறை வந்து பார்வையிட்டனர். ஒரு பயனும் இல்லை.

ஒரு முறை ஈரோடு நகராட்சி அவ்விடத்தில் வணிக வளாகம் கட்டத் தீர்மானித்து முயற்சி செய்தது. மாவட்ட ஆட்சியரிடம் பல சிவனடியார்கள் முறையிட்டு அந்த முயற்சியைத் தடுத்து நிறுத்தினர்.

குளம் மூடப்பட்டு 90 ஆண்டுகட்கு மேலாகியும் நகர் நடுவில் உள்ள கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புடைய அந்த நிலம் மைதானமாகக் கூட இல்லாமல் தேவையற்ற பழம் பொருளைக் குவிக்கும் பாழிடமாகவே உள்ளது.

பொது மக்கள் பயன்படுத்த சமூகக் கூடமாகவோ, வணிக வளாகமாகவோ பயன்படுத்தலாம். இம் மைதானத்தை வேறு நல்ல வழியில் பயன்படுத்த ஆலோசனை கூறலாம்.

விளையாட்டு மைதானமாக ஆக்கலாமே!

31 பக்தியில் சிறந்த பண்டைய மகளிர்

அக்காலத்தில் ஈரோட்டுப் பெண்கள் சிலர் பொழுது புலரும் முன் அதிகாலையில் எழுந்து தண்ணீர்க் குடத்துடன் காவேரியாறு சென்று குளித்துக் குடத்தில் தண்ணீர் எடுத்துக் கொண்டு வந்து வீடு சேர்ந்து தங்கள் கணவன்மார்களின் பூசைக்குத் தீர்த்தம் கொடுத்து தாங்கள் வழிபடும் இறைவனும் திருக்கோயில்களும் நீங்களே ஆவீர்கள் என்று கணவனை வணங்குவார்களாம்!

இதனை ஒரு பழம்பாடல் அழகாக வருணிக்கிறது. அப்பாடல்

பூவார் அதிகா லையில் எழுந்து
பொன்னி படிந்து நீர்க்குடமும்
புடைத்திட்டு எழுந்த மார்பதனில்
பொலியும் இரண்டு பொற்குடமும்

ஆவா என்ன நடைந டந்திட்டு
அசைந்து மெலிந்த கமலமுறும்
அன்ன நடையும் ஞானியராம்
அறிஞர் நடையும் தடுமாற

பூவால் அமைத்த தாளதினால்
பூற்றே யாம நடைநடந்து
போய்இல் சென்று தம்கணவர்
பூசா விதிக்கும் புனல் கொடுத்து

தேவா லயமும் தேவதையும்
தேவா நீயே எனத்தொழுகும்
திகழும் மாதர் கற்பதனால்
செறுக்கும் ஈரோடு எனும் பதியே!

என்பதாகும்.

ஈரோடு நகரம் அக்கற்புடைய பெண்களால் கர்வம் கொள்ளுகிறதாம்.

கோயில் திருப்பணி செய்த மகளிர் தேவன்சொக்கி, கங்காத்தாள், சிட்டன் காவி, பிள்ளையம்மை, கேசி, நம்பியம்மை, ஆளுடையாள், தாவந்தாவி, சிவகாமி ஆகியோர் சிலர். (கொங்குக் கல்வெட்டுகள்)

32 பெண்டிர் பெற்ற பெருமைப் பெயர்கள்

அக்காலத்தில் கொங்கு நாட்டுப் பெண்கள் தனிச் சொத்துரிமையோடு திருக்கோயில்களுக்குத் தானம் பல செய்தனர். திருக்கோயில் திருப்பணிகள் செய்தனர். சமய அடியாராக விளங்கினர். திருவிளக்கு வைத்தனர். அவர்கள் பெயர்கள் கல்வெட்டுகளில் செப்பேடு பட்டயங்களில் காணக்கிடைக்கின்றன. அவர்களில் சில பெயர்கள்

அரையவல்லி	முத்துப் பொன்னி
கோதைப் பிராட்டி	அழகிய நாச்சி
பெருநல்லாள்	சிறுநல்லாள்
தாயாண்டார்	உலகுடைய பிராட்டி
மூரி அமுதனார்	முக்கோக்கிழானடிகள்
பள்ளி கொண்டாள்	

இதில் சிலர் கோயில் தேவரடியாராக இருந்துள்ளனர்.

'மனைவி' என்பதற்கு 'மனைக்கிழத்தி' என்ற சொல்லே கொங்குக் கல்வெட்டுகளில் காணப்படுகிறது.

33 கிருஷ்ணன் கோயில்

கொங்கு நாட்டில் பண்டைய ஊர்கள் தோறும் சிவன் கோயில்கள் போலவே பெருமாள் கோயில்களும் பல பெயரில் உள்ளன. மிக அரிதாகவே திருமால் எடுத்த தசாவதாரங்களில் இராமன், கிருஷ்ணன் கோயில்கள் உள்ளன.

மக்கள் (சைவர்களும்) பாலகிருஷ்ணன், கிருஷ்ணன், கிருஷ்ணசாமி என்று பெயர்கள் வைத்துக் கொண்டாலும் கிருஷ்ணன் கோயில்கள் மிக அரிதாகவே உள்ளன.

ஈரோடு காவிரிக் கரையில், ஏறக்குறைய காவிரியின் தென்கரைப் பகுதியில் ஒரு பழமையான கிருஷ்ணன் கோயில் உள்ளது. முன்பு பெரிதாக இருந்து பின் சிறியதாக அமைக்கப்பட்டுள்ளது. இக்கோயில் வளாகத்தில் பெரிய விஷ்ணு சிலை ஒன்றும் உள்ளது. இக் கோயிலுக்கு நிலம் கொடையாக அளிக்கப்பட்டுள்ளதை ஒரு கல்வெட்டு கூறுகிறது.

கி.பி.922 ஆம் ஆண்டு ஈரோடு பெருமாள் கோயிலில் நவநீத கிருஷ்ணரை வெண்ணைக் கூத்தநாயனார் என்ற பெயரில் வழிபட்ட செய்தி கல்வெட்டில் தெரிய வருகிறது.

34 அகத்தியர் ஈரோடு வந்தார்

கயிலையங்கிரியில் சிவபெருமானுக்கும், பார்வதராசன் மகள் பார்வதிக்கும் திருமணம். தேவர்கள், ரிஷிகள், மக்கள் எல்லோரும் திருமணம் கண்டுகளிக்க வரவே பாரத நாட்டில் வடதிசை தாழ்வடையத் தென்திசை உயர்ந்தது. அதைச் சமம் செய்யச் சிவபெருமான் அகத்தியரைத் தென்திசை ஏகுமாறு பணித்தார். திருமணம் காண விழைந்த அகத்தியருக்கு ''நீர் நினைத்த இடமெல்லாம் யாம் எம் திருமணக்கோலம் காட்டுவோம்'' என்றார். அகத்தியர் தென் திசை வந்தார்.

பொதியமலை செல்லும் வழியில் அகத்தியர் ஈரோடு வந்தார் என்று தலபுராணம் கூறுகிறது.

பார்வதி தேவி சிவபெருமானிடம் வேண்டிப் பெற்றது இடப்பாகம். சிவாலயங்களில் பெரும்பாலும் இடப்பக்கமே அம்மன் கோயில்கள் இருப்பது வழக்கம்.

ஈரோடு சிவாலயம் திருத்தொண்டீசுவரர் கோயிலில் வாரணியம்மை கோயில் வலப்பக்கம் உள்ளது. அது திருமணக் கோலம். அகத்தியர் இங்கு வந்து சிவபெருமானை நினைத்து வணங்கவே சிவபெருமான் அகத்தியருக்குத் தன் திருமணக்கோலம் காட்டினார். அவ்வாறே கோயிலும் அமைந்தது என்பர்.

இதற்கேற்ப ஈரோடு திருத்தொண்டீசுவரர் கோயிலில் அகத்தியர் திருஉருவச்சிலையும் உள்ளது.



காவிரித் தோற்றம்
(ஈரோடு சின்னியம்பாளையம் காவிரிக்கரை, சாத்தம்பூர் வல்லாள ஈசுவரர் கோவில்)
அகத்தியர் கமண்டலத்தில் இருந்த காவிரியைக் காகம் கவிழ்த்ததன்
மூலம் காவிரி தோன்றியது.

35

இராவணன் முன்னோரின் லிங்கப் பிரதிஷ்டை

இராவணனும், அவன் முன்னோர்களும் மிகச் சிறந்த சிவபக்தர்கள். இராவணேசுவரன் என்று ஈசுவரப் பட்டம் பெற்றவன் இராவணன்.

இராவணனின் முன்னோர் மாலி, சுமாலி, மகிமாலி என்ற மூவர். அவர்கள் இமயம் சென்று கைலாயத்தில் சிவபெருமானை வணங்கி இலங்கை திரும்பிக் கொண்டிருந்தனர்.

விண்ணில் பறந்துவந்தவர்கள் மாலை நேரம் ஆனதால் சந்தியா வந்தனம் செய்ய எண்ணினர். அவர்கள் பூமியில் இறங்கிய இடம் ஈரோடு.

சந்தியா வந்தனம் செய்து வழிபட ஒரு பெரிய சிவலிங்கத்தைப் படைத்து வழிபட்டுப் பின் இலங்கை சென்றனர்.

அச்சிவலிங்கம் மகிமாலியால் பிரதிட்டை செய்யப்பட்டதால் மகிமாலீசுவரம் எனப்பட்டதாம். பிற்காலத்தில் அங்கு சிவாலயம் எடுக்கப்பட்டது. இதனை மகிமாலீசுவரர் பதிகப்பாடல் ஒன்று விளக்குகிறது.

மாலியென்பான் முதலாய மதித்தபெரும் குலஅரக்கர்
மணியே நின்றன்
காலியினம் புரக்கின்ற கருமுகில் வண்ணனுங் காணாக்
கமலத் தாளை
மாலிமயம் தனில்தவமே புரிந்துவரு வழிப்பூசை
மகிழ்ந்து செய்தார்
சாலிநிறை ஈரோட்டில் மகிமாலி ஈசன்எனச்
சார்ந்தாய் நாமம்.

இப்பாடல் 1927 ஆம் வருடம் பெரும்புலவர் வே.ரா. தெய்வ சிகாமணிக் கவுண்டர் பாடிய மகிமாலீசுவரர் பதிகத்தில் உள்ளது.

ஆனால் இக்கோயில் முதல் கொங்குச் சோழன் மகிமாலய இருக்குவேள் ஆன வீரசோழன் கட்டியது என்பது வரலாறு.

கருவறை வாயிலைவிட லிங்கம் பெரிதாக இருந்தால் அரக்கப் பிரதிட்டை, சமமாக இருந்தால் மனிதப் பிரதிட்டை, சிறிதாக இருந்தால் தேவப் பிரதிட்டை என்பர். இக்கோயிலில் கருவறை வாயிலை விட லிங்கம் பெரிதாக உள்ளதால் அரக்கப் பிரதிட்டை என்பர்.

கம்பராமாயணத்திற்கு சார்பு நூலாக எம்பெருமான் கவிராயர் 'தக்கை ராமாயணம்' இயற்றினார். எதிர் நூலாக புலவர் அ.மு. குழந்தை அவர்கள் இயற்றிய 'இராவண காவியம்' ஈரோடு சிவலிங்க விலாஸ் பதிப்பகம்தான் வெளியிட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

36 கரிகாலன் கட்டிய கோயில்

கரிகாலன்

ஈரோட்டில் காவிரிக் கரையோரம் ஒரு சிவாலயம் உள்ளது. நெடுநாள் பூசையில்லாமல் கோயில் சிதைவுற்றிருந்தது. பிறகு அன்பர்கள் பலரால் திருப்பணி செய்யப்பட்டு இப்போது நாட்பூசை, விழாக்கள் நடைபெறுகின்றன.

அக்கோயிலைக் கரிகால் சோழன் கட்டியதாகப் பூந்துறைப் புராணம் கூறுகிறது. பூந்துறைப் புராணம் பாடியவர் திருச்செங்கோடு மண்டகப்பாளையம் காளியண்ணக் கவிராயர். பூந்துறைப் புராணத்தில் கரிகாலச் சோழச் சருக்கத்தில் அதைக்குறிக்கும் தொடர்கள் உள்ளன. அப்பாடல்

"காவிரியின் கரையருகு ஈரோடை தன்னில்

கதித்திடும் லிங்கம்தனது பெயரால் செய்தான்"

என்பதாம். (பாடல் 12)

எனவே காவிரிக்கரைச் சிவன்கோயிலை "கரிகால சோழீசுவரர்" கோயில் என அழைப்பதே பொருத்தமாகும்.

இக்கோயில் திருப்பணியைக் கருங்கல்பாளையம் முத்துக் கருப்பணபிள்ளை, வரதப்ப செட்டியார், அருணாசல ஆசாரி மூவரும் செய்ததாக இக்கோயில் கல்வெட்டுக் கூறுகிறது. இக்கல்வெட்டு மூலம் கருங்கல்பாளையத்தின் சமூக ஒற்றுமை தெரிகிறது.

காவிரியின் கரைகள் கல்வெட்டில் 'கரிகாலக்கரை' என்றே குறிக்கப்படுகிறது.

37 பொன்மழை பூமழை பெய்தது

ஈரோடு திருத்தொண்டீசுவரர் கோயிலில் இரண்டு பெண்கள் தேவரடியாராக இறை பணி புரிந்துவந்தனர். மன்னன் ஒருவன் சிறு நல்லாள். பெருநல்லாள் என்ற அவ்விரு சேடிப் பெண்களையும் காம இச்சைக்கு ஆட்படுத்த ஆசை கொண்டான். நாங்கள் இறைபணி செய்பவர்கள், இல்லற வாழ்க்கையில் ஈடுபாடு கூடாது என்றனர் பெண்கள்.

அரசன் நீங்கள் தெய்வீகப்பணி செய்வது உண்மையானால் உங்கள் சக்தியைக் காட்டுங்கள் என்றார். அப்பெண்கள் வேண்டுகோளை ஏற்ற சிவபெருமான் ஈரோட்டில் இந்திரனைக் கொண்டு பொன்மாரி பூமாரி பொழியச் செய்தார். இந்நிகழ்ச்சியை

'சீரிய செங்கம லாலயம் மேவும் திருஎழில்மிக்கு

ஆரிரு மங்கையர்க் காஅயி ராவதம் தன்னில்வந்து

போரியல் வேல்விழி இந்திராணி நாயகன் பொன்னொடுபூ

மாரி பொழிந்ததும் ஈரோடு சூழ்கொங்கு மண்டலமே'

என்று வாலசுந்தரக் கவிஞரின் கொங்கு மண்டல சதகம் கூறுகிறது. சேடியர்க்காக அருட்செயல் நிகழ்த்தியதால் தொண்டீசுவரருக்குச் 'சேடீசுவரர்' என்றும் பெயர் உண்டு.

இந்நிகழ்ச்சி பல தனிப் பாடல்களிலும் இடம் பெற்றுள்ளது.

38 அழியாமல் தொடரும் கொடை

தமிழகக் கோயில்கள் பலவற்றிற்கும் பலரால் பற்பல கொடைகள் வழங்கப்பட்டன. இன்று அவை கோயிலுக்கு உரியனவாக இல்லை, கொடை கொடுத்தவர்கள் இக்கொடை சந்திர சூரியர் உள்ளவரை நின்று நிலைக்க வேண்டும் என்று கல்வெட்டாகப் பொறித்தனர்.

1276 ஆம் ஆண்டு சேமூர் ஈரோடு பெருமாள் கோயிலுக்குக் கொடையாகக் கொடுக்கப்பட்டது. 1527 ஆம் ஆண்டு பெருமாள், சிவன்கோயில் இரண்டிற்கும் லக்காபுரம் கொடையாகக் கொடுக்கப்பட்டது. இன்றும்

பெருமாள் கோயில் விஜயதசமி அம்புசேர்வை விழாவை லக்காபுரம் ஊரவர்கள், (ஆதிகுலம்) சேமூர் ஊரவர்கள் (பெருங்குடிகுலம்) இணைந்து நடத்துகின்றனர்.

லக்காபுரம் ஊரவர்கள் (ஆவகுலம்) ஐப்பசி பவுர்ணமியில் தொண்டீசுவரர் கோயிலில் அன்னாபிடேகம் செய்து அன்னதானம் செய்கின்றனர். இது அரிய நிகழ்வாகும்.

39

தர்காவிற்கு இந்துக்கள் கொடை !

மைசூர் உடையார் மன்னர் இரண்டாம் கிருஷ்ணராச உடையார் (1734-1766) காலத்தில் ஈரோட்டுப் பகுதி அவர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. ஈரோடு கோட்டையில் அவர் படையும், அதிகாரிகளும் இருந்தனர். தளபதியாக ஈரோட்டில் இருந்தவர் ரங்கயநாத திம்மரசய்யன். அவர் கீழ் தலைமை அதிகாரிகள் கந்தாசாரம், அட்டவணை, சேனைபாகம், சேர்வைகாரர் போன்ற பதவிப் பெயரில் சிலர் இருந்தனர்.

ஈரோடு காவிரிக்கரையில் உள்ள தர்காவின் பெயர் சேக் மசாய்கு சேக் அலாவுதீன் சாயபு மஜீத். மேற்கண்ட கோட்டை அதிகாரிகளான ஐந்து இந்து அதிகாரிகளும் இந்த இஸ்லாமிய தர்காவிற்கு வரும் அரதேசி, பரதேசி, பக்கிரிகள் ஆகியோருக்கு நாள் தோறும் உணவளிக்கவும், ஆடை கொடுக்கவும் 5 மா நிலம் நன்செய் பூமியைக் கொடையாகக் கொடுத்தனர். நாள் 12.6.1761.

அந்நிலம் வைராபாளையம் கரையைச் சேர்ந்த பீளமேடு பகுதியில் தோப்பு அருகில் இருந்தது. அது காலிங்கராயன் வாய்க்கால் பாயும் நன்செய் நிலம். சந்திர சூரியர் உள்ளவரை இக்கொடை நடக்க வேண்டும் என்று கூறியுள்ளனர். இந்தத் தர்மத்துக்கு யாரேனும் தீங்கு செய்தால், மெக்காவிலே பன்றியைக் குத்திக்கொன்ற தோஷத்துக்கும் தன் தாயாரைக் கூடின தோஷத்திற்கும் ஆளாவர் என்று கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது.

இந்த தர்கா மங்கம்மாள் சத்திரம் என்று ஒருவர் வழக்குத் தொடுத்தார் (1890. நெ.285). கல்வெட்டு ஆதாரம் காட்டி தர்கா நிர்வாகம் வெற்றி பெற்றது.

காவிரிக் கரை ஷேக் அலாவுதீன் தர்கா
(வலது ஓரம் கல்வெட்டுக் கல் உள்ளது)

40

வாகீச பக்த சமாஜம்
அப்பர் சுவாமிகள் மடம்

ஈரோட்டில் மகிமாலீசுவரர் கோயிலின் வடபுறம் அப்பர் சுவாமிகள்மடம் உள்ளது. 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் 1893ல் ஈரோடு தாசில்தாராக விளங்கியவர் ப.ந.தெய்வநாயக முதலியார். சென்னையைச் சேர்ந்தவர். சிறந்த சிவபக்தர். தேவாரத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர். நல்ல சமய நூல் பயிற்சி உடையவர்.

அவர் ஈரோட்டு அன்பர்களை ஒன்று கூட்டி வாகீச பக்த சமாஜம் என்ற பெயரில் ஒரு அமைப்பை ஏற்படுத்தினார். வாகீசர் என்பது திரு நாவுக்கரசர் பெயர் (அப்பர்).

பின்பு மக்கள் வாகீச பக்த சமாஜத்தை அப்பர் சுவாமிகள் மடம் என்று அழைக்கலாயினர்.

ஈரோட்டு அன்பர்கள் மட்டுமல்ல, கிராமப்புற மக்களும் பலர் பங்கு கொண்டனர். அவர்களில் ஒருவர் பெரும்புலவர் வே.ரா.தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்கள் தாய்வழிப் பாட்டனார் சின்னத்தம்பிக் கவுண்டர். சின்னத்தம்பிக் கவுண்டர் தெய்வநாயக முதலியார் நினைவாகத்தான் தன்பேரனுக்குத் தெய்வசிகாமணி என்று பெயர் வைத்தார்.

சமாஜத்தில் திருமுறை வகுப்புக்கள் நடத்தப்பட்டன. சிறுவர், சிறுமிகட்கு தேவாரம், திருவாசகம் கற்பிக்கப்பட்டது. பல சமயச் சிற்றிலக்கியங்கள் இயற்றப்பட்டு அவையில் அரங்கேற்றம் செய்யப்பட்டது. (எண் 65, 66 பார்க்க)

1896 ஆம் வருடம் வேலாயுதக் கவிஞர் இயற்றிய சேடீசர் மாலை அரங்கேற்றம் செய்யப்பட்டது.

துதிபரவு கலியுக நாலாயிரத் தொளாயிரத்
தொண்ணூற்றி ஏழ்மன்
மதவாண்டு மீனரவி தேதி பதினார்
சுக்கிரவாரம் பூரம்
நதிபரவும் ஈரோடை சேடீசர் மேல் தமிழை
நலமாய் வேலா
யுதக் கவிஞன் தெய்வநா யகப்பிரபு
அளவக்களத்தில் உரைத்திட்டானே

என்பது அதைக் குறிக்கும் பாடலாகும்.

தெய்வநாயக முதலியார் 'தெய்வநாயகப் பிரபு' என்று சிறப்பிக்கப்பட்டுள்ளார்.

இன்று அப்பர் சுவாமிகள் மடம் வள்ளலார் தொடர்பான பணிகட்கும் இடம் தந்துள்ளது.

41 ஈரோடு நகரம் ஆனது

16.9.1871 அன்று ஈரோடு நகராட்சி உதயமானது. அப்போது நகர பரிபாலன சபை என்று அழைக்கப்பட்டது.

ஈரோடு கிராமம், சூரம்பட்டி கிராமம், பீளமேடு கிராமம், பிராமண சின்ன அக்கிரகாரம் கிராமம் என்ற நான்கு ரெவின்யூ கிராமங்களின் பகுதிகளை ஒன்றாக இணைத்து ஈரோடு நகராட்சியை அமைத்தனர். அப்போதைய மொத்தப் பரப்பளவு 3.22 சதுரமைல். (834 ஹெக்டேர்). அப்போது ஈரோட்டின் மக்கள் தொகை 10201.

தலைவர் மெக்ரிகர் (A. MACGREGOR) உட்பட உறுப்பினர்கள் ஏழுபேரும் நியமன உறுப்பினர்கள். ஏ. மெக்ரிகர் 25.9.1866 முதல் 1.1.1867 வரை கோவை மாவட்ட ஆட்சியராக இருந்தவர். 1885 இல் தான் தேர்தல் மூலம் நகரபரிபாலன சபை உருவானது.

42 ஈரோடு மாநகரம் ஆனது

29.12.2007 முதல் ஈரோடு மாநகராட்சி ஆனது. பல ஊர்கள் ஈரோடு மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டன.

இது மாநகரச் சின்னம்

ஈரோடு மாநகரம்

43 ஊருக்குள் நுழைந்தால் வரி

சாலைகள் அமைப்பதும் பராமரிப்பதும் அரசின் முக்கியப் பணிகளில் ஒன்று. முன்பு பொதுப்பணித் துறை தான் (PWD) சாலைகளை நிர்வகித்து வந்தது. சாலைகளைப் பராமரிக்க நில வரியில் ஒரு பகுதி ஒதுக்கப்பட்டது.

1871 ல் ஊராட்சிச் சட்டத்தின்படி நகராட்சி. பஞ்சாயத்துக்கள் அமைக்கப்பட்டு பொதுப்பணித் துறை சாலைகளை ஊராட்சிகளிடம் ஒப்படைத்தது. நிலவரி அரசுக்குப் போய்விடும்.

எனவே நிதி பற்றாக் குறையால் சாலைகளை நிர்வகிக்க 'சுங்கவரி' வசூலிக்கப்பட்டது. ஊர் எல்லைகளில் சுங்கச் சாவடிகள் அமைக்கப்பட்டன. வணிகப் பொருள் செல்லும் சாலைகளில் 10 மைலுக்கு ஒரு சுங்கச் சாவடி அமைக்கப்பட்டது.

ஈரோடு நகராட்சியின் முதல் வரைபடத்தில் TOLE GATE (சுங்கச்சாவடி) மூன்று இடங்களில் குறிக்கப் பட்டுள்ளது. பின்னர் எல்லாப் பாதைகளிலும் அமைக்கப்பட்டது.

தலைச்சுமை, பாரவண்டி, எருது, கழுதைகள்மேல் வரும் பொருள்களுக்கும், வண்டி களுக்கும் உரிய தொகை சுங்கமாக வசூலிக்கப்பட்டது. 1931ல் வாகனங்களுக்கு வரி விதிக்கப்பட்டபின் சுங்கவரி நீக்கப்பட்டது.

தமிழ் மன்னர்கள் ஆட்சிக் காலத்திலும் 'சுங்கம்' இருந்தது. 'சுங்கச்சாவடி' 'சுங்கக்காரன்' என கல்வெட்டில் காண்கிறோம். சுங்கம் வசூலிப்பவர் சுங்கக்காரன் எனப்பட்டான். திங்களூர் அருகே சுங்கக்காரன் பாளையம் என்ற ஊர் உள்ளது.

முதல் குலோத்துங்கன் (1070) சுங்கம் நீக்கி சுங்கம்தவிர்த்த சோழன் என்று பெயர்பெற்றான்.

'புவிராச ராசர் மனுமுதலோர் நாளில்

தவிராத சுங்கம் தவிர்த்தோன்'

என்று இலக்கியம் புகழ்கிறது.

நவீன சாலைகளில் வாகனங்கள் செல்ல இன்றும் சுங்கம் வசூலிக்கப்படுகிறது. சந்தைகட்குப் பொருள் கொண்டு செல்லவும் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

திருச்சிராப்பள்ளியிலும், கோயம்புத்தூரிலும் 'சுங்கம்' என்றே ஓரிடம் அழைக்கப் பெறுகிறது. தஞ்சாவூர் அருகில் ஓரிடம் 'சுங்காந்திடல்' என்று குறிக்கப் பெறுகிறது.

44

நாய்க்கும் வரி

இப்பொழுது ஒருவர் எத்துணை நாய்களை வேண்டுமானாலும் வளர்க்கலாம். ஆனால் 80 ஆண்டுகட்கு முன்பு வீட்டில் நாய் இருந்தால் நகராட்சிக்கு வரி செலுத்த வேண்டும். அதிலும் ஆண் பெண் நாய்க்கு வரியில் வேறுபாடு உண்டு.

1920 ஆம் வருஷத்திய மதராஸ் டிஸ்ட்ரிக்ட் முனிசிபாலிடி ஆக்ட் 78ன் படியும், 1930 ஆம் வருஷத்திய 10 ஆவது ஆக்ட் படியும் ஒரு நாய்க்கு எட்டணா வரி செலுத்த வேண்டும்.

பின் ஆண் நாய்க்கு 6 மாதத்துக்கு ரூபாய் 2.00. பெண் நாய்க்கு 6 மாதத்துக்கு ரூபாய் 3.00 என உயர்த்தப்பட்டது. (தீர்மானம் என் 511). வரிகட்டி அடையாள வில்லையை நாயின் கழுத்தில் கட்டிவிடுவர்.

நாயை மனிதர்க்குத் தோழன் என்கிறார் பாரதியார். "நாயனையார் கேண்மை தழுவிக் கொள்ள வேண்டும்" என்பர் சான்றோர். நன்றி மிக்கது நாய்.

கொங்கு இலக்கியம் நீதி ஒழுக்கம் 'நாயின்றி வேட்டை ஆடாதே' என்கிறது. பழந்தமிழர் நன்றியுடைய நாய்க்கும் நடுகல் எடுத்தனர்.



கல்வெட்டு : 'கோவிவன் என்னும் நாய்
இரு கள்ளரைக் கடித்துக்
காத்திருந்தவாறு'

45 சாதி பார்த்தால் அனுமதியில்லை

80 ஆண்டுகட்கு முன் ஈரோடு ஓட்டல்களில் பார்ப்பனர், பார்ப்பனர் அல்லாதார் ஆகியவர்கள் பயன்படுத்தத் தனித்தனி இடங்கள் இருந்தன.

"பிராமணாள் சாப்பிடுமிடம்" "இதராள் சாப்பிடும் இடம்" என எழுதப்பட்டிருக்கும். தாழ்த்தப்பட்டவர்கட்கு இடமே இல்லை. ஓட்டலுக்குள் நுழையக் கூடாது.

அரசாங்க மருத்துவமனைகளில் கூட இவ்வழக்கம் இருந்ததுதான் கொடுமை! தஞ்சை அரசினர் ராஜா மிராஸ்தார் மருத்துவமனையில் "பிராமணர் வார்டு" என்ற போர்டு அண்மைக்காலம் வரை இருந்தது.

30.9.1932 ஆம் ஆண்டு ஈரோடு நகர பரிபாலன சபையில் உறுப்பினர் கேசவலால் காளிதாஸ் சேட் ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். "ஆதி திராவிடர்கள் உட்பட சாதிமத வேறுபாடு பாராட்டும் காபி கிளப்புகளுக்கோ ஓட்டல்களுக்கோ அவை நடத்த லைசென்ஸ் கொடுக்கக் கூடாது" என்பது அது.

இத் தீர்மானத்தை உறுப்பினர் எம். சிக்கைய நாயக்கர் வழிமொழிய தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. அப்போதைய சபைத்தலைவர் கே. ஏ. ஷேக் தாவூது சாயபு அவர்கள்.

முன்பு மருத்துவமனைகளில் கூட 'பிராமணர் வார்டு' தனியாக இருந்தது.

இரயில்வே நிலைய உணவகங்களில் இவ் வேறுபாடு இருந்தது. தந்தை பெரியார் போராடி அதை ஒழித்தார்.

சோழர் ஆட்சிக் காலத்தில் சாதிக்கு ஒரு நீதியே கடைப்பிடிக்கப்பட்டது.

சாதி ஆதியில் இல்லை. பாதியில் வந்ததுதான்.

1952 ஆம் வருடம் இந்நூல் தொகுப்பாசிரியர் எட்டாம் வகுப்புப் படிக்கும் போது எழுதிய வரிகள்

"குத்திப் பார்த்தால் இரத்தம் ஒன்றே
குத்தாமல் நோக்கின் உயிர் ஒன்றே"

என்பது.

'சாதிகள் இல்லையடி பாப்பா – குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்'

– பாரதியார்

'சாதிகள் இருக்கின்றது என்போனும் இருக்கின்றானே'

– பாரதிதாசன்

46 பிரப் ரோடு ஏன் பெயர் மாறவில்லை ?

அந்தோணி வாட்சன் பிரப்

ஈரோட்டில் சாலைகளில் இருந்த இங்கிலாந்து ராணி. மாநில கவர்னர், மாவட்ட ஆட்சியர் முதலிய வெளிநாட்டவர் பெயர் அனைத்தையும் மாற்றி விட்டோம். ஆனால் 1897 முதல் 1934 வரை லண்டன் மிஷனில் பாதிரியாராக ஈரோட்டில் பணியாற்றிய அந்தோணி வாட்சன் பிரப் பெயரில் அமைந்த பிரப்ரோடு பெயர் மட்டும் மாற்றப்படாமல் அப்பெயரிலேயே பன்னீர்செல்வம் பூங்கா முதல் அரசு மருத்துவ மனை வரை உள்ளது.

1861 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவில் பிறந்த அந்தோணிவாட்சன் பிரப் பிராட்டஸ்டென்ட் மதபோதகர் பயிற்சி பெற்று லண்டன் மிஷன் நிர்வாகத்தில் 1894ல் கோவையில் பணி நியமனம் பெற்ற பிரப் 1897 ல் ஈரோட்டுக்கு மாற்றப்பட்டார். மனைவி ரோஸ்ட்டா ஜேன் பிரப், மகன் ஹெர்பர்ட் பிரப் உடன் ஈரோடு வந்தார்.

ஈரோட்டுப் பகுதி கல்வியில் பின்தங்கி இருந்ததால் நகரம் இணைந்த பகுதியில் 14 பள்ளிகளையும், கிராமப் புறங்களில் 80 பள்ளிகளையும் தொடங்கினார். ஈரோடு பள்ளியில் ஏழை மாணவர்கட்கும், வெளியூர் மாணவர்கட்கும் மூன்று வேளையும் இலவச உணவு அளித்தார். அதனால் அப்பள்ளி போர்டிங் பள்ளி என்றே அழைக்கப்பட்டது.

1904 ஆம் ஆண்டு ஈரோடு நகர பரிபாலன சபைத் தலைவராக விளங்கினார்.

ஈரோட்டில் பிளேக், மலேரியா, அம்மை நோய்அடிக்கடி ஏற்பட்டது. மருத்துவ வசதி இல்லை. பிரப் 1909ல் வேலூரிலிருந்து டாக்டர் மைகன்சி ரீஸ் என்ற அம்மையாரை அழைத்து வந்து தன் வீட்டு முன் கொட்டகை போட்டு இலவச மருத்துவம் செய்தார். திருமணம் செய்து கொண்டு டாக்டர் விடை பெற்றதால் டாக்டர் மிஸ் ஹால்டா போலார்டு அப் பணியை ஏற்றார். போலார்டம்மா என்று மக்களால் அன்புடன் அழைக்கப்பட்டார்.



பிரப் சேகரித்த ஈரோட்டுக் கலைப் பொருள்களில் சில

28.10.1912ல் மருத்துவ மனைக்கு ஆட்சியர் ஆர். ஹெமிங்வே அடிக்கல் நாட்டினார். மருத்துவமனை கட்டும்போதே நோயாளிகளைப் பாயில் படுக்க வைத்து மருத்துவம் பார்த்தனர்.

பெட்ரோமாக்ஸ் விளக்கால் அறுவை, பிரசவ சிகிச்சை செய்யப்பட்டது. 1917 ஆம் ஆண்டு மருத்துவமனை முழுமை பெற்றது. 1937ல் தான் மின்சாரம் வந்தது. 1923 ல் 9 மாதம் மகப்பேறு பயிற்சியும், 1933ல் மூன்றாண்டு செவிலியர் பயிற்சியும் தொடங்கப்பட்டது.

முதல் உலகப் போரில் மகன் ஹெர்பர்ட் பிரப் காலமானார். அவர் நினைவாக சென்னிமலையில் மருத்துவமனை தொடங்கினார். 1934ல் ஓய்வு பெற்று ஆஸ்திரேலியா திரும்பி 1936ல் காலமானார்.

கலை ஆர்வலரான பிரப் ஈரோட்டின் பல கலைப் பெருட்களைச் சேகரித்தார். இச்சிறந்த பணிகட்காகவே பிரப் இன்றும் நினைவு கூரப்படுகிறார்.

பெருந்துறை வட்டத்தில் 'பிரப் நகர்' என்ற ஊர்ப் பெயர் உள்ளது.

இருநூற்றுக்கும் மேற்பட்ட கலைப் பொருட்களை ஆஸ்திரேலியா கொண்டு சென்றார். அவர் மறைவிற்குப் பின் அவை ஆஸ்திரேலிய அருங்காட்சியத்திற்கு அளிக்கப்பட்டன.

33 பொருட்களை சென்னை எழும்பூர் அரசு அருங்காட்சியகம் பெற்றுள்ளது. ஈரோட்டுக் கலைப்பொருள் ஈரோடு அருங்காட்சியகத்திற்கு கொண்டு வரப்படவேண்டும்.

அண்மையில் பிரப் நினைவு நாளை சி. எஸ். ஐ. மக்கள் மிகச் சிறப்பாகக் கொண்டாடினர்.

47

பிரப் நினைவு தேவாலயம்

1830ல் இலண்டன் கிறித்துவச் சங்கம் தன் கிறித்துவப் பணியை ஈரோட்டில் தொடங்கியது. முதல் தேவாலயம் 1892ல் பழைய ரயில்வே நிலையம் அருகில் கட்டப்பட்டது. 1894ல் அந்தோணி வாட்சன் பிரப் ஆஸ்திரேலியாவிலிருந்து கோயமுத்தூர் வந்து இரண்டு ஆண்டு பணி செய்தார். 1897ல் ஈரோட்டுக்கு மாற்றப்பட்டார்.

1927ஆம் ஆண்டு ஆலயம் கட்டத் திட்டமிடப்பட்டுப் பணிகள் தொடங்கி 1930 ஆம் ஆண்டுபணி முடிக்கப்பட்டது. "ஏசுவே மூலைக்கல்" என்ற கல்வெட்டு உள்ளது. 1930ல் பேராயர் அசரியா அவர்களால் அர்ப்பணிக்கப்பட்டு "பிரப் நினைவாலயம்" என்று பெயரிடப்பட்டது. சிமெண்ட் உபயோகப் படுத்தாமல் சுண்ணாம்புக் காரையை முட்டைகளுடன் அரைத்துக் கட்டப்பட்டது. பூமியிலிருந்து சுவர் எவ்வளவு உயரமோ அவ்வளவு ஆழம் பூமிக்குள் அஸ்திவாரம் போடப்பட்டுள்ளது. சுவரில் வழவழப்பை உண்டாக்க முட்டை பயன்படுத்தப்பட்டது. இந்த ஆலயத்தில் பயன்படுத்தப்பட்ட கற்கள் கரூரிலிருந்து கொண்டு வரப்பட்டன. சாளரங்கள் கரூரில் செய்யப்பட்டுக் கொண்டுவரப்பட்டன.

இக்கோயில் "இந்தோசரோசனிக்" கட்டடக் கலைப்பாணியில் கட்டப்பட்டுள்ளது. ஈரோட்டிலுள்ள இசுலாமியர்களை ஈர்ப்பதற்காக இந்த அமைப்புடன் கட்டப்பட்டதெனக் கூறப்படுகிறது. இக்கோயிலின் முகப்பில் "கடவுள் ஒருவரே" (யாகுதா) என்று தமிழிலும் உருது மொழியிலும் எழுதப்பட்டுள்ளது.

தேவாலயப்பணி நடைபெற்றபோதே பிரப் மனைவி ரோஸ்ட்டா ஜேன் பிரப் காலமானார். தேவாலய வளாகத்திலேயே அடக்கம் செய்யப்பட்டார். அவர் கல்லறை ஒன்று மட்டுமே பிரப் தேவாலய வளாகத்தில் உள்ளது.

பிரப் நினைவு தேவாலயம்

48

பாப் புலி : பாப்லி

தமிழறிஞர்
H.A. பாப்லி

ஈரோடு லண்டன் மிஷன் திருச்சபையில் பணியாற்றிய எச். ஏ. பாப்லி நன்கு தமிழ் கற்றவர். ஈரோட்டில் "ஈரோடு இலக்கியச் சங்கம்" (Erode Literary Society) என்ற அமைப்பை ஏற்படுத்தி இலக்கிய நிகழ்ச்சிகள் பல நடத்தி வந்தார்.

ஒரு முறை மேனாடு சென்று வந்த தமிழர் ஒருவர் தம் பயண அனுபவம் குறித்துப் பேசும்போது தனக்கு தமிழில் பேச இயலாது என்று கூறி ஆங்கிலத்தில் உரையாற்றினார். தமிழர் பேசிய ஆங்கிலத்தை ஆங்கிலேயரான எச். ஏ. பாப்லி அழகுத் தமிழில் மொழி பெயர்த்தார்.

பாப்லி திருக்குறள் அறத்துப்பாலை ஆங்கிலத்தில் 1932ல் மொழிபெயர்த்தார். தமிழில் பாடல் இயற்றுவார். பஞ்சகச்ச வேட்டி கட்டி கையில் சப்பளாக் கட்டையுடன் தமிழில் காலட்சேபம் செய்வார். 'நவீனக்கல்வி' என்ற இதழ் நடத்தினார். புலவர் அ. மு. குழந்தை பாப்லியைப் பற்றி பாப்புலி வெண்பா என்ற சிறு நூலை இயற்றினார் (பாட்டுப்பாடுவதில் புலி).

மறைமலையடிகள் தலைவராக இருந்த திருவள்ளுவர் நாட்கழகத்தின் துணைத் தலைவராக விளங்கினார். 1926 இல் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி தொடங்கினார். ஓய்வு பெற்ற போது வழியனுப்பியவர்கள் தந்தை பெரியாரும். மீனாட்சி சுந்தர முதலியாரும்.

49 கம்பெனி வழங்கிய மின்சாரம்

தமிழ்நாட்டில் பைகாரா (1933), மேட்டூர்(1937), பாபநாசம் ஆகிய இடங்களில் நீர் மின்சாரம் எடுக்கப்படுகிறது. இவற்றை உருவாக்கிய பெருமை ஹென்றி ஹோவேர்டு என்ற மின்துறைத் தலைவரைச்சாரும்.

ஈரோடு நகருக்கு மின்சாரம் வழங்கும் உரிமை பெற ஈரோடு நகராட்சி வற்புறுத்திக் கேட்டது. ஆனால் கிடைக்கவில்லை. உரிமை 'சேலம் - ஈரோடு எலக்ட்ரி சிட்டி டிஸ்ட்ரிபூசன் கம்பெனிக்கு" வழங்கப்பட்டது.

அந்தக் கம்பெனி சார்பில் ஈரோட்டுக்கு மின்சாரம் வழங்கியவர்கள் "ஆக்டோவியஸ் ஸ்டீல் அண்ட் கோ லிமிடெட்" என்ற கம்பெனியாகும். தமிழ்நாட்டில் உள்ள மூன்று பெரிய மின் கட்டுப்பாட்டு நிலையங்களில் ஈரோடு ஒன்று (மற்றவை சென்னை, மதுரை).

இப்போது செக்கானூர், நெருஞ்சிப் பேட்டை, கோனேரிப்பட்டி, ஊராட்சிக்கோட்டை, சமய சங்கிலி, வெண்டி பாளையம் போன்ற பல இடங்களில் காவிரியில் தடுப்பணை கட்டி மின்சாரம் எடுக்கப்படுகிறது.

50 தண்ணீர்த் தொட்டிகள்

தீயணைப்பு நிலையம் அவசரத்துக்குப் பயன்படுத்திக் கொள்ளவும், நகரில் தேவைப்பட்டால் மக்கள் உபயோகத்திற்கும் ஆங்காங்கு பெரிய தண்ணீர்த் தொட்டிகள் ஈரோடு நகரில் கட்டி அவற்றில் நீர் நிரப்பப் பட்டிருந்தது. அவ்வாறான தண்ணீர்த் தொட்டிகள் இன்றைய பிரப் ரோடு டெலிபோன் பவன் அருகிலும், ஈசுவரன் கோயில் வீதியிலும், கோட்டை தெப்பக்குளம் மைதானம் அருகிலும், மேட்டூர் ரோட்டில் பூம்புகார் அருகிலும் இருந்தன.

கால்நடைகள் குடிப்பதற்காக தண்ணீர்த் தொட்டிகள் மணிக்கூண்டு அருகில் நேதாஜி ரோடு ஆர்.கே.வி ரோடு சந்திக்கும் இடத்தில்இருந்த வண்டிப்பேட்டை அருகிலும், கோட்டைப் பெருமாள் கோயில் அருகிலும் இருந்தன.

ஈஸ்வரன் கோயில் தண்ணீர்த் தொட்டி மைதானத்தில் பஞ்சத்தால் வாடிய நெசவாளர்கட்குத் கஞ்சித் தொட்டி வைத்துக் கஞ்சி கொடுக்கப்பட்டது. அதன்பின் அது கஞ்சித்தொட்டி மைதானம் என்று வழங்கப்பட்டது

51 ஈரோடு வாக்காளர் சங்கம்

10.7.1939 அன்று ஈரோடு கொங்கலம்மன் கோயில் எதிரில் உள்ள தியாகராயர் சதுக்கத்தில் ஈரோடு நகர வாக்காளர் சங்கம் தொடக்க விழா நடைபெற்றது. இதன் அமைப்பாளர்கள் ஆர். திருவேங்கடசாமி, எச். பாட்சா சாகிப், எஸ். எஸ். ஆராக்கிய சாமி, ப. சண்முக வேலாயுதம், எ. சங்கரய்யா ஆகியோர்.

தொடக்கவிழா விசேஷ அழைப்பாளர்கள் சி. என். அண்ணாத்துரை, சென்னை வி. எஸ். தேவசகாயம் ஆகியோர். இச்சங்கத்தின் முக்கிய நோக்கங்கள்

1. நகரசபை நிர்வாகம் பற்றி மக்களுக்கு எடுத்துரைத்தல்.
2. பொதுமக்கள் சார்பாக நகர சபையிடம் வாதாடுதல்.
3. ஆங்கில மாதத்தின் கடைசி நாளில் தியாகராயர் சதுக்கத்தில் பொதுக் கூட்டம் நடத்துதல்
4. 1939 செப்டம்பரில் வாக்காளர் வாரம் கொண்டாடப்பட்டது.

நகரின் பல பகுதிகளிலும் இச்சங்கத்தின் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

52 சுயேச்சை அரசியல் சங்கம்

1932 ஆம் வருடம் ஈரோடு சுயேச்சை அரசியல் சங்கம் என ஒரு சங்கம் தொடங்கப்பட்டது. இதன் செயலாளராக இருந்து இயக்கியவர் பி. எஸ். மைதீன் பாட்சா. இச்சங்கத்தின் சார்பில் ஈரோடு நகராட்சி மன்றத்தில் அ. சண்முகம் என்பவர் உறுப்பினராக இருந்தார். இச்சங்கத்தின் சார்பில் ஈரோடு கொங்கலம்மன் கோயில் எதிரில் இருந்த மைதானத்தில் கூட்டங்கள் நடக்கும்.

1939 இல் ஈரோடு நகராட்சி மன்றத்திற்கு இரண்டு வார்டுகளுக்கு இடைத்தேர்தல் நடைபெற்றது. இச் சங்க ஆதரவில் இரண்டு வார்டுகளுக்கும் இருவர் சுயேச்சையாகப் போட்டியிட்டனர். சுயேச்சைகட்குப் பச்சைப் பெட்டியும் எதிர்த்துப் போட்டியிட்ட காங்கிரஸ் கட்சிக்கு மஞ்சள் பெட்டியும் அளிக்கப்பட்டது. வாக்கு விபரம்

1. ஈ. வெ. கிருஷ்ணசாமி நாயக்கர் (சு) 132 (பச்சைப்பெட்டி)
   எம். ஆர். செலமேலு (காங்) 61 (மஞ்சள்பெட்டி)
2. டாக்டர் வி. ஜே. டேவிட் (சு) 270 (பச்சைப்பெட்டி)
   டாக்டர் எம். கிருஷ்ணசாமி (காங்) 22 (மஞ்சள் பெட்டி)

53 தேசிய உணர்வு

ஈரோட்டில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் பல தெருக்களுக்கு ஆங்கிலப் பெருமக்கள் பலர் பெயர்கள் வைக்கப்பட்டிருந்தன. ஈரோட்டுத் தெருக்களுக்கு அன்னியர் பெயர் வைக்கப்பட்டிருப்பது அவமானம் என்றுகருதி படிப்படியாக நகராட்சி நிர்வாகத்தினர் அவைகளை தேசிய உணர்வூட்டிய விடுதலை வேள்வியில் பங்கு கொண்ட பெருமக்கள் பெயர்களாக மாற்றினர்.

பழைய பெயர்	மாற்றிய புதுப்பெயர்
இராணி தெரு	ஆசாத் தெரு
மெக்ரிகர் தெரு	சிவசண்முகம் பிள்ளை தெரு
மெக்வெப்ஸ்டர் தெரு	முத்துரங்க முதலியார் தெரு
லார்டு நேப்பியர் தெரு	நேத்தாஜி தெரு
எர்ஸ்கின் தெரு	காந்திஜி தெரு
பிராடி தெரு	ஜின்னா தெரு
பிஷர் தெரு	ஆர். கே. வெங்கடசாமி நாயக்கர் தெரு
வெல்ஸ் பார்க்	பன்னீர் செல்வம் பூங்கா

இவர்களில் A. மெக்ரிகர்1871 (1874 - 1875). A.மெக்வெப்ஸ்டர் (1878 - 1879). அலெக்ஸாண்டர் பிராடி (1885 - 1888) ஆகியோர் நகராட்சி மன்றத் தலைவர்களாக இருந்தவர்கள்.

இதேபோல ஆங்கிலப் பெயர்களும் தேசியப் பற்றாளர் பெயர்களாக மாற்றப்பட்டன. பீப்பிள்ஸ் பார்க் வ.உ.சி.பூங்கா ஆயிற்று.

விடுதலைப் போராட்ட காலத்தில் தேசியத் தலைவர்கள் அனைவரும் ஈரோடு வந்துள்ளனர்.

ஈரோடு மக்கள் பலர் அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டனர். சிறை சென்றனர்.

தீரன் சின்னமலை (17.4.1756 - 31.7.1805) போராட்டத்தில் முக்கியப் பங்கு வகித்த வாரணவாசிக்கவுண்டர். வெள்ளைக் கவுண்டர் இருவரும் ஈரோட்டினர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் க.ர.நல்லசிவம் அவர்கள் வேண்டுகோளை ஏற்று கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் சின்னமலை மாளிகை என்று பெயரிட்டார்.

54 இங்கிலாந்து மன்னர் முடிசூட்டு விழா

ஈரோடு சீனிவாசா பூங்காவில் காரனேஷன் ஹால்,
காக்ஸ் ரீடிங் ரூம் திறப்பு விழாவில் டாக்டர். ப.சுப்பராயன்

இந்தியாவின் சக்கரவர்த்தியாக இருந்த ஏழாம் எட்வர்டு மறைவிற்குப்பின் மன்னராக ஐந்தாம் ஜார்ஜ் இங்கிலாந்தில் முடிசூட்டிக் கொண்டார். ஆயினும் இந்தியாவுக்கு வந்து டெல்லியில் முடிசூடும் விழாவை மிக ஆடம்பரமாக நடத்தி "கார்னேசன் தர்பார்" மூலம் இந்தியர்களுக்கு வியப்பையும், பயபக்தியையும் ஏற்படுத்த வேண்டும் என்று விரும்பியது பிரிட்டிஷ் அரசு. டெல்லியில் 1912 ஆம் ஆண்டு முடிசூட்டு விழாவை நடத்தியது. அந்த விழாவைப் போல் நாடெங்கும் பல ஊர்களில் நடத்தினர்.

ஈரோட்டிலும் அவ்விழா12.12.1912 அன்று நடைபெற்றது. விழாவின் சார்பில் கீழ்க்கண்ட உறுதிமொழியை ஈரோட்டு மக்கள் ஏற்றனர்.

"இந்தியாவிற்கு விஜயம் செய்ததற்காக மாட்சிமை தங்கிய சக்ரவர்த்தி அவர்களுக்கும், மகாராணியார் அவர்கட்கும், ஈரோடு வாசிகள் தங்கள் இதய பூர்வமான நன்றியைத் தாழ்ந்த வணக்கத்தோடு தெரிவித்துக் கொள்கிறோம். மாட்சிமை தங்கிய சக்ரவர்த்தி அவர்களுக்கும், பூலோக ராமராஜ்யமாக நடைபெறும் ஆங்கிலேய ஆட்சிக்கும் நாங்கள் என்றென்றும் விசுவாசமாயிருப்போம் என்பதையும் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறோம்". இறுதியில் பிரிட்டன் தேசிய கீதம் பாடப்பட்டது. முடிசூட்டு விழாவின் நினைவாக ஈரோட்டில் ஒரு பெரிய மைதானத்துக்கு "கார்னேஷன் கிரௌண்டு" என்று பெயரிடப்பட்டது. மீதி இருந்த தொகையைக் கொண்டு இன்றைய வ.உ.சி.பூங்காவில் 'கார்னேஷன் ஹால்' கட்டப்பட்டது. அதில் காக்ஸ் ரீடிங் ரூம் தொடங்கப்பட்டது.

கார்னேசன் ஹால், காக்ஸ் ரீடிங் ரூம் (1927)

55

ஈரோட்டில் காந்தியடிகள்

14.10.1896 அன்று முதல் முறையாக காந்திஜி தமிழகம் வந்தார். தன் ஆறாவது வருகையின் போது 1920 ஆம் ஆண்டுதான் முதல் முறையாக காந்திஜி ஈரோடு வந்தார்.

ஈரோட்டுக்கு முதல் வருகை

12.08.1920 தமிழகம் வந்த காந்திஜி திருச்சியிலிருந்து கள்ளிக்கோட்டை செல்லும் வழியில் 18.08.1920 அன்று அதிகாலை 3.30 மணிக்கு முதல் முறையாக ஈரோடு வந்தார்.

பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் அன்புடன் அந்த நேரத்திலும்அவரை வரவேற்றனர். காந்திஜியுடன் சையது முத்துஜா சாகிப், மதுரை வழக்கறிஞர் ஜார்ஜ் ஜோசப் உட்படப் பலர் ஈரோடு வந்தனர்.

இரயில்வே நிலையத்திற்கு வெளியே ஓரமாக அலங்கார மேடை ஒன்று அமைக்கப் பட்டிருந்தது. கூட்டத்தினர் வந்தே மாதரம், அல்லாஹீ அக்பர் என முழக்கமிட்டனர்.

மூன்று வரவேற்புரைகள் படிக்கப்பட்டன. திருவாளர்கள் பெரியார் ஈ.வெ. இராமசாமி, கே.ஏ.ஷேக் தாவூது, ஆர்.கே.வெங்கிடுசாமி நாயக்கர் ஆகியோர் வரவேற்றவர்களில் முக்கியமானவர்கள்.

காந்திஜி சுருக்கமாகப் பேசுகையில். இந்த அதிகாலை நேரம் ஆண்டவனை வழிபடுவதற்கு மிகவும் பொருத்தமான நேரமே தவிர பொதுக்கூட்டம் நடத்துவதற்கு உரிய நேரம் அல்ல. ஆகையால் தங்களுக்கு வேண்டிய தைரியத்தை அளிக்குமாறு முகமதியர்கள் அல்லாவைப் பிரார்த்தனை செய்ய வேண்டும்.

இன்னலுக்கு உட்பட்டிருக்கும் முஸ்லிம் சகோதரர்களுக்கு வேண்டிய உதவிகள் செய்வதற்கான நல்லெண்ணத்தை அருளுமாறு இந்துக்கள் தங்கள் கடவுளை வழிபட வேண்டும் என்று பேசினார்.

ஈரோட்டிலேயே ஓய்வெடுத்துக் கொண்டு காலைச் சிற்றுண்டியை முடித்துக் கொண்டு காந்திஜி காலை 6.30 மணிக்குக் கள்ளிக்கோட்டை புறப்பட்டு பிற்பகல் 2.30 மணிக்குக் கள்ளிக்கோட்டை சென்றடைந்தார்.

19ஆம் தேதி மங்களூர் சென்றுவிட்டு திருப்பூர் ஈரோடு வழியாக 20 ஆம் தேதி இரவு 9.30 மணிக்குச் சேலம் வந்தடைந்தார். முக்கியமானவர்கள் ஈரோடு புகைவண்டி நிலையத்தில் சந்தித்தனர்.

இரண்டாவது வருகை

கோவை செல்லும் வழியில் திருச்சியிலிருந்து வந்த காந்திஜி 25.09.1921 அன்று அதிகாலை 3.25க்கு ஈரோடு வந்தார். அன்று ஈ.வெ.ரா. பெரியார் இல்லத்தில் தங்கினார். எல்லோருக்கும் இராட்டையில் நூல் நூற்றுக் காண்பித்தார்.

அன்று மாலை 2 மணிக்குக் கோவை புறப்பட்டு மாலை 4.30மணிக்கு திருப்பூர் வரவேற்பை ஏற்றுக் கொண்டு 6.40 மணிக்குக் கோவை சென்றார். 26.09.1921 அன்று மாலை 4.25க்கு சேலம் செல்லப் புறப்பட்டு ஈரோடு வழியாக இரவு 12.30 மணிக்குச் சேலம் வந்தடைந்தார்.

மூன்றாம் வருகை

சேலம் வழியாக இரயிலில்08.03.1925 அன்று காந்திஜி ஈரோடு வந்தார். ஈரோட்டில் புகைவண்டி நிலையத்தில் வரவேற்பளிப்பதாக ஏற்பாடு இருந்தது. ஆனால் ஈரோட்டில் ஆரவாரமான கட்டுக் கடங்காத மக்கள் கூட்டத்தின் காரணமாக யார் காந்திஜிக்கு வரவேற்பு அளிக்க வேண்டுமென்று நினைத்தார்களோ அவர்களால் அண்ணல் அருகே வர முடியாமல் போய்விட்டது.

காந்திஜியும் வெளியே வந்து வரவேற்பைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. அன்று ஈரோட்டில் தொழிலாளர்கள் மாநாடு ஒன்று நடைபெறுவதாக இருந்தது. தென்னிந்திய இரயில்வே தொழிலாளர்கள் மாநாட்டின் சார்பாக ஒரு வரவேற்புரையை எழுதிக்கொண்டு வந்திருந்தார்கள். அன்று இரயில்வே நிலையத்திற்கு ஈ.வெ.ரா. அவர்களும், நகரப் பிரமுகர்களும் வந்திருந்தார்கள்.

நான்காம் வருகை

11.02.1934 அன்று திருச்சி வழியாகக் கரூர் வந்த காந்திஜி பிற்பகல் 5 மணிக்கு கொடுமுடி வந்தார். அங்கு கே.பி.சுந்தராம்பாள் அவர்களும், மற்றவர்களும் காந்திஜியை வரவேற்றனர். ஆறு மணிக்கு ஈரோடு வந்த காந்திஜி ஈசுவரன் கோவில் வீதியில் உள்ள கேசவலால் காளிதாஸ் சேட் வீட்டில் சிறிது நேரம் தங்கி ஈரோடு பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

இன்றைய வ.உ.சி. பூங்காவிற்கு மக்கள் பூங்கா என்று அன்று பெயர் (peoples Park). அங்கு நகராட்சி சார்பில் தலைவர் கான் பகதூர் ஜனாப் கே.ஏ.ஷேக் தாவூது அவர்கள் காந்திஜிக்கு வரவேற்புரை வாசித்தளித்தார்.

தாலுக்கா போர்டு சார்பில் அதன் தலைவர் வி.எஸ்.ராஜாக் கவுண்டர் வரவேற்புரை வாசித்தார். வணிகர்கள் சங்கம், சுதேசி ஜவுளி வர்த்தகர்சங்கம், ஷராப் வர்த்தகர் சங்கம், அரிசன சேவா சங்கம் ஆகியவை சார்பிலும் ஈரோட்டில் வரவேற்புரை அளிக்கப்பட்டது.

லண்டன் மிஷன் சமுதாயப் பயிற்சிப் பள்ளியைச் சேர்ந்த மாணவர்கள் தாங்கள் நெய்த பாய் ஒன்றை காந்திஜிக்கு அளித்தனர். அடக்க முடியாத பெருங்கூட்டத்தின் காரணமாகக் காந்திஜி அதிகம் பேச முடியவில்லை.

அன்று மாலை ஈ.வெ.ரா.பெரியார் அவர்களின் இல்லத்திலும், மக்கள் பூங்காவிலும் காந்திஜி வருகையை எதிர்த்துக் கறுப்புக் கொடி கட்டியிருந்தனர்.

சுயமரியாதை இளைஞர் சங்கத்தினர் காந்திஜி வருகையை எதிர்த்து ஊர்வலம் ஒன்றையும் நடத்தினர். 1920, 1921, 1925 ஆகிய ஆண்டுகளில் காந்திஜியை ஈரோட்டில் வரவேற்ற ஈ.வெ.ரா.பெரியார் 1934 ஆம் ஆண்டு வருகையை எதிர்த்தார்.

56

காந்தியடிகள் நினைவு

ஈரோட்டுப் பொது மக்கள் ஐந்து இடங்களில் காந்திஜிக்கு சிலை வைத்து மரியாதை செய்துள்ளனர். மாநகராட்சி வளாகம். ஊராட்சி ஒன்றிய வளாகம். கருங்கல் பாளையம். வ.உ.சி.பூங்காவில் உள்ள இரண்டு சிலைகளும் காந்தியடிகள் வாழ்நாளிலேயே வைக்கப்பட்டவை.

முதல் சிலை 9.4.1927 அன்று நகராட்சி மன்றத் தலைவர் டி.சீனிவாச முதலியார் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட பூங்கா (அப்போதைய பெயர் சீனிவாசா பார்க்) திறக்கப்பட்ட நாளில் வைக்கப்பட்டது. சிலையைத் திறப்பு விழாச் செய்தவர் சென்னை மாகாண கவர்னர் விஷ்கவுண்ட கோஷன் என்பவர். வ.உ.சி. பூங்காவில் உள்ள இரண்டாவது சிலை ஆர். கே. வெங்கிடுசாமி நாயக்கர் நகராட்சிமன்றத் தலைவராக இருந்த போது 1.10.1939 அன்று வைக்கப்பட்டது. திறப்புவிழாச் செய்தவர் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஓ.பி.ராமசாமி ரெட்டியார். காந்தி நகரும், காந்திஜி சாலையும் ஈரோட்டில் உண்டு.

முதல் சிலை (9.4.1927)

கவர்னர் விஷ்கவுண்ட் கோஷன்

காந்தி சிலை திறப்பு 1.10.1939

57

பந்தலைப் பிரித்த நேருஜி

விடுதலைப் போராட்டக் காலகட்டத்தில் ஒரு முறை பண்டித ஜவகர்லால் நேரு ஈரோடு வந்தார். இன்றைய வ. உ. சி. பூங்காவில் (அன்றைய பீப்பிள்ஸ் பார்க்) பொதுக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கேசவலால் காளிதாஸ் சேட் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். நேருவை வரவேற்று மேடைக்கு அழைத்துச் சென்றனர்.

கூட்டத்தைச் சுற்றிலும் ஒருமுறை பார்த்தார். மக்கள் சுட்டெரிக்கும் வெயிலில் காத்திருந்தனர். நேரு மேலே பார்த்தார். மேடையில் மட்டுமே வெயிலுக்குக் கொட்டகை போடப்பட்டிருந்தது.

இதைப் பார்த்த நேருஜி ஆவேசமானார். மக்கள் வெயிலில் காய்கிறார்கள். எனக்கு மட்டும் பந்தலா ? என்று கூறி மேசை மீதேறிப் பந்தலைப் பிரிக்க முற்பட்டார். அவர் கருத்துக்கு ஏற்பத் தொண்டர்கள் பந்தலைப் பிரித்தனர்.

பேச முடியாது என்று கோபித்துக் கொண்டு போன நேருஜியை எம். ஏ. ஈசுவரன் சமாதானப்படுத்தி அழைத்துக்கொண்டு வந்தார். பின்னர் நேருஜி சொற்பொழிவாற்றினார்.

ஈரோட்டில் மிக முக்கியமான தெரு ஒன்றிற்கு நேரு பெயர் வைக்கப்பட்டுள்ளது.



58

பாரதியார் வருகை

31.7.1921இல் பாரதியார் வருகை புரிந்த
கருங்கல்பாளையம் பாரதி வாசக சாலை

1921ஜூலை 31 அன்று ஈரோட்டில் பழைய புகைவண்டி நிலையத்தில் இரயிலில் பாரதியார் வந்திறங்கினார். கருங்கல்பாளையம் பாரதிவாசகசாலை ஆண்டு விழாவிற்கு அவரை கே.எம்.தங்கப் பெருமாள் பிள்ளை அழைத்திருந்தார். தன் ஈரோடு வருகை பற்றி "சக்திதாசனின் ஈரோடு யாத்திரை" என்ற தலைப்பில் 'சுதேச மித்திரன்' இதழில் இரண்டு நாட்கள் எழுதினார் (5, 6.8.1921).

முதல் நாள் உரையை அமரர் ம.ப.பெரியசாமித்தூரன் அவர்களும், இரண்டாம் நாள் உரையை பாரதி ஆய்வாளர் ரா.அ.பத்மநாபன் அவர்களும் கண்டு பிடித்து வெளியிட்டுள்ளனர்.

இதோ பாரதியாரே கூறுகிறார்,

"ஈரோடு புகைவண்டி நிலையத்தில் இறங்கினேன். வரவேற்க வந்திருந்தவர்கள் என்னை அறிந்துகொள்ளவில்லை. நானும் என்னை இன்னார் என்று காட்டிக் கொள்ளவில்லை. கட்டை வண்டி ஒன்று கிடைத்தது. ஒன்றரையடி நீளம் மாடு ஒரு சிறு பூனைக்குட்டிபோல் இருந்தது. நான் ஒன்று, வண்டிக்குரியவன் இரண்டு. அவனுக்குக் கீழே கூலிக்கு வண்டி ஓட்டும் சிறுவன் ஒருவன் எங்கள் மூவரையும் மூன்று பர்வதங்களாக நினைத்து அந்த மாட்டுப்பூனை இழுத்துக்கொண்டு சென்றது. அங்கிருந்து மூன்று கல் தொலைவில் உள்ள கருங்கல்பாளையம் என்ற கிராமத்துக்குச் சென்றேன்.

கருங்கல் பாளையத்தில் ஆண், பெண் எல்லோரும் மகாயோக்கியர்கள். மகா பக்திமான்கள். புத்திக்கூர்மையிலும், சுறுசுறுப்பிலும், தேசாபிமானத்திலும் மிகவும்

பாராட்டுக் குரியவர்கள். அங்கே ஒரு புஸ்தகசாலை இருக்கிறது. வாசக சாலை காரியதரிசி ஒரு வக்கீல். மிக நல்ல மனிதர். மகாபுத்திமான். தேசபக்தியில் மிகவும் பாராட்டுக்குரியவர்".

சென்னை சென்ற பாரதியார் தங்கப்பெருமாள் பிள்ளைக்கு ஆங்கிலத்தில் ஒரு கடிதம் எழுதினார். தனது படைப்புக்கள் அனைத்தையும் நூலாக வெளியிட ஈரோட்டுப் பெருமக்கள் உதவ வேண்டும் என்றும், தீப்பெட்டிபோல ஒவ்வொரு வீட்டிலும் அவை இருக்க வேண்டும் என்றும் எழுதியுள்ளார்.

1916 இல் கருங்கல்பாளையத்தில் கே.எம். தங்கப்பெருமாள் பிள்ளை அவர்கள் தொடங்கி நடத்திய பாரதி வாசக சாலையில் 1921 ஜூலையில் ஈரோடு வந்த பாரதியார் அங்கு 'மனிதனுக்கு மரணமில்லை' என்ற தலைப்பில் பேசினார்.

பெண் தெய்வம். பெண் விடுதலையின்றி உலக வாழ்க்கை இல்லை. காதலால் சாகாதிருக்க முடியும். காதல் வளர்ந்தால் போர் வராது. கற்பு நிலை ஆண் பெண் இருவருக்கும் சமம். நீயே கடவுள் தத்வமசி. அன்பே சிவம். சிவன். ஏகோவா. அல்லா எல்லாம் ஒரே பொருள் எனும் அன்பால் சாகாது வாழலாம். அது ஒரு கலை என்று பாரதியார் பேசினார்.

"பிரகலாதனைப் போன்ற தெய்வசக்தியும், மன்மதனைப் போன்ற ஏக பத்தினி விரதமும் உடைய ஒரு மனிதனுக்கு மரணமில்லை".

அடுத்தநாள் 1.8.1921 சுதேசிகள் ஏற்பாடு செய்திருந்த பொதுக்கூட்டத்தில் ஒரு வாய்க்கால் கரையில் (காரை வாய்க்கால்) பேசினார். தலைப்பு "இந்தியாவின் எதிர்காலம்".

ஆனால் சென்னை சென்ற பாரதியார் சில நாட்களில் அமரர் ஆனார். பாரதியார் கடைசியாகத் தன் வாழ்நாளில் கலந்து கொண்ட நிகழ்ச்சி ஈரோடு வருகை தான்.

பாரதியார் தானேமுகச்சவரம் செய்து கொண்டு குளிக்காமல் வீட்டுக்குள் சென்றதும், ஒரு முஸ்லிம் வீட்டில் சாப்பிட்டதும், பூணூல் இல்லாமல் இருந்ததும் பரபரப்பாகப் பேசப்பட்டது.

அதனால் தங்கப் பெருமாள் பிள்ளை அவர்கள் மனைவி பார்வதியம்மாள் பாரதியாருக்குக் கொடுத்தபட்டம் "ஆச்சாரம் இல்லாத பிராமணன்". தங்கப் பெருமாள் பிள்ளையின் வக்கீல் உடையை அவர் மனைவி பார்வதியம்மாவுக்குப் போட்டு பெண்கள் படிக்க வேண்டும் என்றார்.

வழிச்செலவுக்கு அளித்த பணத்தை வாங்க மறுத்து விட்டார். நீண்ட நோட்டுப் புத்தகங்களில் எழுதி, பெட்டியில் அடுக்கி வைத்திருந்ததைக் காட்டி அச்சிட ஆளுக்கு, நூறு ரூபாய் "ஷேர் கேபிட்டல்" கொடுக்கக் கூறினார். யாரும் கொடுக்கவில்லை. பின்னர் அது குறித்துத் தங்கப் பெருமாள பிள்ளைக்கு ஆங்கிலத்தில் கடிதமும் எழுதினார்.

ஈரோடு கேசவலால் காளிதாஸ் சேட் "காளிதாஸ் பிலிம்" என்ற பெயரில் 1935ல் "மேனகா" என்ற படம் எடுத்தார். அதில் தான் முதன் முதலில் "வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி" என்ற பாரதியார் பாடல் இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது.

ஈரோடு மாவட்ட நிர்கவாகம் சார்பில் மாவட்ட ஆட்சியர் திரு.த. உதயச்சந்திரன் அவர்கள் பழமை மாறாமல் வாசகசாலைக் கட்டிடத்தைப் புதுப்பித்தார்.

59

தியாகராயர் சதுக்கம்



பிட்டி தியாகராயர்

ஈரோடு கொங்கலம்மன் கோயில் எதிரில் முன்பு ஒரு மைதானம் இருந்தது. அந்த மைதானத்திற்குத் "தியாகராயர் சதுக்கம்" என்று பெயர் வழங்கியது. அம்மைதானத்தில் பல நிகழ்வுகள் நடைபெற்றன.

தியாகராயர் 'பிட்டி' தியாகராயர் என்றும். வெள்ளுடை வேந்தர் என்றும் அழைக்கப் பட்டவர். 1887 இல் பி.ஏ.பட்டம் பெற்ற அவர் டி.எம்.நாயர், டாக்டர் சி.நடேசன். பனகல் அரசர் பனகண்டி ராமராயனிங்கர் ஆகியோருடன் இணைந்து பார்ப்பனர் அல்லாதவர் நன்மைக்காக "தென்னிந்திய நல உரிமைச் சங்கம்" என்ற அமைப்பபைத் தோற்று வித்தார். அது நீதிக்கட்சி என்றும் அழைக்கப்பட்டது.

திராவிடன் (தமிழ் 1.6.1917) ஆந்திரப் பிரகாசிகை (தெலுங்கு 10.6.1917) JUSTICE (26.2.1917) இதழ்கள் தொடங்கினார். 1920 ஆம் ஆண்டிலேயே சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் பகல் உணவு அளிக்கச் செய்தார். 1852ல் பிறந்த இவர் 1925 ஆம் ஆண்டு மறைந்தார். சர்.இராவ்பகதூர், திவான் பகதூர் பட்டம் பெற்றவர்.

சென்னையில் இவர் பெயரால் அழைக்கப்படும் தியாகராயர் நகர் இன்று T.நகர் என்று அழைக்கப்படுகிறது. நமது பன்னீர்செல்வம் பூங்கா P.S. பார்க் என்று அழைப்பதைப் போல்.

60

அலி சௌக்

ஈ.ரோட்டின் மையப் பகுதியான மணிக்கூண்டு அருகில் நேதாஜி சாலை, ஆர்.கே.வி சாலை பிரியும் இடத்தில் விசாலமான இடம் இருந்தது. மக்கள் பயன்பாட்டுக்கு ஒரு தண்ணீர்த் தொட்டியும் இருந்தது. அந்த இடத்துக்கு 'அலி சௌக்' என்று முன்பு பெயர் வழங்கியது.

காந்தியுகம் தொடங்கியபோது அவருடன் மிகவும் நெருக்கமாகப் பழகிய தொண்டர்களில் மிக முக்கியமானவர்கள் மௌலானா சௌக்கத் அலி, மௌலானா முகம்மதலி சகோதரர்கள். இளையவர் முகம்மதலி காந்திஜிக்கு நெருக்கமானவர்.

1920 ஆம் ஆண்டு அலி சகோதரர்கள். அபுல் கலாம் ஆசாத், ஹக்கீம் அஜ்மல்கான் ஆகியோர் ஈ.ரோடு வந்தவர்கள் பெரியார் இல்லத்தில் தங்கினர். அவர்களுடன் பேசிய பெரியார்

அலி சகோதரர்கள்

"மகாத்மா காந்திக்கு உலகம் அடக்கம். அந்த மகாத்மா இந்த மௌலானா முகம்மதலி ஜேப்பில் இருக்கிறார்"

என்றார். விடுதலை இயக்க சார்பில் அடிக்கடி ஈ.ரோடு வந்த அலி சகோதரர்கள் நினைவாகவே அலி சௌக் என்ற பெயர் வைக்கப்பட்டது.

காரை வாய்க்கால் மைதானம் காந்தி சதுக்கம் எனப்பட்டது.


அலி சௌக் மணிக்கூண்டுப் பகுதி
பழைய தோற்றம்

61 விடுதலை வேண்டிய அமைப்புக்கள்

1. பாரதி வாசக சாலை

ஈரோடு கருங்கல் பாளையத்தில் வாத்தியார் வீட்டுத் தோன்றல் தங்கப் பெருமாள் பிள்ளை 12 வயதில் தந்தையை இழந்தும் 21 வயதில் பி. ஏ. தேர்ச்சி பெற்று 24 வயதில் வழக்கறிஞர் ஆனார்.

1916 ஆம் ஆண்டு கருங்கல்பாளையத்தில் பாரதி வாசக சாலை தொடங்கிப் பலருக்கு விடுதலை உணர்ச்சியை ஊட்டினார். திரு. வி. க. நாவலர் வெங்கடசாமி நாட்டார். வரத ராஜுலு நாயுடுவையும். 1921 இல் பாரதியாரையும் ஈரோட்டுக்கு வரவழைத்த பெருமைக்கு உரியவர். காங்கிரஸ் இயக்கத்தில் தீவிரமாக உழைத்தார். இளம் வயதில் 6. 3. 1926 அன்று காலமானார். பெரியாரின் குடியரசு இதழ் இவர் அளித்த கொடை

2. இந்துஸ்தான் சோசலிஸ்ட் குடியரசுப்படை

1932ல் இதன் மாநாடு ஈரோட்டில் நடைபெற்றது. நவஜவான் பாரத் சபா என்றும் கூறுவர். இம்மாநாட்டிற்கு நேதாஜி வருவதாக இருந்தது. வரவில்லை. தலைவர் கேசவலால் காளிதாஸ் சேட். முக்கிய உறுப்பினர்கள் எஸ். பி. வெங்கடாசலம். எம். ஏ. ஈசுவரன். எஸ். சி. தியாகராசன் ஆகியோர்.

3. இளைஞர் சன்மார்க்க சங்கம்

1936 இல் எம். ஏ. ஈசுவரன் அவர்களால் தொடங்கப்பட்ட சங்கம். இது பக்தி அமைப்பு அல்ல. விடுதலைக்குப் பாடுபடுவதே சன்மார்க்கமாகும் என்ற கொள்கையை உடையது.

4. தேசிய வாலிபர் சங்கம்

1939 இல் தொடங்கப்பட்டது. இதன் முக்கிய உறுப்பினர்கள் எஸ். பி. வெங்கடாசலம். கோவிந்தசாமி. மு. நடேசன். போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் மகன் முருகேசன் ஆகியோர். 1942 ஆகஸ்ட் போராட்டத்தின் போது காங்கிரஸ் தடை செய்யப்பட்டதால். இந்தசங்கம் மூடி சீல் வைக்கப்பட்டது. வங்கிக்கணக்கு முடக்கப்பட்டது. இச்சங்கம் இடதுசாரி நோக்கம் உடையது.

5. ஜவகர் வாலிபர் சங்கம்

இதன் தலைவர் நகராட்சி மன்றத் தலைவராக இருந்த ஆர். கே. வெங்கிடுசாமி நாயக்கர். 1942 இல் இச்சங்கமும் தடை செய்யப்பட்டது.

6. பாரதி வாலிபர் சங்கம்

மேற்கண்ட இரண்டு சங்கமும் தடை செய்யப்பட்டதால் இப்பெயரில் சங்கம் அமைக்கப்பட்டது. இதன் தலைவர் வழக்கறிஞர் கணபதிசுப்பையா. எஸ். பி. வெங்கடாசலம் துணைத்தலைவர். செயலாளர் பசுபதி. இச்சங்கத்தில் சேர கட்டணம் 4 அணா. வாரம் 1 சிட்டா கதர் நூல் கொடுக்க வேண்டும். இதன் இரசீதின் பின்புறம் சங்கத்தின் நோக்கம் அச்சிடப்பட்டிருந்தது.

62

17ஆம் நூற்றாண்டு நாடகம்

அய்யனாரப்பன் கோயில்

ஈரோட்டின் கிழக்கு எல்லையில் காலிங்கராயன் கால்வாயின் மேல்புறம் அய்யனாரப்பன் கோயில் உள்ளது. தமிழ் நாட்டிலும். குறிப்பாகக் கொங்கு நாட்டிலும் அய்யனார் வழிபாடு சிறப்பாக விளங்கியது. ஈரோடு அரசு அருங்காட்சியகத்திலும். கலைமகள் பெண்கள் மேல் நிலைப்பள்ளி அருங்காட்சியகத்திலும் பல அய்யனார் சிலைகள் உள்ளன.

உழவுத் தொழிலை அடிப்படையாக வைத்து எழுதப்பட்ட உழவர் இலக்கியம் பள்ளு நூல்களாகும். ஈரோடு அய்யனாரப்பன் மீது புலவர் முத்துக் கருப்பன் என்பவர் ஒரு பள்ளு நாடக நூல் இயற்றினார்.

முத்துக்கருப்பன் இயற்றிய அய்யனாரப்பன் பள்ளு நாடக நூலை சஞ்சீவி என்பவர் ஆடிக்காட்டி மக்களை மகிழ்வித்தாராம். அந்நாடகம் காலிங்கராயன் கரையில் உள்ள அய்யனாரப்பன் கோயிலில் தான் நடை பெற்றிருக்க வேண்டும் என்ற குறிப்பு அப்பாடல் பகுதியில் உள்ளது.

'காலிங்க ராயர் கடாட்சத்து னாலே
சாலவே இந்தத் தரணியில் வாழும்
குடியான வர்கள் கூடிய சபையில்
வடிவான பள்ளை வந்துமே ஆடிய
சஞ்சீவி தனக்குச் சதுருடன் செம்பொன்' கொடுத்தனராம்.

புலவர் வே.ரா. தெய்வசிகாமணிக்கவுண்டர் தொகுப்பில் உள்ள இப்பள்ளளு ஓலைச்சுவடி பேரூர் சாந்தலிங்கர் திருமடத்தில் உள்ளது. இன்னும் அச்சாகவில்லை.

63

ஈரோட்டார் இதழ்கள்

ஈரோடு நகராட்சி விருந்தினர் மாளிகை

இதழ்ப் பட்டியல் வியப்பை ஏற்படுத்தலாம். பல இதழ்கள் நின்று விட்டன. தொடர்ந்து நடப்பன சிலவே!

1.	எஸ். அற்புதம்	-	இரட்சிப்பின் தொனி
2.	பி. ஆசீர்வாதம்	-	ஆலயமணி
3.	ப. ஆறுமுகம்பிள்ளை	-	கொங்கு வேள்
4.	சு. இரத்தினசபாபதி	-	சமதர்மம், பிரசண்ட மாருதம்
5.	ஏ.பி. இராசசேகரன்	-	பூச்சரம்
6.	வேலா. இராசமாணிக்கம்	-	குறளியம்
7.	புலவர் செ. இராசு	-	கொங்கு, கொங்குமலர்
8.	சீ. கோ. இராமசாமி	-	விவேக சித்தன்
9.	சி. இலக்குவனார்	-	குறள்நெறி
10.	ரெ. கந்தசாமி	-	தெரிந்த கதை
11.	கலைமகள் பள்ளி	-	கலங்கரை விளக்கம்
12.	அ. மு. குழந்தை	-	வேளாளன், தமிழோசை
13.	டி. சங்கரலிங்கம்	-	அனுபவ ஆசான்
14.	சு. மா. சண்முகசுந்தரம்	-	கவியமுதம், தளபதி
15.	தி. அ. சண்முகசுந்தரம்	-	கைத்தறி
16.	மு. சதாசிவம்	-	வளரும் தமிழ் உலகம்

17. சந்திரா மனோகரன் - சிகரம்
18. ப.சண்முக வேலாயுதம் - ஈரோடுவாசி, ஈரோட்டுப்பாதை, பகுத்தறிவு
19. டாக்டர் சாந்தி துரைசாமி - நம்தோழி
20. கி.சாமிநாதன் - சுயமரியாதைத் தொண்டன்
21. சிவலிங்கம் - சுகாதார போதினி
22. பி.கே.சின்னசாமி - கொங்கு குரல்
23. மு.சின்னசாமி - சமநீதி
24. ஜெ.சுத்தானந்தன் - செங்குந்தம்
25. சி.சுப்பண்ணாசாரி - விசுவநேசன்
26. சுப்பையா - பெரியார் பாதை
27. செங்கோலரசு - தமிழினமே எழுக
28. கு.சேதுராமன் - ஈரோட்டு முழக்கம், ஏர் உழவன், உணர்ச்சி
29. த.சு.அ.தமிழ்க்குமரன் - தமிழ் மணம்
30. தமிழன்பன் - அரிமா நோக்கு
31. வெ.ந.திருமூர்த்தி - அறிவுச்சோலை (கவிதை ஏடு)
32. வி.துரைராசன் - எழுப்புதல் எதிரொலி
33. சீனி தேவராசன் - கவிக்குயில்
34. க.ர.நல்லசிவம் - கீழ்பவானி விவசாயி, அன்னை நிலம், ஏர்முரசு
35. நாச்சிமுத்து - உணர்ச்சி, ராசிபலன்
36. அரங்க நாராயணசாமி - கவிதைவகுப்பு
37. எம்.பரமசிவம் - கொங்கு வேளாளர் குரல்
38. பாண்டுரங்கன் - கற்பகம்
39. எச்.எ.பாப்லி - நவீனக்கல்வி
40. சேலம் பாலன் - துளி
41. எஸ்கேஎம்.மயிலானந்தன் - மனவளக் கலைஞன், அன்பொளி, ஆன்மீக நெறி, நுகர்வோர் காவலன், கோழி நண்பன்
42. டி.என்.மாணிக்க சாஸ்திரி - புதுமலர்
43. எஸ். மீனாட்சி சுந்தரனார் - ஈரோடு நகர மித்திரன்
44. கே.பி.முத்து - குலக்கொடி, வியாபாரத்தந்தி, வியாபார மித்திரன்
45. ல.கி.முத்துசாமி - பித்தன்(குழு)
46. தி.அ.முத்துசாமிக்கோனார் - கொங்கு நாடன்
47. கே.எஸ்.டி.முரளிதரன் - ஜீவசக்தி
48. ரகீம் - மறைவழி
49. ரஷீத் - இளைஞன்

50. வ.வெங்கடாசலம் - புரட்சி(1951)

51. வேதமுத்து - சிறுவர் அறிவுக்கதிர்

இவையன்றி விசைத்தறி. ஜீவிய பிரியதரிசினி. பட்டாம்பூச்சி முதலிய இதழ்களும் வெளிவந்தன.

தந்தை பெரியார் இதழ்கள்

1. குடி அரசு (2.5.1925)
2. ரிவோல்ட் (7.11.1928)
3. புரட்சி (26.11.1933)
4. பகுத்தறிவு (28.4.1934)
5. விடுதலை (3.7.1937)
6. ஜஸ்டிசைடு (1944)
7. ஜஸ்டிஸ் (1945)
8. உண்மை (14.1.1970)
9. மாடர்ன் ரேஷனலிஸ்ட் (1971)
10. திராவிடன் (1.4.1928 முதல்)
11. கொங்குநாடு (பதிவு செய்து நடத்தவில்லை)



தந்தை பெரியார் நடத்திய
ஆங்கில இதழ் (1928)

64

ஈரோட்டுப் பெயரில் இதழ்கள்



ப.சண்முக வேலாயுதம்

ஈரோட்டில் பல இதழ்கள் வெளி வந்திருந்தாலும் ஈரோடு நகர்ப் பெயரைக் கொண்டு சில இதழ்கள் வெளிவந்தன.

1. ஈரோடு வாசி - இதன் ஆசிரியர் ப. சண்முக வேலாயுதம். இவருக்குப் பின் கே. வி. வாசுதேவன் சில காலம் இதே பெயரில் இதழ் நடத்தினார். வார ஏடு

2. ஈரோட்டுப்பாதை - இதன் ஆசிரியரும் ப. சண்முகவேலாயுதம் தான். 8.11.1953 அன்று பெரியார் இந்த வார ஏட்டைத் தொடங்கி வைத்தார்.

3. ஈரோடு நகர மித்திரன் - இதன் ஆசிரியர் கலைமகள் நிறுவனர் எஸ். மீனாட்சி சுந்தர முதலியார்

4. ஈரோட்டு முழக்கம் - இவ்வார ஏட்டின் ஆசிரியர் கு. சேதுராமன்

5. ஈரோடு எக்ஸ்பிரஸ் - நல். நடராசனை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த இதழ்

6. ஈரோடு என்ற பெயரில் இதழ் ஒன்று புதுச்சேரியிலிருந்து மாத இதழாக வெளி வந்தது. ஆசிரியர் கோ. செல்வம். பாவேந்தர் பாரதிதாசனாரின் பேரன்.

65 19ஆம் நூற்றாண்டு இலக்கியம்

1. கோட்டை மாரியம்மன் கும்மி

ஈரோடு கோட்டையை நினைவூட்டும் வகையில் மாநகராட்சி மன்றம் எதிரில் உள்ள மாரியம்மனுக்குக் கோட்டை மாரியம்மன் என்று பெயர். 1890 ஆம் வருடம் கவிஞர் ஜே. சக்கரபாணி என்பவர் கோட்டை மாரியம்மன் கும்மி என்ற நூலைப் பாடினார்.

2. பொன்னர் சங்கர் அம்மானை

1891 ஆம் வருடம் ஈரோடு அ. இராமசாமி முதலியாருடைய சென்ட்ரல் அச்சுக் கூடத்தில் ஊஞ்சலூர் கொளத்துப் பாளையம் உபாத்தியாயர் வி. கருப்பண்ண பிள்ளை 'பொன்னர் சங்கர் அம்மானை' என்னும் நூலைப் பதிப்பித்தார்.

3. சேடீசுரக் கடவுள் பேரில் மாலை

1896 ஆம் வருடம் ஈரோடு சென்ட்ரல் அச்சுக் கூடத்தில் அவல் பூந்துறை கிராமம் தொட்டிபாளையம் திருஞானசம்பந்த புரம் வேலாயுதம் பிள்ளை இயற்றிய சேடீசுரக் கடவுள் மாலை அச்சிடப்பட்டது. ஈரோடு பஞ்சுமண்டி முருங்கத் தொழுவு சிவராம செட்டியார் பொருள் உதவி செய்தார். தெய்வநாயக முதலியாரின் வாகீச பக்த சமாஜத்தில் இந்நூல் அரங்கேற்றம் செய்யப்பட்டது.

66 இலக்கியம் பெற்ற அரசுப் பணியாளர்கள்

ஒரு முன்சீப்பும். போலீஸ் இன்ஸ்பெக்டரும் இலக்கியத்தின் பாட்டுடைத் தலைவர்கள் ஆகியுள்ளனர். அக்காலப் புலவர்கள் மன்னர்களைப் பாடுவர். அதே போல நல்ல அதிகாரிகளும் பாடப்பட்டுள்ளனர்.

1887 இல் துரைசாமிப்பிள்ளை என்பவர் ஈரோடு முன்சீப் ஆக இருந்தார் (நீதிபதி). கம்பளியம்பட்டி நாகப்ப கவுண்டர் என்ற கவிஞர் அவர் மீது முன்சீப் துரைசாமிப்பிள்ளை மீது" பஞ்சரத்னப் பதஜாவளி" என்னும் நூலைப் பாடினார்.

1892 இல் கணேச சிங் என்பவர் போலீஸ் இன்ஸ்பெக்டராக இருந்தார். அவரைப் புகழ்ந்து கந்தசாமிக் கவிஞர் என்பவர் "கணேச சிங் புகழ்மாலை" என்ற நூலைப் பாடினார்.

சிவமயம்

பொன்னர் சங்கர் அம்மானை.

இஃது

வாரணவாசிக்கவிராயரவர்களால்

பாடியளிக்கப்

கோயமுத்தூர் ஜில்லா சூலூர் தாலூகா வளநாயக்கர் கிராமஞ்சென்னாளத்துப் பாளையத்திலிருக்கும் மகா-ஸ-ஸ-ஸ்ரீ விஸ்வநாத பிள்ளையவர்கள்,

மூலமாக

உபாத்தியாயர் கருப்பண்ண பிள்ளையவர்களால் வடமொழி பாஷைகளைக்கொண்டு பிழைதிருத்தப்பரிசோதிக்கப்

பட்டு:

அ. இராமசுவாமி முதலியாரவர்களால்

லைன்ட்றம் அச்சுக்கூடத்தில்

பதிக்கப்பட்டது.

முதற்பதிப்பு காப்பி 500.

இதன் விலை அணா 8.

1891.

இப்புஸ்தகம் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கின்றது.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஈசோடென்று வழங்கின்ற மத்தியபுரியில்வாழ்ந்தருளிய

சேடீசுரக்கடவுள் பேரில் மாலை

இஃது

கோயமுத்தூர் ஜில்லா ஈரோட்டு தாலுக்கா அவல்பூந்
துறைக்கிராமம் தொட்டியபாளையத்துக்கடுத்த நரு
ஞான சம்மந்தபுரத்திலிருக்கும் முத்துச்சாமி
பிள்ளையவர்கள் குமாரன்

வேலாயுதம் பிள்ளையவர்களால்

இயற்றப்பட்டது.

ஈரோடு பஞ்சுமண்டி முருங்கைத் தொழுவு
சி. சுப்பராயச்செட்டியாரவர்கள் குமாரன்

சிவராமசெட்டியாரவர்கள்

கேட்டுக்கொண்டபடிக்கி

ஈரோடு.

லெண்டற்றல் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

1896

67

வாசக சாலைகள்

1. சரஸ்வதி ரீடிங் ரூம் (ஈரோடு ரீடிங் ரூம்)

மணிக்கூண்டு அருகில் 1872 ஆம் ஆண்டு சரஸ்வதி ரீடிங் ரூம் தொடங்கப்பட்டது. உறுப்பினர் சேர்த்து அறக்கட்டளை மூலம் தொடங்கப்பட்டது. பெரியார் யுகத்தில் பெயர் மாற்றப் பட்டு ஈரோடு ரீடிங் ரூம் என்று பெயர் மாறியது. இன்றும் இயங்கி வருகிறது. ரீடிங் ரூம் இடத்தில் இரண்டு கடைகள் உள்ளன. அதன் வருமானத்தால் இயங்கி வருகிறது. தந்தை பெரியார் இதன் செயலாளராக இருந்துள்ளார். இப்போது சூரம்பட்டி சுப்பிரமணியம் தலைவராக உள்ளார்.

2. பாரதி வாசக சாலை

இது கருங்கல் பாளையம் கே.எம்.தங்கப்பெருமாள் பிள்ளை அவர்களால் 1916 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. வாசக சாலைப் பெயரில் தேசிய உணர்ச்சி ஊட்டப்பட்டது. வரதராஜுலு நாயுடு. திருவிக போன்ற பெருமக்களை அழைத்து விழா நடத்தப்பட்டது. 1921 இல் பாரதியார் இவ்வாசக சாலை ஆண்டு விழாவிற்கு வருகை புரிந்தார். இங்கு இப்போது பொது நூலகத்துறை நூலகம் உள்ளது.

காக்ஸ்
கோவை மாவட்ட ஆட்சியர்



ஈரோடு நகராட்சி
வரவேற்பில் டாக்டர் ப. சுப்பராயன் (1927)

பாட்டாளிகள் படிப்பகம்

3. காக்ஸ் ரீடிங் ரூம்

வ.உ.சி.பூங்காவில் உள்ள கார்னேஷன் ஹாலில் 1927 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது 'காக்ஸ் ரீடிங் ரூம்'. கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர்A.R.COX (16.3.1925 - 22.12.1927) பெயரால் ஏற்படுத்தப்பட்டது. நிறுவியவர் டி.சீனிவாச முதலியார் (நகராட்சி மன்றத் தலைவர்). சென்னை மாநில முதலாவது அமைச்சர் டாக்டர்.சுப்பராயன் திறந்து வைத்தார்.

4. பாட்டாளிகள் படிப்பகம்

17.9.2005 அன்று ஐவுளித் தொழிலாளர்களால் கருங்கல்பாளையத்தில் தொடங்கப்பட்ட நூலகம். வேறு எங்கும் கிடைக்காத அரிய நூல்கள் உட்பட 5000 நூல்கள் உள்ளன. அனுமதி இலவசம்.

ஈரோடு ரீடிங் ரூம் (சரஸ்வதி ரீடிங் ரூம்) 1872

68

நூல் வெளியீட்டகங்கள்



குடி அரசு பதிப்பகம்

1. பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகம்

பெரியாருக்கு உதவியாக ஈரோடு வந்த சாத்தான்குளம் அ. இராகவன் முயற்சியால் ஈரோடு 43 கச்சேரி வீதி என்னும் முகவரியில் ஈரோடு பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகம் லிமிடெட் என்ற பெயரில் புத்தகங்கள் வெளியிடும் நிறுவனம் ஒன்று தொடங்கப்பட்டது. பதிவு செய்யப்பட்ட அதன் முதல் செயலாளர் சாத்தான்குளம் அ. இராகவன். 13.2.1932 முதல் இயங்கியது.

ஒருபங்கு 10ரூபாய் வீதம் 3000 பங்குகள் வெளியிடப்பட்டன. கூட்டு முயிற்சியால் 30000 ரூபாய் முதலீட்டில் நிறுவப்பட்டது. பெரியாரும் அதில் உறுப்பினர் ஆனார்.

இக்கழகத்தின் நோக்கங்கள் :

1. தமிழ்ப்பாஷையின் அபிவிருத்தி
2. தமிழ் மக்கள் முன்னேற்றம்
3. தமிழில் அறிவியல் நூல்கள் வெளியிடுதல்
4. பிறமொழி நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடுதல்
5. தமிழ் நூல்களைப் பிறமொழியில் பெயர்த்து வெளியிடுதல் என்பவைகள்.

2. செலக்ட் புக் ஸ்டால்

இப்பெயரில் ஈரோடு கச்சேரி வீதி 142 ஆம் எண் உள்ள வீட்டில் 1943 ஆம் ஆண்டு ஒரு புத்தக விற்பளை நிலையம் தொடங்கப்பட்டது. பெரும்பாலும் திராவிடர் கழகம். சுயமரியாதை இயக்கம் தொடர்பான நூல்களே விற்கப்பட்டன. திராவிடர் கழகக் கொடி. திராவிட நாட்டுப் படம். பெரியார். அண்ணாத்துரை. பாரதிதாசன். தியாகராயர். A.T.பன்னீர்செல்வம்.

ஜின்னா. இன்னும் பலர் படங்கள் அடங்கிய நாட்குறிப்பு. கார்டு. கவர். லெட்டர் பேடு. புகைப்படங்கள் ஆகியன மொத்தமாகவும் சில்லரையாகவும் விற்கப்பட்டன.

புகைப்படங்கள். அச்சிட்ட படங்களுக்கென்றே தனியாக 'டிராவிடியன்போட்டோ சேல்ஸ் டிபார்ட்மென்ட்' செலக்ட் புக் ஸ்டாலுடன் இணைந்திருந்தது. இதன் உரிமையாளர் ஆர். லூர்துசாமி. 1925ல் பெரியார் காங்கிரசிலிருந்து வெளியேறிய போது பெரியாருடன் வெளியேறிக் கடைசி வரை பெரியாருடன் இருந்தார். பல நூல்கள் வெளியிட்டார். அவற்றுள் ஒன்று. திருவாரூர் முரசொலி எழுத்தாளர் மு. கருணாநிதி எழுதிய "கவிதையல்ல" என்னும் நூலாகும்.

3. புதுமை முத்தமிழ்ப் புத்தக நிலையம்

ஈரோட்டில் ப. சண்முக வேலாயுதம் தந்தை பெரியாரின் அன்புக்குப் பாத்திரம் ஆனவர்.

1944 ஆம் ஆண்டு கச்சேரி வீதி ஆச்சிவிலாஸ் கட்டிடத்தில் ப. சண்முகவேலாயுதம் 'புதுமை முத்தமிழ்ப் புத்தக நிலையம்' என்ற நிறுவனத்தைத் தொடங்கினார். தலைமை தாங்கித் திறப்புவிழாச் செய்தவர் மகாசன உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் எம். ஆர். பெருமாள் முதலியார்.

4. நாதன் கம்பெனி

ப. சண்முக வேலாயுதம்-புலியூர் குகநாதன் இருவரும் இணைந்து 1947 ஆம் ஆண்டு 'நாதன் கம்பெனி' என்ற பெயரில் புத்தகம் பதிப்பு. விற்பனை நிலையம் தொடங்கினர். 22.1.1947 அன்று பெரியார் அதைத் தொடங்கி வைத்தார். இவ்விருவரும் சில காலம் குடியரசு பொறுப்பாளர்களாகவும் இருந்தனர்.

சேலம் கல்லூரியில் பெரியார் ஆற்றிய விரிவான சொற்பொழிவை தத்துவ விளக்கம் என்ற பெயரில் அழகிய நூலாக வெளியிட்டனர். பெரியார் மிகவும் பாராட்டினார். வேறு சில நூல்களையும் பதிப்பித்தனர்.

5. குடிஅரசுப் பதிப்பகம்

தந்தை பெரியார் 1930 ஆம் ஆண்டு குடி அரசுப் பதிப்பகம் தொடங்கினார். 185 புத்தகங்கள் வெளியிட்டார் என்பர். பெரியார் நூல் 114. பிறர் நூல்கள் 71.

வேலாயுதம் அவர்களின் சிவலிங்கம் நூற்பதிப்புக் கழகம். வேலா. இராச மாணிக்கத்தின். வேலா பதிப்பகம் ஆகியவை பல நூல்களை வெளியிட்டன.

இளங்கோ புத்தகசாலை. மாணிக்கம் புக் செல்லர் ஆகியவை சில நூல்களை வெளியிட்டன. டாக்டர் வெ. ஜீவானந்தம் "படிகள்" என்ற பெயரிலும். புலவர் செ. இராசு "கொங்கு ஆய்வுமையம்" என்ற பெயரிலும் சில நூல்கள் வெளியிட்டுள்ளனர்.

ஈரோடு எழுத்தாளர் பலர் பிற பதிப்பகங்கள் மூலம் பல நூல்களை வெளியிட்டுள்ளனர்.

ஈரோடு எழுத்தாளர்கள் ஒன்றிணைந்து கூட்டுறவுப் பதிப்பகம் தொடங்கலாமே.

69

திண்டல் புதூர்

மேல்கரைப் பூந்துறைநாட்டு 32 ஊர்களையும் தொகுத்துக் கூறும் ஊர்த்தொகைப் பாடலில் திண்டல் 'திண்டல்புதூர்' என்று கூறப்பட்டுள்ளது. திண்டல்மலை அடிவாரத்தில் புதியதாக ஊர் ஏற்பட்டது என்பது இதன் பொருள். மக்கள் தொகை குறைவாக இருந்த அக் காலத்தில் மலை அடிவாரத்தில் ஊர் இல்லாமல் மலையைச் சுற்றிலும் அடர்ந்த காடுகள் இருந்தது. சென்னிமலை அடிவாரத்தில் முன்பு ஊர் இல்லை. பிடாரியூரே சென்னிமலைக் குரிய ஊராக இருந்தது. அதே போல் திண்டல் மலை அடிவாரத்தில் முன்பு ஊர் இல்லை.

கொங்கு வேளாளரில் நசியனூர் கண்ண குலத்தார் முதலில் மலையின் மேல்புறம் குடியேறி 'திண்டல்பாளையம்' என்று பெயரிட்டனர். திண்டல்கோயில் திருப்பணியும் செய்தனர். பின்னர் அவர்கள் மாப்பிள்ளைமார்களாகிய பூந்துறை காடை குலத்தார் திண்டலின் கிழபுறம் குடியேறினர். மேல் திண்டல். கீழ் திண்டல் என அழைக்கலாயினர். கி.பி.13ஆம் நூற்றாண்டில் இக்குடியேற்றம் நடைபெற்றது.

13.8.1340 அன்று பூந்துறை நாட்டார் வெள்ளோட்டில் கூடி ஈரோடு திருத்தொண்டீசுவரர் கோயிலுக்கு திண்டல் ஊரையே கொடையாகக் கொடுத்தனர். திண்டல் ஊர் மக்கள் அனைவரும் ஊர். நாட்டுச் சபைகட்குக் கொடுக்கின்ற வரியை ஈரோடு திருத்தொண்டீசுவரர் கோயிலுக்குக் கொடுக்க வேண்டும் என்பதே இக்கொடைப்பொருள்.

பாடலில் 'மிக்கான திண்டல்' 'கதித்த திண்டல்' என்று கூறப்படுவதற்கு ஏற்ப இன்று திண்டல் ஒரு நகராக வளர்ந்துள்ளது. புகழ்பெற்ற கல்வி நிலையங்கள் உள்ளன.

திண்டலில் மலைக்குமாரர் சுப்பிரமணியர் கோயில் (வரலாற்று நூல் குறிப்பிடும் பெயர்). பத்திரகாளியம்மன். கருமலையான் கோயில்கள் வரலாற்றில் குறிக்கப்படுகின்றன. சிவகாமவல்லி சமேத முக்கண்ணீசுவரர் கோயில் குறிக்கப்படுகிறது. இன்று இல்லை.

திண்டலில் ஓர் இலக்கியம்!

வேலாயுதசுவாமி சதகம்

தோட்டாணிச் சத்திரம் பொன்னப்பப் புலவர். அவர் மகன் குமிளாம்பரப்பு வடிவேலுப் புலவர் போன்ற பல புலவர்கள் திண்டல் மக்களின் நல்லாதரவு பெற்ற சில புலவர்கள் ஆவர்.

கொங்குப் புலவர் மரபில் வந்த குருசாமிப் புலவர் என்பவர் திண்டலில் சில காலம் தங்கியிருந்தார். திண்டல்மலை அருள்மிகு வேலாயுத சுவாமி மீது பற்றுக் கொண்ட அவர் வேலாயுதசுவாமி மீது சதக நூல் ஒன்றைப் பாடினார். இது நீதிச் சதகம் எனப்படும்.

குருசாமிப் புலவரை நன்கு ஆதரித்துப் போற்றியவர் நசியனூர் கண்ணகுலத்தைச் சேர்ந்த மேல் திண்டல் குழந்தையண கவுண்டர். அவர் வேலாயுதசுவாமி மீது மிகுந்த பற்றுக் கொண்டவர். ஒவ்வொரு பாடலிலும் குழந்தையண கவுண்டர் பெயர் அமையுமாறு குருசாமிப் புலவர் அந்நூலைப் பாடினார்.

திண்டல் பெருமக்கள் பலர் அச்சதகப் பாடலை மனப்பாடம் செய்து முருகப் பெருமான் முன் ஓதி வழிபட்டு வந்தனர். அவற்றுள் ஒரு பாடல்

செய்யவள் இருப்பிடம்(இலட்சுமி)

நல்லகுண மிகுந்த மன்னவ ரிடத்திலும்
நாரியர் இடந்தன்னிலும்
நானிலத் தோர்மெச்சும் கவிஞர்க ளிடத்திலும்
நாரணன் திருமார்பிலும்

வல்லப மிகுந்தநற் கலைவாண ரிடத்திலும்
நவமணியிலும் சொர்னத்திலும்
மாடகூ டங்களில் நன்னீ ரிடத்திலும்
வாவிகூ பம்தன்னிலும்

சொல்லுதற் கரிதான கோக்களின் வாயிலும்
தூயநற் கமலத்திலும்
சுகம்தரும் செய்யவள் இருக்குமிடம் இதுவெனச்
சொல்லுவார் உலகில் மேலோர்

மெல்லியர்கள் சூழும் நசையனூர்க் கண்ணகுல
வேந்தனாம் குழந்தையணவேள்
மெய்யுளம் குடிகொண்ட திண்டல்கிரி மீதில்வளர்
வேலாயு தக்கடவுளே.

வெள்ளோடு பெரியபண்டாரம் எனப்படும் முத்தாண்டிப் பண்டாரம் வசம் இதன் ஓலைச் சுவடி இருந்தது. இப்போது திண்டல் வேலாயுதசுவாமி சதகத்தின் ஏட்டுப் பிரதி ஒன்று ஈரோடு அருங்காட்சியகத்தில் உள்ளது.

திண்டல் கல்வெட்டு

கலியுக சகாப்தம் 4950 க்கு மேல் செல்லுகின்ற சவுமிய வருஷம் ஆவணி மாதம் 23 தேதி குரு வாரமும் அசுவதி நட்சத்திரமும் பாலவாகரணமும் யோகமும் கூடிய சுபதினத்தில் திண்டல் கிரி வேலாயுத சுவாமிக்கு நசையனூர்க் காணியாளர் கண்ண கோத்திரம் திண்டல் பாளையத்திலேயிருக்கும் மொசுக் கவுண்டர் மகன் வெள்ளைக் கவுண்டர். பொங்காக்கவுண்டர் மகன் கருப்பண கவுண்டர். பெரியசாமிக் கவுண்டர் மகன் சேனாபதிக் கவுண்டர் இவர்கள் நாலு பேரும் திசைக்கம்பம் உபயம்.

70

முத்து வீரப்ப நாயக்கர் சத்திரம்

வீரப்பன் சத்திரம்
முத்துவீரப்ப நாயக்கர் சத்திரம் தெப்பக்குளம்

ஈரோட்டிலிருந்து சித்தோடு செல்லும் வழியில் தனியாக விளங்கிய ஊர் வீரப்பன் சத்திரம். இப்போது ஈரோட்டுடன் இணைந்துவிட்டது. மதுரை நாயக்கர் காலத்தில் இங்கு ஒரு பெரிய சத்திரமும். தெப்பக்குளமும். நந்தவனங்களும் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

அந்தச் சத்திரத்திற்கு முத்துவீரப்ப நாயக்கர் சத்திரம் என்பது பெயர். மதுரை நாயக்கர் மரபில் மூன்று அரசர்கள் முத்துவீரப்ப நாயக்கர் என்ற பெயருடன் ஆட்சிபுரிந்தனர்.

முதலாம் முத்துவீரப்ப நாயக்கர் 1609-1623

இரண்டாம் முத்து வீரப்பநாயக்கர் 1659

மூன்றாம் முத்துவீரப்ப நாயக்கர் 1682-1689

வரலாற்றின்படி முதலிருவரும் ஈரோடு அருகில் முத்துவீரப்ப நாயக்கர் சத்திரம் அமைக்க வாய்ப்பில்லை. இன்றைய வீரப்பன் சத்திரத்தில் சத்திரம் முதலியவைகளை அமைத்து வழிப்போக்கர் தங்கவும். தண்ணீர்ப்பந்தல் அமைத்து எப்பொழுதும் உப்பு ஊறுகாய் நீராகாரம் வழங்கவும் ஏற்பாடு செய்தவர் மூன்றாம் முத்து வீரப்ப நாயக்கரே ஆவார்.

அவர் அமைத்த முத்து வீரப்ப நாயக்கர் சத்திரம் தான் இன்று வீரப்பன் சத்திரம் என்ற பெயரில் வழங்கி வருகிறது. மிகப்பெரிய தெப்பக்குளம் இன்றும் நல்ல நிலையில் உள்ளது. தெப்பக்குளத்தின் வட பகுதியில் தண்ணீர் இறைத்ததற்கான அமைப்பு இன்றும் உள்ளது. நந்நவனம் இருந்த அடையாளம். பெயரும் இன்றும் உள்ளது. இச்சத்திரத்தின அருகில் தான் 'சந்திரமதிமுதலியார்' மடம் இருந்திருக்க வேண்டும்.

71

ஜெயமுரி (செயமுரி) எது ?

வ.உ.சி. பூங்காவில்
அம்பு சேர்வை மண்டபம்

ஈரோடு பெருநகருடன் இணைந்த சேமூரின் பழைய பெயர்தான் செயமுரி. அங்கும் மிகப்பெரிய அந்தணர் குடியிருப்பு இருந்தது. அதன் பெயர்ஆறமாத்தூர் வல்லிச் சதுர்வேத மங்கலம். நான்கு வேதங்கள் ஓதும் அந்தணர்கள் குடியிருந்தனர்.

வீரபாண்டியன் ஆட்சிக் காலத்தில் கி.பி.1276 ஆம் ஆண்டு பூந்துறை நாட்டார் கொளாநல்லியில் கூடி ஈரோடு பெருமாள் கோயிலுக்கு சேமூரைக் கொடையாகக் கொடுத்தனர்.

இன்றும் பெருமாள் கோயில் விஜயதசமி அம்பு சேர்வை விழாவை சேமூர் வேளாளர் பெருங்குடி குலத்தார். லக்காபுரம் வேளாளர் ஆதிகுலத்தாருடன் சேர்ந்து நடத்துவது சிறப்புக்கு உரியது.

சேமூரில் செல்லாண்டியம்மன், அங்காளம்மன், காமாட்சியம்மன் கோயில்கள் உள்ளன. தேன் மொழியம்மை தெய்வராக ஈசுவரன் கோயில் பற்றி பழைய நூல்கள் கூறுகின்றன. காணியுரிமையுடையவர்கள் பெருங்குடி குல வேளாளர்கள்.

முன்னோர் கொடுத்த கோயில் கொடைகள் பெரும்பாலும் மறைந்து விட்டன. சேமூர், லக்காபுரம் கொடைகள் தொடர்ந்து நடப்பது வியப்பான செயல்.

பூந்துறை அருகிலும் ஒரு சேமூர் உள்ளது. அதைச் சின்ன சேமூர் என்றும், ஈரோட்டுச் சேமூரைப் பெரிய சேமூர் என்றும் அழைக்கும் வழக்கம் உண்டு.

இன்று சேமூர்க்கிராமம் முழுவதும் ஈரோடு மாநகருடன் இணைந்துவிட்டது.

72

அக்கிரகாரங்கள் !

இன்று பிராமண பெரிய அக்கிரகாரம் (B.P.அக்கிரகாரம்) எல்லோருக்கும் தெரியும். இது ஒன்றுமட்டும் அல்ல. நான்கு அக்கிரகாரங்கள் அங்கு இருந்தன.

1. பிராமண பெரிய அக்கிரகாரம்
2. பிராமண சின்ன அக்கிரகாரம்
3. சர்க்கார் பெரிய அக்கிரகாரம்
4. சர்க்கார் சின்ன அக்கிரகாரம்

என்பன அவை. இரண்டு பிராமண அக்கிரகாரத்திற்கு எந்த வரியும் கிடையாது. மற்ற இரண்டிற்கும் குறைந்த வரி. இவை நான்கும் பிராமணர் மட்டுமே குடியிருந்த பகுதிகள். இன்று ஒருவர் கூட இல்லை.

இங்கு பவானியாற்றை 'வானியம்மன் கோயில்' என்ற பெயரில் கோயில் அமைத்து வழிபடுகின்றனர். காலிங்கராயன் வாய்க்கால் அருகில் உள்ளது. வாய்க்காலில் தண்ணீர் வரும்போது விழாக் கொண்டாடுகின்றனர். இதே போல் வெள்ளோடு, காளமங்கலம், திருவாச்சி போன்ற ஊர்களில் 'காவேரியம்மன்' வழிபாடு நடந்துள்ளது.

ஈரோட்டிலும் அக்கிரகாரங்கள்

கொங்குச் சோழர் காலத்தில் ஈரோட்டில் ஒரு அக்கிரகாரம் ஏற்படுத்தி அந்தணர்களைக் குடியேற்றி அப்பகுதிக்கு 'மூவேந்த சோழச் சதுர்வேத மங்கலம்' என்று பெயரிட்டனர்.

இன்றைய அக்கிரகார வீதியின் கிழக்குப் பகுதியில் காலிங்கராயன் கால்வாயில் மேற்குப் பகுதியில் ஒரு அக்கிரகாரம் இருந்தது.

பிரப் தேவாலய கிழக்குப் புறமும், தாலூகா அலுவலகத்தின் வடக்குப் புறமும் இருந்த அக்கிரகாரத்தின் பெயர் 'பனமரத்து அக்கிரகாரம்'.

ஈரோடு நகரின் பழைய ஊர்கள்

இன்றைய ஈரோடு மாநகராட்சிப் பகுதியில் பல ஊர்கள் இணைந்திருத்தாலும் பழமையான ஊர்கள் நான்கு மட்டுமே. அவை ஈரோடு, சேமூர், மங்கலம், திண்டல் என்பவைகளே . பிற ஊர்கள் எல்லாம் பிற்காலத்தில் தோன்றியவையே.

வானியம்மன் கோயில், பி.பெ.அக்கிரகாரம்

73 மங்கல கிரியும் மங்கலமும்

அக்ரகாரம் வழியாகப் பவானி செல்லும் வழியில் 'பெருமாள் மலை' இருப்பது தெரியும். பெருமாள் மலையின் பழைய பெயர் 'மங்கலகிரி'. மங்கலகிரியின் கிழக்கே காலிங்கராயன் கால்வாய் - காவேரி இடையில் 'மங்கலம்' என்ற பழைய ஊர் இருந்தது. பூந்துறை நாட்டு 32 பழம் பெரும் ஊர்களில் மங்கலம் 22ஆவது ஊர். ஊர்த்தொகைப் பாடலிலும் இடம் பெற்றுள்ளது. மங்கலம் ஊருக்கு உரிய மலையாதலின் மங்கலகிரிப் பெருமாள் எனப்பட்டார். அங்கிருந்த மரகதவல்லி சமேத பிறப்பீசுவரர் கோயில்இன்று இல்லை. பழைய ஊரில் வாழ்ந்தவர்கள் கொங்கு வேளாளரில் கண்ணன் குலத்தார். இவர்களே ஊர் உரிமையுடைய காணியாளர்கள்.

அழிந்த சிவாலயத்தின் கல்வெட்டுக் கற்கள் பல ஈரோடு கலைமகள் பெண்கள் பள்ளி அருங்காட்சியகத்தில் உள்ளன. அதில் 'காலிங்கராயன்' பெயர் பொறித்த கல்வெட்டுகள் உள்ளன. ஈரோடு அய்யனாரப்பன் பள்ளு நூல்.

'மங்கலகிரி வாசர்க்கு நேசமாய்ப்
பொங்கல் வையுங்கள்'

என்று கூறுகிறது.

74 காலப்பள்ளி ஆன லக்காபுரம்

லக்காபுரத்தின் பழம் பெயர்தான் காலப்பள்ளி. காலப்பள்ளி 16 ஆம் நூற்றாண்டில் சின்னியம்பாளையம் காவிரிக்கரையில் இருந்து இன்று முற்றிலும் அழிந்துபோன சாத்தம்பூரின் இணை ஊர்களில் ஒன்றாக இருந்தது. உம்மத்தூர்த் தலைவன் வீரசிக்கராயன் காலத்தில் கி.பி.1527 ஆம் வருடம் பூந்துறை நாட்டார் ஈரோட்டில் கூடி ஈரோடு திருத்தொண்டீசுவரர் கோயிலுக்கும் பள்ளிகொண்ட பெருமாள் கோயிலுக்கும் லக்காபுரத்தைக் கொடையாகக் கொடுத்தனர்.

அழிந்த நிலையில் இருந்த ஈரோடு பெருமாள் கோயில் வாத்திய மண்டபத்தைப் புதுப்பித்தவர் லக்காபுரம் முத்துக்குமாரக் கவுண்டர்.

லக்காபுரம் வேளாளர் ஆதி குலத்தார் பெருமாள் கோயில் விஜயதசமி விழா அம்பு சேர்வையில் பங்கேற்பதும், லக்காபுரம் வேளாளர் ஆவகுலத்தார் தொண்டீசுவரர் கோயிலில் ஐப்பசி பவுர்ணமியில் அன்னாபிஷேகம் செய்து வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

"சாத்தம்பூரில் காலப்பள்ளி ஆன லக்காபுரம்" என்பது கல்வெட்டு. ஒரு நாவிதர் சமூக ஆவணம் லக்காபுரத்தை "இலக்கிய புரம்" என்று கூறுகிறது.

75 கங்காபுரம் பழனியம்மாள்

எத்துணையோ பெண்கள் இருந்தாலும் கங்காபுரம் பழனியம்மாளைக் குறிப்பிடக் காரணம் அவர் வடமொழிப் புலமையும் பெற்றிருந்தார் என்பதற்காகவே. பழனியப்ப கவுண்டர் - பழனியம்மாள் இல்லத்திற்குப் புலவர்கள் பலர் வருவர். ஒரு முறை தம்பதியர் வீட்டில் இல்லாத போது ஒரு புலவர் பணிவு இன்றி செருக்குடன் ஆடம்பர உடையணிந்து அவர்கள் வீட்டுத் திண்ணையில் அமர்ந்திருந்தார்.

பழனியம்மாள் வந்தபோது மிகப் பணிவுடன் "ஐயா தாங்கள் யார் என்று தெரிந்து கொள்ளலாமா" என்றார்.

புலவர் பணிவின்றி "யாம் சோடசாவதானி" (16 கலைகளில் வல்லவர்) (சோடசம் - 16 : அவதானி - வல்லவர்) என்றார்.

அவர் செருக்கை அடக்க நினைத்த பழனியம்மாள். ஓ நீங்கள் இரண்டு ஆடு திருடிய 'கள்வரா' என்றார். (சோடு - இரண்டு. அஜம் - ஆடு: அவதானி என்பதற்குத் திருட்டில் வல்லவர் என்ற பொருளும் உண்டு)

புலவர் பழனியம்மாள் புலமையை உணர்ந்தார். பழனியம்மாள் கால்களில் விழுந்து வணங்கி மன்னிப்புக் கேட்டார்.

76 "பேச்சுப் பாறையான பேய்ச்சி பாறை"

இப்போது ஈரோடு நகரில் உள்ள வைராபாளையத்தில் பல இடையர்கள் வீடு இருந்தது. ஒரு நாள் வயதில் முதிர்ந்த ஒரு சன்னியாசி வைரா பாளையம் வந்தார். அவர் கேட்காமலேயே இடையர் குலப் பெண் வள்ளி சன்னியாசியின் தாகம் தீர்த்து உபசரித்தாள். அடுத்த நாளும் அதற்கடுத்த நாளும் வந்த சன்னியாசியை அவ்வாறே வள்ளி உபசரித்தாள்.

நான்காவது நாள் அருகில் உள்ள பாறைக்கு சன்னியாசியுடன் சென்ற வள்ளிக்கு சன்னியாசி காதில் ஏதோ உபதேசம் செய்து மறைந்தார். அன்று முதல் அந்தப் பாறையிலேயே வள்ளி தங்கலானாள். நீறு பூசி சடா முடியோடு இருந்த வள்ளியை விளையாட்டாகச் சிலர் பேய்ச்சி என்றனர். அன்று முதல் "பேய்ச்சி" என்றே அழைக்கப்பட்டார். பலர் அவளை வணங்கத் தொடங்கினர். அருள்வாக்குச் சொன்னாள். வியாதிகளைத் தீர்த்தாள்.

தண்ணீர்ப் பஞ்சம் வந்தது. பாறையிடையே பேய்ச்சி ஒரு சுனை தோண்டினாள். சுவையான நீர் வந்தது. மக்கள் பயன்படுத்தினர். பேய்ச்சி தங்கிய அந்த பாறைக்கு "பேய்ச்சி பாறை" என்றே பெயரிட்டனர். பேய்ச்சி பாறை - பேச்சுப்பாறை என்றாகி விட்டது.

இன்று பேய்ச்சிபாறையின் உச்சியில் தான் ஈரோட்டுக்குக் குடிநீர் வழங்கும் தொட்டியும், வ.உ.சி.பூங்காவும் ஏற்பட்டுள்ளது. இன்னும் ஈரோடு முதியவர்கள் பலர் வ.உ.சி.பூங்கா உள்ள இடத்தை "பேச்சுப்பாறை" என்றே கூறிவருகின்றனர்.

77

சந்திரமதி முதலியார் மடம்

வ. உ. சி. பூங்கா வளாகத்தின் மேல்புறம் இன்று லாரிகள் நிறுத்துமிடத்தில் ஒரு வேப்ப மரத்தின் அடியில் உள்ள பாறையில் ஒரு கல்வெட்டு உள்ளது.

ஈரோட்டில் 'சந்திரமதி முதலியார் மடம், என்ற பெயரில் ஒரு மடம் இருந்தது. அம்மடத்திற் காக ஒருவர் புன்செய் நிலத்தைத் தானமாக அளித்த செய்தி அந்தக் கல்வெட்டில் பொறிக்கப் பட்டுள்ளது.

'விபவ வருஷம் கார்த்திகை மாசம் புண்ணிய
காலத்தில் சந்திரமதி முதலியார் மடத்துக்கு
விட்ட புன்செய் இதுக்குத் தீங்கு செய்தார்
கங்கைக் கரையில் காராம் பசுவைக் கொன்ற
தோஷத்தில் போவாராகவும்'

எழுத்து அமைதியை நோக்கும் போது விபவ ஆண்டு கி. பி. 1687-1688 ஆக இருக்கலாம். கார்த்திகை மாதம் புண்ணிய காலம் கார்த்திகை தீபத் திருநாளாக இருக்கலாம்.

1927 இல் பூங்கா அமைக்கும் போது சில பகுதிகள் மடத்துப் புறம்போக்கு என்று இருந்ததாம்.

ஒரு குறிப்பு :

1959 - 1963 ஆண்டுகளில் நான் (செ. இராசு) செங்குந்தர் உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றிய போது ஒரு சமயம் கலைமகள் பள்ளி நிறுவனர் ஐயா எஸ். மீனாட்சி சுந்தர முதலியார் மதிப்பியல் தலைமையாசிரியராக இருந்தார்.

ஒரு நாள் என்னை அழைத்து 'நான் B.A. முடித்து L.T. படிக்க பணம் இல்லாததால் ஒரு வருடம் பார்க்கில் சூப்பர்வைசராக வேலை செய்தபோது பாறையில் ஒரு கல்வெட்டைப் பார்த்தேன். போய்ப் பார்த்து வா' என்றார்.

அடுத்த நாள் சென்று பார்த்து மேற்கண்ட கல்வெட்டைப் பற்றிக் கூறினேன். மூன்றாம் நாள் செய்தித்தாளில்,

'கங்கைக் கரையில் காராம் பசுவைக் கொன்ற பாவம்
ஈரோடு கல்வெட்டில் சாபம்
வித்துவான் ராசு கண்டுபிடிப்பு'

என்ற செய்தி வந்தது. இதுவே நான்(இராசு) கல்வெட்டு ஆய்வாளராகக் காரணம்.

நான் படித்த முதல் கல்வெட்டு இதுவேயாகும். ஐயா அவர்களே செய்தித்தாளுக்கு செய்தி அளித்தார்.

சந்திரமதி முதலியார் ஈரோட்டில் ஆட்சி செய்தவர் என்று ஒருவர் எழுதியுள்ளார்.

78

காவிரிக் குடிநீர்

டி. சீனிவாச முதலியார்

தந்தை பெரியார் 1917 முதல் 1920வரை ஈரோடு நகராட்சி மன்றத் தலைவராக இருந்தார். அவரது பதவிக் காலத்தில் 26.5.1919 அன்று ஈரோடு மக்களுக்குக் காவிரி நீர் வழங்கப்பட்டது. தொடங்கி வைத்தவர் திவான் பகதூர் பி. இராஜகோபாலாச் சாரியார் (C.I.E. MEMBER IN COUNCIL FORT St. GEORGE, MADRAS). சிலர் இவரை ராஜாஜி என்றே தவறாக எழுதுகின்றனர்.

முன்பு காலிங்கராயன் வாய்க்காலிலிருந்துதான் ஈரோடு நகருக்குக் குடிநீர் வழங்கப் பட்டது. காலிங்கராயன் கால்வாய்த் தண்ணீர் மே 1 முதல் ஜூன் 15 வரை நிறுத்தப்படும். எனவே அச்சமயம் உள்ளிட்டு ஆண்டு முழுவதும் குடிநீர் வழங்கக் காவிரி நீர் பயன்படுத்த வேண்டும் என்று 1911ல் நகராட்சிமன்றத் தலைவராக இருந்த டி. சீனிவாச முதலியார் அரசுக்குக் கடிதம் எழுதினார். இந்தத் திட்டம் குறித்து ஆய்வு செய்ய அரசு உதவி சுகாதாரப்



ஈரோடு குடிநீர் மேல் நிலைத் தொட்டி கால்கோள் (26.9.1914)



குடிநீர் தொட்டி திறப்பு விழா (26.5.1919)

ஈரோடு வ.உ.சி. பூங்காவில் தண்ணீர்த் தொட்டி (1914)

பொறியாளர் அயர்லாண்ட் என்பவரை அனுப்பியது (IRELAND, ASSISTANT SANITARY ENGINEER - G.O.NO.75 M.MIS.DATED 16.1.1912).

காவிரியாற்றில் இரு பாறைகட்கு இடையிலிருந்து நீர் பெற்று அளிக்கலாம் என்றும் அதற்கு ரூ.3,99,000/- செலவாகும் என்றும் திட்டம் அளித்தார். இத்திட்ட மதிப்பீட்டில் பாதித் தொகை நகராட்சி அளிக்க வேண்டும் என்றும் கூறப்பட்டது. நகராட்சி நிதி நிலமை பாதித் தொகை செலுத்த முடியாமல் இருந்தது.

உடனே டி. சீனிவாச முதலியார் ஏழை ஈரோட்டிற்கு உதவ கவர்னர் பென்ட்லேண்ட் அவர்களைக் கேட்டுக் கொண்டார் (LORD PENTLAND). 3,99,000 ரூபாய் திட்டத்திற்கு அரசு 3,11,000/- ரூபாய் அளிக்க ஒத்துக் கொண்டது.

உடனே தலைவர் பொதுப் பணித் துறையை அழகிய முறையில் நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கக் கேட்டுக் கொண்டார். நற்பயனாக இரண்டாம் முறையும் டி. சீனிவாச முதலியார் நகராட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

திட்டத்திற்கு P.S. சிவசாமி அய்யர் 26.9.1914 அன்று அடிக்கல் நாட்டினார் (P.S.SIVASWAMY IYER, C.S.I., CIE, MEMBER OF THE EXECUTIVE COUNCIL OF FORT St. GEORGE, MADRAS).

1911 தொடங்கி 1916 முடிய டி. சீனிவாச முதலியார் திட்டத்தில் தீவிரமாக செயல்பட்டார். 1917 இல் நகர்மன்றத் தலைவராகப் பதவி ஏற்ற தந்தை பெரியார் 1919 ஆம் ஆண்டு திட்டத் திறப்பு விழாச் செய்தார்.

தொடர்ந்து நீராவி இயந்திரம் மூலமாகவே திட்டம் நடைபெற்றது. 1937 இல் ஈரோட்டுக்கு மின்சாரம் வந்த பின்னர் 1938 முதல் மின்சார இயந்திரம் மூலம் குடிநீர்த்திட்டம் இயங்கியது.

1914 இல் கால்கோள் நாட்டிக் கட்டப்பட்ட இந்தத் தண்ணீர்த் தொட்டி விபரம் தெரியாத சிலர் வ.உ.சி. பூங்காவில் பழங்காலக் கோட்டை என்று எழுதியுள்ளனர்.

79

வ.உ.சி. பூங்கா வரலாறு

அணைகள், நீர்நிலைகள் முன்பு பூங்கா அமைப்பது இன்றைய வழக்கம். ஆனால் 100 ஆண்டுகட்கு முன்பு இதனைச் சிந்தித்துச் செயல் படுத்தியவர் அப்போதைய நகர் மன்றத் தலைவர் டி. சீனிவாச முதலியார். இதோ அவரே பேசுகிறார்.

"இந்தப் பாறையைச் சுற்றியுள்ள இடத்தில் ஒரு பூங்காவை உருவாக்கினால் அது அனைத்து மக்களுக்கும் பயனுள்ளதாக அமையும்; நகரத்திற்கு புதியதொரு வசதி கிடைக்கும் என்று என் மனதில் பட்டது.

அந்த நீர்த்தேக்கத்தை அமைத்த பிறகு பாறையைச் சுற்றியுள்ள ஒரு பெரிய நிலப்பகுதியைப் பூங்காவிற்காக நில ஆர்ஜிதம் செய்யப்பட்டது. ஆனால் அந்தப் பூங்காவைக் கட்டும் பணியை மேற்கொள்ளும் முன் என் பதவியின் இரண்டாவது பதவிக் காலம் முடிவுற்றது.

1925 இல் மூன்றாம் முறையாக நான் நகரமன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக் கப்பட்ட போது நான் இந்த வேலையை மேற்கொண்டேன். அந்தப் பாறையைச் சுற்றிப் பரவியிருந்த புதர்களை அகற்றினேன்.

ஆனால் பூங்கா அமைவதற்கான வாய்ப்பு குறைந்து போயிற்று. காரணம் பாறையைச் சுற்றிலும் சரளைக் கற்கள் நிறைந்த மண்: அங்கும் இங்கும் முள் பற்கள் போன்று துருத்திக் கொண்டிருந்த வெற்றுப் பாறை அது. ஆனால் கைதேர்ந்த நிபுணர் ஒருவரின் உதவியுடன் விடா முயற்சியுடன் அத்தடைகளைக் கடந்தோம்.

பதினான்கு ஆண்டுகட்கு முன் சும்மாயிருந்த பாறையை, மலர்ச்சி தரும் தோட்டமாக மாற்றிப் பூங்கா அமைக்கும் பணியை சாதனையாக்கினேன். இந்த வேலைகளைச் செய்து முடிக்கத் தேவையான செலவு மிக அதிகம் எனத் தெரிய வந்ததும், துப்புரவுப் பணியாளர் களின் சேவையைப் பயன் படுத்திக்கொள்ள முனைந்தேன்.

அப்பணியாளர்கள் மகிழ்ச்சியுடன் வேலை செய்ய முன்வந்தார்கள். நூறு பணியாளர்கள் தங்கள் அலுவல் வேலை நேரம் முடிந்த பின் ஒன்றரை ஆண்டுக் காலமாகத் தொடர்ந்து ஊதியம் பெற்றுக் கொள்ளாமல் இவ்வேலையைச் செய்தார்கள்.

ஆனால் இப்பணியைப் பற்றிப் பலர் விமர்சிக்க முற்பட்டார்கள். அவர்கள் மனதளவில் இல்லாவிட்டாலும் இதயத்தில் குரூரம் நிறைந்த மனிதர்கள். அந்தப் பேச்சிப் பாறை யைச் சுற்றியுள்ள சரளைக்கல் மண்ணில் ஒரு செடி கூட வளராது என்பது அவர்களின் வாதம். ஆனால் இப்போது மாலை வேளைகளில் இப்பூங்காவை நோக்கி அம்மனிதர்கள் மொய்த்துச் செல்கின்றனர் என்பதைக் காணும்போது எனக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது.

பச்சைப் பசேல் என்று இலைகளுடன் பெரிய பெரிய வண்ணப் பூக்கள் கொண்ட செடி கொடிகள் இங்கே முளைத்து அதிசயம் நிகழும் என்று அவர்கள் ஆரம்பத்தில் கொஞ்சமும் நினைத்திருக்க மாட்டார்கள் . இவ்வகைத் தாவரங்களை கோடைக்கானல் மலைப் பகுதியிலிருந்து கடந்த மே மாதத்தில் கொண்டு வந்தேன். இப்போது அவை ஈரோட்டின் காய்ச்சும் வெயிலை சமாளித்து இரண்டு கோடைக் காலங்களைக் கடந்துள்ளன.

இந்தப் பூங்கா தனது செலவுகளை ஈடுகட்டவும், வருவாய் ஈட்டும் அமைப்பாக மாற்றவும் எண்ணி ஒரு பழத் தோட்டத்தையும், பூந்தோட்டத்தையும் உள்ளே அமைத்தோம். மாதுளை, கொய்யா, அன்னாசி, மா, சீதாப்பழம், பேரிக்காய், எலுமிச்சை, ஆரஞ்சு, திராட்சை ஆகிய பழச் செடிகள் இங்கு வளர்க்கப்படுகின்றன. பலவகை மல்லிகைப் பூச்செடிகள் பூந்தோட்டத்தில் உள்ளன.

சுமார் ஆறு ஏக்கர் பரப்பு பொழுதுபோக்கு அம்சத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அதன் உச்சமாக அதனுள் ஒரு வாசகசாலையும், கார்னேசன் மண்டபமும் கட்டும் வேலை நடக்கவிருக்கிறது. பூங்காவினுள் ஒரு காட்சி அரங்கமும், நூலகமும் அமையவுள்ளது.

மேற்கண்ட எனது பணிவான முயற்சிகளில் அழுத்தமும், எதிர்க்காற்றும், ஓயாத எதிர்ப்பும் இடைமறித்தன. இருந்தும், இந்தப் பூங்காவை ஏற்படுத்தும் முயற்சியில் எனது பிற பொதுச் சேவைகளுக்குக் கிடைத்தது போல், மதிப்பிற்குரிய நகரமன்ற உறுப்பினர்கள், மூத்தோர்களின் ஆதரவு எனக்குத் தொடர்ந்து கிடைத்தது. என் மீதுள்ள பாசத்தினால் நகர்மன்ற உறுப்பினர்கள் இந்தப் பூங்காவை 'சீனிவாசா பூங்கா' எனப் பெயரிட்டுள்ளனர். நான் அவர்களுக்கு மிகுந்த கடன் பட்டுள்ளேன்.

சென்னை சாந்தோமிலுள்ள பொறியாளர்களான திருவாளர்கள் டி.ராஜா கம்பெனியாருக்கு மிக்க நன்றியுள்ளவராவோம். அலங்காரப் பெஞ்சுகள், அன்னம், அலங்காரச் சிலைகள் போன்றவற்றை அமைக்கக் கேட்டதும், அவர்கள் குறைந்த விலைகளில் உடனடியாகத் தயார் செய்து அனுப்பி வைத்துள்ளார்கள்.

நகரமன்றமும் நானும் மாவட்ட ஆட்சியர் திரு ஏ.ஆர்.காக்ஸ் (A.R.COX,I.C.S.) அவர்களுக்கு ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். பூங்காவினுள்ள பாறைக்கு முன்புள்ள புறம்போக்கு நிலத்தின் ஒரு பகுதியைப் பூங்காவிற்காக ஆக்கிரமித்துள்ளதை அவர் ஆங்கிலேயருக்கேயுரிய வீரப் பண்புடனும், ஒரு விளையாட்டு வீரரின் உயர் பண்புடனும் பொருட்படுத்தாமல் விட்டு விட்டார்".

சீனிவாச முதலியார்

நகராட்சித் தலைவர் அறிக்கை. 9.4.1927

80

காலிங்கராயன் அமைத்த 'தாவுதுறை'க் குழு

காலிங்கராயன்

காலிங்கராயன் அணைகட்டவும் வாய்க்கால் வெட்டவும் ஒரு நிபுணர் குழு அமைத்தார். இரண்டிற்கும் சரியான இடம் 'தாவுதுறை' பார்ப்பது அதன் பணி. இவ்விபரம் 'காலிங்கராயன் அணைப் பட்டயம்' கூறுகிறது.

கனகபுரத்து நஞ்சையன் மகன் லிங்கையன் வானியாற்றில் அணை கட்ட வேணு மென்று தாவுதுறை பார்த்துச் சொல்ல குழு அமைக்கப்பட்டது. கீழ்க்கண்டவர்கள் குழுவில் இடம் பெற்றிருந்தனர்.

1. தென்கரை நாட்டுச் செட்டி வேணாவுடையான்
2. நரையனூர் நாட்டு தாராபுரம் காசிப கோத்திரம் பிரமியண பிள்ளை
3. பொங்கலூர் நாட்டு தெய்வசிகாமணி
4. பூந்துறை நாட்டு வாரணவாசி
5. ஆறுநாட்டு மசக்காளி வேலன்
6. குறுப்புநாட்டு ரகுநாதன்
7. ஒடுவங்கநாட்டு முத்து வேலன்
8. நல்லுருக்கா நாட்டு வாணவராயன்
9. வாரக்கநாட்டு பொங்கியண்ணன்
10. காவுலுக்கா நாட்டு உடையணன்

இக்குழுவில் காலிங்கராயன் தந்தை நஞ்சையனும். காலிங்கராயன் பிரதிநிதியாக எண்ணமங்கலம் காளியண்ணனும் இடம் பெற்றிருந்தனர். குழுவின் தலைவர் கங்கய நாட்டுக் காடையூர் சரவண காங்கேயன். இக்குழு கூடும் இடம் ஈரோடு கொங்கலம்மன் கோயில்.

காலிங்கராயன் சிலை

81

காலிங்கராயனுக்கு கொங்கலம்மன் தந்த அனுமதி

"தாவுதுறைக்குழு"வினர் ஆய்வுப் பணிகள் முடித்த பின்னர் கொங்கு 24 நாட்டாரும் கூடி காலிங்கராயன் பணிக்குச் சம்மதம் தந்தனர். பின்னர் செட்டி. வர்த்தகர். பல பட்டறைச் சாதிகளும் சம்மதித்தனர். இறுதியில் காலிங்கராயனுக்கு ஈரோடு கொங்கலம்மன் சன்னதியில் பணிகட்கு அனுமதிப் பட்டயம் வழங்கத் தீர்மானம் செய்து கொங்கலம்மன் சன்னதியில் கூடினர். பத்தாயிரம் பழங்களால் வழிபாடு செய்து காலிங்கராயன் பிரதிநிதி எண்ண மங்கலம் காளியண்ணனுக்குப் பட்டயம் கொடுக்க முற்படும் போது பொங்கலூர் தெய்வசிகாமணி எனக்கே பட்டயம் வேண்டும் என்று குரல் கொடுத்தார். நடந்தது என்ன ? காலிங்கராயன் அணைப்பட்டயம் பின் வருமாறு கூறுகிறது.

"இருபத்துநாலு நாட்டாருங் கூடி செட்டி வற்த்தகற்களும் பலபட்டரைசாதிக்கும் சம்மதிச்சு காளியண்ணனுக்கு சாதினப் பட்டயம் நேமுகம் செயிது குடுக்க வேணுமென்று சகலமான செனங்களும் அனைவறும் கூடி ஈரோட்டு கொங்கிலியம்மன் சன்னதிக்கி போயி அம்மனுக்கு பதினாயிரம் பளம் நெபேதினம் செயித பின்பு காளியணனுக்கு சாதின பட்டயங் குடுத்தபோது பொங்கலூரு நாட்டு தெய்வசிகாமணி வந்து யிந்த பட்டயம்யெனக்கு சேறவேணுமென்று மரித்து சொன்னான்.

நல்லது யென தாறாபுரம் பிறமியணன் சொல்லும் வசனம். வுங்கள் ரெண்டு பேற் படிக்கி திருவுளச் சீட்டெழுதி அம்மன் பாதத்திலே வைத்து ரெண்டு பேரையும் பார்த்துச் சுனையிலே ஸ்தானம் செயிது அம்மனை பிறதஷ்ஷனம் வலமாயி வந்து தெய்வசிகாமணி நான் முன்னமே யெடுப்பேனென்று சமத்துக் கூரினான். சறவண காங்கயன் சொல்லும் வசனம். நீ போயி வுன்பேற் படிக்கி இருந்த சீட்டு வுன் கையிக்கி வந்தால் வுனக்கே நேமுகம் செயிது முடிக்குரோமென்று சொன்னார்கள்.

அப்போ கோவிலுக்குள்ளே அடியெடுத்து வயிக்கவும் அம்மன் மடிப் பிடவையில் இருந்து ஒரு நீற் சற்ப்பம் வடமுகாக்கினி போலும் சீரி கோவித்து யெளுந்தது கண்டு பயந்து நடுநடுங்கி பிறண்டுருண்டு பின்னிட்டு வந்து சோபந்தட்டி மயங்கி விளுந்தவனை காளியணன் யெடுத்து மாற்போடே அணைத்து நெஞ்செ தட்டி அம்மனைத் தியானிச்சி தண்ணீரெ முகத்துக் கெறச்சி பயத்தை தீற்து அவன் மனசெ தகிறியம் பண்ணினான்.

அதன் பிற்ப்பாடு பத்துபேறுங்கூடி காளியணனெ உன் பேறுபடிக்கி சீட்டெயெடுத்துவறச் சொன்னார்கள். அதின் பிறகு சுனையிலே ஸ்தானம் செயிது அம்மனை வலப்பிறதஷ் ஷனமாயி சுத்திவந்து கோவிலுக்குள்ளே பூதவும் நாக சற்ப்பம் கோபமாறி மாயமாயி போயிவிட்டுது. அதின் பிறகு அம்மன் பாதத்திலேயிருந்த திருவுளச் சீட்டெடுத்துவந்து பத்துபேருங் காணத்தக்கதாக சபையிலே வயித்தான். பத்துபேறும் சீட்டெ பாற்துவுன் பேற்படிக்கி சீட்டு வந்தது" என்று கூறி எண்ணமங்கலம் காளியண்ணனிடம் பட்டயம் தந்தனர். காலிங்கராயன் பணி தொடங்கி 12 ஆண்டுகளில் முடித்தார். கி.பி.1282 தை 5 ஆம் நாள் பணி முற்றுப் பெற்றது.

82

காரைவாய்க்காலும் கோணவாய்க்காலும்

ஈரோடு நகரில் ஓடும் பெரும்பள்ளம் காலிங்கராயன் கால்வாய்க்குக் கீழே செல்லுகிறது. மேலே கால்வாய் பாலத்தின் மேல்காரை பூசப்பட்டுத் தண்ணீர் செல்லுகிறது. பாலத்தின் பகுதியில் காரை பூசப்பட்ட பகுதியில் வாய்க்கால் ஓடுவதால் இப்பகுதி மக்கள் 'காரை வாய்க்கால்' என்பர்.

காலிங்கராயன் அணை கடல்மட்டம் 534 அடி உயரம். காலிங்கராயன் வாய்க்கால் நொய்யலில் கலக்கும் இடமான ஆவுடையா பாறை கடல்மட்டம் 412.48 அடி. இடையில் நேரான தூரம் 32 மைல். மைலுக்கு 3.79 ஆடி தாழ்வு. நேராகக் கால்வாய் வெட்டியிருந்தால் தண்ணீர் விரைந்து ஓடி நொய்யலில் கலந்துவிடும்.

மேடு கண்ட இடம் எல்லாம் கால்வாய் வளைத்து வெட்டப்பட்டு 32 மைல் தூரத்தில் 56½மைல் பயணம் செல்லுகிறது.

பல இடங்களில் வாய்க்கால் வளைந்து வளைந்து கோணலாகச் செல்லுவதால் மக்கள் 'கோண வாய்க்கால்' என்பர். இதனால் சிலர் பாம்பு காட்டிய வழியில் காலிங்கராயன் வாய்க்கால் வெட்டினார் என்பர்.

காரை வாய்க்கால்

வளம் சேர்க்கும் கோண வாய்க்கால்

காலிங்கராயன் வம்சாவளி ஆவணத்தில் வெள்ளோடு சர்வலிங்கேசுவரன் கனவில் கிழ பிராமணன் வடிவில் வந்து சர்ப்பம் போகிற வழியில் வாய்க்கால் வெட்டு என்று சொன்னதாகவும், அவ்வாறே பாம்பு போன வழியை அடையாளம் இட்டு வாய்க்கால் வெட்டியதாகவும் கூறப்படுகிறது.

அதே போல் பவானியாற்றில் சர்ப்பம் படுத்துக் கொண்ட இடத்தில் அணை கட்டியதாகவும் கூறுகிறது. அதனால்தான் பாம்புக்கும் சிலை வடித்து வணங்கப்பட்டதாம். அணையில் ஒரு மேடையில் பாம்புச் சிற்பம் இன்றும் உள்ளது.

83

13 ஆம் நூற்றாண்டுப் பாலம்



காலிங்கராயன் கால்வாய்ப் பாலம் (1282)

இந்தியாவின் தொன்மையான பாலங்கள் பற்றிய நூல் பிரான்சு நாட்டில் வெளியிடப் பட்டுள்ளது. அந்நூலில் நமது ஈரோட்டுப் பாலம் படமும் விபரமும் வெளி வந்துள்ளது.

கி.பி.13 ஆம் நூற்றாண்டில் வெள்ளோடு கனகபுரத்தில் வாழ்ந்த கொங்கு வேளாளரில் சாத்தந்தை குல நஞ்சைய கவுண்டர் மகன் லிங்கய்யன் பாண்டியன் உயர் அதிகாரி ஆனான். அமைச்சர் பொறுப்பில் இருந்த அவன் 'காலிங்கராயன்' என்ற சிறப்புப் பெயரைப் பெற்றான்.

மக்கள் வாழும் பொருட்டு பவானியாற்றைத்தடுத்து அணை கட்டி பவானி முதல் கொடுமுடி ஆவுடையாபாறை வரை வாய்க்காலும் வெட்டினான்.

ஈரோடு நகரில் உள்ள பெரும்பள்ளத்தைக் காலிங்கராயன் கால்வாய் கடக்கும் போது கால்வாய் மேலேயும். பெரும்பள்ளம் கீழேயும் செல்லுமாறு ஒரு பாலம் கட்டினான். தனிப்பாடல் ஒன்று

"அகாண்டமாய் வருகின்ற பெரும்பள்ளம் தன்னிலே ஆறுபோல் பெருகி வரவும்

ஆறுக்கு ஆறு செவுதி நாலுக்கு நால்
திறனை அதுவுமொரு பாலமாக"

என்று கூறுகிறது. நீளம், அகலத்திற்கு செவுதி, திறனை என்ற சொல் பயின்று வருகிறது. எந்த அகராதியிலும் இந்தச் சொல் இடம் பெறவில்லை.

பிரான்ஸ் நாட்டு தொல்லியல் நிபுணர் ஜீன்டிலோக் எழுதிய இந்தியாவின் தொன்மைப் பாலங்கள் என்ற நூலில் தான் பாலத்தின் படமும் செய்தியும் இடம் பெற்றுள்ளது.

13 ஆம் நூற்றாண்டுப் பாலம் (அடிப்பகுதி

84 உரிமை பெற்ற மக்கள்

பூந்துறை நாட்டில் ஈரோடு உட்பட 32 ஊர்களிலும் வாழும் கம்மாளர்குலப் பெருமக்கள் தங்கள் கால்களுக்குப் பாதரட்சை கோத்துக்கொள்ளவும், நன்மை தின்மைக்கு இரட்டைச் சங்கு ஊதிப் பேரிகை உள்ளிட்டன கொட்டுவித்துக் கொள்ளவும், தங்கள் வீடுகளுக்குச் சாந்து (காறை) பூசிக் கொள்ளவும் உரிமைகள் பெற்றனர். இதனால் இதுவரை அவர்கட்கு இந்த உரிமைகள் மறுக்கப்பட்டிருந்தன என்பது தெரிகிறது.

கோனேரின்மை கொண்டான் என்ற அரசனின் 15 ஆம் ஆண்டில் ஆடி மாதம் முதல் காலிங்கராயன் இந்த உரிமைகளை அளித்துள்ளான். கொங்கு மண்டல சதகமும். வரலாற்று ஆசிரியர்களும் இந்த உரிமைகளைச் சோழன் அளித்தான் என்று கூறினாலும் கல்வெட்டு பாண்டியர் காலம் என்கிறது. மேற்கண்ட உரிமைகள் ஏன் மறுக்கப்பட்டன.

கண்ணகிக்கு ஊறு விளைவித்த பொற்கொல்லனால் இந்தச் சமுதாயம் மேற்கண்ட உரிமைகளை இழந்திருக்க வேண்டும் என்று கோவை கிழார் கூறுகிறார். அண்ணன்மார் வரலாற்றில் மரநாழியைக் கொடுத்துப் பொன் நாழி என ஏமாற்றிய செம்பகுல ஆசாரியின் செயலால் இச்சமூகம் சில உரிமைகளை இழந்திருக்கக் கூடும். காலிங்கராயன் கால்வாய் வெட்ட உதவியதால் இந்த உரிமைகளைக் கம்மாளர்கள் காலிங்கராயன் மூலமாக மீண்டும் பெற்றனர்.

85 பாம்புக் கோயில்

விநாயகர் கோயில்கள் உட்பட பல கோயில்களில் பாம்பு உருவங்கள் பல இருப்பதைப் பார்க்கலாம். இரட்டைப் பாம்பு உருவங்களும் உள்ளன. சைவ- வைணவ மரபு இரண்டிற்கும் இது பொது. பாம்பு உருவங்களின் மேல் பகுதியில் சைவர் சிவலிங்கம் உருவம் பொறிப்பர். வைணவர்கள் காளிங்க நர்த்தனம் உருவம் பொறிப்பர்.

ஈரோட்டில் காரைவாய்க்கால் பகுதியில் பாம்புக்குத் தனிக்கோயில் உள்ளது. வாய்க்கால் அருகில் கிழக்கு நோக்கி அக்கோயில் உள்ளது. தனிப்பாம்புச் சிற்பமாக இல்லாமல் பாறையில் சுமார் 3 மீட்டர் நீளத்துக்குப் பாம்பு உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. வழிபாட்டில் அபிஷேக நீர் பாம்பின் வால் பகுதியில் உள்ள துளை மூலம் காலிங்கராயன் வாய்க்காலில் சேரும் வண்ணம் அமைப்பு உள்ளது.

சுமார் 40 ஆண்டுகட்கு முன் அக்கோயில் பூசாரி திருவேங்கட ராமசாமி என்பவரைக் கேட்டபோது இக்கோயிலைக் கட்டியவர்கள் ஆசாரிகள் என்றும், பல பகுதி ஆசாரிகள் வழிபடவருவர் என்றும் கூறினார். தென்புறம் உள்ள மண்டபமும் ஆசாரிகட்கு உரியது என்று கூறினார்.

காலிங்கராயனால் உரிமை பெற்ற ஆசாரிமார்கள் நன்றிக் கடனாக இக்கோயிலைக் கட்டியிருக்கலாம்.

86 தெய்வமான காலிங்கராயன்

செயற்கரிய செயல் செய்தவர்கட்குச் சிலை வைப்பது மட்டுமல்ல அவர்களைத் தெய்வமாகவும் வணங்கினர்.

வாய்க்கால் மூலம் வரலாறு கண்ட காலிங்கராயனை அணையில் சிலை வடித்து வணங்கினர் என்று ஆவணம் கூறுகிறது.

"காலிங்கக் கவுண்டன் கட்டியிருக்கப்பட்ட அணையிலே கவுண்டனையும் (வழிகாட்டிய) சர்ப்பத்தையும் சிலா பிரதிமை ரூபமாகக் கல்வெட்டி வச்சு சிலாசாசனமும் எழுதியிருக்கிறது. அந்த அணை போட்டு இருக்கப்பட்ட இடத்தில் குடிகள் பரம்பரையாய் வருஷப் பிரதியும் உற்சவம் பண்ணிக்கொண்டு வருகிறது. பூசை நைவேத்தியம் பண்ணிக் கொண்டு வந்தால் வெள்ளம் வந்து வெள்ளாமை விளஞ்சு கொண்டு வருகிறது" என்பது ஆவணப் பகுதியாகும்.

ஈரோட்டிலும் கோயில்

ஈரோடு அய்யனாரப்பன் பள்ளு இலக்கியத்தில் ஈரோட்டில் உள்ள எல்லாக் கோயில் கட்கும் பள்ளர்கள் காணிக்கை கொடுத்து வழிபடுகின்றனர். ஈரோட்டில் இருந்த காலிங்க ராயன் கோயிலிலும் வழிபாடு செய்கின்றனர்.

பள்ளர் கூற்றாக

'கங்கை கோத்திரம் காலிங்க ராயர்க்கு

கண்ட சரமும் உத்தொண்டியும் சாற்றுங்கள்'

என்ற தொடர் வருகிறது.

கவுண்டச்சிபாளையம் பாலமடையம்மன் கோயில், வெள்ளோடு சர்வலிங்கேசுவரன் கோயில், இராசா சுவாமி கோயில் போன்ற இடங்களில் காலிங்கராயன் உருவச்சிலை என்று எண்ணத்தக்க சிலைகள் உள்ளன.

ஆங்கில நூலின் கருத்து

காலிங்கராயன் பரம்பரையில் வந்தவர்கள் மட்டுல்ல, கொங்கு நாட்டு வேளாளர்கள் அனைவரும் காலிங்கராயனையும் வழிகாட்டிய பாம்பையும் தெய்வமாகவே வழிபட்டனர் என்பதை 'இந்தியாவின் ஆளுந்தலைவர்களும் பெருமக்களும் நிலக்கிழார்களும்' என்னும் ஆங்கில வரலாற்று நூல் கூறுகிறது.

"Stone statues of Kalingarayar and the serpent were placed near the anicut, and festivals and pujas were performed by his descendants and other ryots' என்பது ஆங்கில நூல் பகுதியாகும்.

காலிங்கராயன் அணையில் இன்று காலிங்கராயன் உருவச்சிலை இல்லை. பாம்புச் சிலை மட்டும் உள்ளது.

87

தேர்தலில் வென்ற பெரியார்

SlNo.	Res.No.	Date	Subject	Resolution
1	1	03.04.1917	To elect a Chairman to the council	The names of candidates and the election rules read out. Out of the 3 candidates Sri.R.S. Viswasan with drew. The votes were then recorded. The result is as follows : 1st ballot T. Srinivasa Mudaliar - 5 votes E.V.Ramasami Naicker- 6 votes One not voting The ballot was repeated. IInd ballot T. Srinivasa Mudaliar - 4 votes E.V.Ramasami Naicker- 8 votes E.V.Ramasami Naicker having secured 8 votes was declared elected as Chair man as per Rule - 2

நகராட்சி ஆவணம்

1917ல் நகராட்சி உறுப்பினர்களாக 12 வார்டுகளில் ஈ.வெ. இராமசாமி நாயக்கர் உட்பட 12 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். உறுப்பினர்கள் தலைவரைத் தேர்வு செய்ய வேண்டும். 3.4.1917இல் தேர்தல் நடைபெற்றது.

தலைவர் பதவிக்கு மூன்றுபேர் போட்டியிட்டனர்.

1. ஈ.வெ. இராமசாமி நாயக்கர்
2. T. சீனிவாச முதலியார்
3. R.S. விஸ்வாசன் (போட்டியிலிருந்து விலகினார்)

முதல் வாக்கெடுப்பு

ஈ.வெ. இராமசாமி நாயக்கர்	6 வாக்குகள்
T. சீனிவாச முதலியார்	5 வாக்குகள்

வாக்களிக்காத நடுவர் விரும்பியதால்

இரண்டாம் வாக்கெடுப்பு

ஈ.வெ. இராமசாமி நாயக்கர்	8 வாக்குகள்
T. சீனிவாச முதலியார்	4 வாக்குகள்

தேர்ந்தெடுக்கப்பட்ட பெரியார் 1920 வரை தலைவர் பதவிவகித்தார்.

88 நகர விரிவாக்கம் செய்த பெரியார்


6) That the limits of the Municipality of Erode be extended on the West so as to include the hamlets of Veerappan Chatram Periavalasu & Subramania Gramdan Valahu of Erode and Periasemur villages.

Resolved to adopt the Government & Municipal Council so as to include Veerappanchatram Pazhayavalagu hamlet of Erode & Periyasemur Pazhayagrahara

Chairman
17-11-17

தந்தை பெரியார் ஈரோடு நகராட்சி மன்றத் தலைவராக இருந்தபோது (1917-1920) 17-11-17 அன்று வீரப்பன் சத்திரம், பெரியவலசு, பிராமண பெரிய அக்கிரகாரம் ஆகியவற்றை ஈரோடு நகராட்சியுடன் இணைக்கத் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றினார். பெரியார் ஆங்கிலத்தில் கையொப்பம் இட்டிருப்பதைக் காணலாம்

89 பெரியார் நடத்திய இந்திப் பள்ளி

தேசிய இயக்கம் காங்கிரஸ் கட்சியில் பெரியார் இருந்த போது இந்தி ஆதரவாளராக மட்டுமல்ல ஒரு முறை இந்தி கற்பிக்க வேண்டிய சூழ்நிலையும் ஏற்பட்டது.

1922 ஆம் வருடம் ஒரு முறை பண்டித மோதிலால் நேரு, வித்தல்பாய் படேல், டாக்டர் அன்சாரி ஆகிய தேசியத் தலைவர்கள் ஈரோடு வந்தபோது பெரியார் வீட்டில் தங்கினர். அவர்கள் ஆலோசனைப் படியும், அவர்கள் வந்ததன் நினைவாகவும் 30 மாணவர்கட்கு இந்தி கற்பிக்கப் பெரியார் பள்ளி தொடங்கினார். 15 மாணவர்கட்கு உண்டி உறையுள் அளித்தார். சுமார் இரண்டு ஆண்டுகள் இப்பள்ளி நடைபெற்றது.

ஈரோடு பழைய இரயில்வே நிலையம் அருகே இருந்த அவருக்குரிய வீட்டில் இப்பள்ளி நடைபெற்றது.

பின்னர் பெரியார் இந்தித் திணிப்பை மிகவும் தீவிரமாக எதிர்த்தார். ஈரோட்டில் இந்தி எதிர்ப்புச் சிறப்பு மாநாட்டைப் பெரிய அளவில் மிகவும் சிறப்பாக நடத்தினார்.

90 குடி அரசும் விடுதலையும்



தமிழ்மக்கள் எல்லாத் துறைகளிலும் முன்னேற்றமடைய உழைக்கும் பத்திரிகை இது. ஆகையால் இதனை ஆதரிக்க வேண்டுவது உங்கள் முதற் கடன் ஆகும். உடனே சந்தாதாராய்ச்சேருங்கள்.

காரியஸ்தர்,
குடி அரசு காரியாலயம்,
ஈரோடு.

'குடி அரசு' முதல் இதழ்

குடி அரசு

காங்கிரஸ் பேரியக்கத்தில் கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டு 1922 ஆம் ஆண்டு கோவை சிறையில் இருந்தபோது ஈ.ரோடு கருங்கல்பாளையம் தங்கப் பெருமாள் பிள்ளையுடன் கலந்து பேசி 1923 சனவரி 19 ஆம் நாள் குடிஅரசு என்ற வார ஏட்டையும், கொங்கு நாடு என்ற மாத ஏட்டையும் நடத்தப் பெரியார் பதிவு செய்தார்.

3.5.1925 முதல் குடி அரசு வார இதழ் வெளிவந்தது. முதல் நாள் 2.5.1925 சனிக் கிழமை வெளியீட்டு விழா ஈ.ரோட்டில் நடைபெற்றது.

முதல் இதழை வெளியிட்டது திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் திருமடத் தலைவர் சைவத்திரு. சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாச்சாரிய சுவாமிகள். ஞானியார் சுவாமிகள் 'நாட்டிலுள்ள உயர்வு தாழ்வு மனப்பான்மையை ஒழித்து சமத்துவ உணர்வு பரவ சமயத்துறையில் உள்ள கேடுகள் ஒழிய நாயக்கரின் குடி அரசு பாடுபட்டால் எனக்கு மிக்க மகிழ்ச்சி, என்று கூறினார். குடி அரசை அச்சிட்டது உண்மை விளக்கம் அச்சுக் கூடத்தில்.

இதழின் நோக்கம் :

"தேசாபிமானமும் பாஷாபிமானமும், சமயாபிமானமும்

இன்னும் மற்ற விஷயங்களையும் உணர்த்துவதற்கே

இப்பத்திரிகை தொடங்கப்படுகிறது" என்றுதந்தை பெரியார் கூறினார். தொடக்கத்தில் கோயில், மசூதி, சர்ச் படம் வந்தது.

1925 முதல் 18.12.1927 வரை குடி அரசு அட்டையில் பாரதமாதா, காந்தி நெசவு நெய்வது, தொழிலாளர் தொழில் புரிவது போன்ற படங்கள் வெளிவந்தன.

18.4.1926 குடி அரசுத் தலைப்பில் "மகாத்மா காந்தி வாழ்க" என்றும், 20.11.1927இல் இருந்து 'கதர் வாழ்க' என்றும் குறிப்பு வெளிவந்தது.

காங்கிரசை விட்டு வெளியேறிய பெரியார் காந்தி, கதரை விடவில்லை. ஈ.வெ.இராமசாமி நாயக்கர் என்று 18.12.1927 வரையும், 25.12.1927 முதல் சாதிப்பெயர் நீக்கப்பட்டு ஈ.வெ.இராமசாமி என்றே அச்சானது.

"குடி அரசு" தங்கப் பெருமாள் பிள்ளை தொடங்கி நடத்தியதாகவும், அவரிடமிருந்து பெற்று பதிவு செய்து பெரியார் நடத்தியதாகவும் பெரியாரின் ஈ.ரோடு தமிழன் அச்சக மேலாளர் இராமானுசம் கூறினார். தங்கப் பெருமாள் பிள்ளை வாழ்ந்தவரை பெரியார் பெயரும், தங்கப் பெருமாள் பிள்ளை பெயரும் ஆசிரியர்கள் பெயராக இருந்தது. கடைசி இதழ் 5.1.1949 அன்று வெளிவந்தது.

விடுதலை

விடுதலை என்ற பெயரில் புதன்தோறும் வரும் வார இதழை மு.சாமிநாதன் திருச்சியி லிருந்து நடத்தினார். பின்னர் நீதிக் கட்சி இதழாக வாரம் இருமுறை 1.6.1935 முதல் சென்னையிலிருந்து வெளிவந்தது. ஆசிரியர் டி.ஏ.வி.நாதன்.

1.1.1937 அன்று விடுதலை நாளிதழ் ஆயிற்று. விடுதலையை நாளிதழாக நடத்த நீதிக்கட்சி ஒப்புக் கொள்ளாவிட்டால் குடிஅரசு காலணா விலையில் நாளிதழாக வெளிவரும் என்று பெரியார் எச்சரித்ததால் நாளிதழ் ஆயிற்று. 3.7.1937 முதல் ஈ.ரோட்டிலிருந்து பெரியாரால் வெளிவந்தது. அப்போதைய ஆசிரியர் பண்டித முத்துசாமி. வெளியிடுபவர் ஈ.வெ.இராமசாமி.

91 முதல் ஆலயப் பிரவேசம் - 1929

தந்தை பெரியார் சுயமரியாதை இயக்கம் தொடங்கும் முன் பல பதவிகளிலிருந்து விலகினார். ஆனால் சில பதவிகளைத் தொடர்ந்து வகித்துவந்தார். அவற்றில் ஒன்று 'ஈரோடு வட்டார தேவஸ்தானக் கமிட்டி'. பழைய கோட்டைப் பட்டக்காரர் நல்லதம்பிச் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றடியார் தலைவர். பெரியார் துணைத் தலைவர். மொத்தம் 11 பேர் உறுப்பினர்கள்.

30.3.1929 அன்று அக் கமிட்டிக் கூட்டத்தில் இந்துக்கள் எந்தச் சாதியாக இருந்தாலும் தாழ்த்தப்பட்டவர்கள் உட்பட எல்லோரும் கோயிலில் சென்று வழிபடலாம் என்று தீர்மானம் செய்தனர். 10 பேர் ஆதரித்தனர். அவர்கள் நிர்வாகத்திற்கு உட்பட்ட கோயில்களில் ஒன்று ஈரோடு திருத்தொண்டீசுவரர் கோயில். தீர்மானம் நிறைவேற்றிய பின் பெரியார் வெளியூர் சென்று விட்டார்.

4.4.1929 மாலை ஈரோடு கச்சேரி வீதி முத்துக் கருப்பண பிள்ளை மகன் ஈசுவரன், ஈரோடு மஞ்சமோட்டான் என்கிற முத்துசாமி மகன் பசுபதி (தலையாரி), ஈரோடு கிருஷ்ணம்பாளையம் நயினான் மகன் கருப்பன் (ஆதி திராவிடர்) மூவரும் விபூதி பூசி தேங்காய், பழம், வெற்றிலை பாக்கு, பூ முதலிய பூசைப் பொருட்களோடு ஈசுவரன் கோயில் நோக்கிப் புறப்பட்டனர். செய்தி எங்கும் பரவியது. அர்ச்சகரிடம் பூசை செய்யக் கேட்டனர். மறுத்த அர்ச்சகர் கோயில் உள் கதவைப் பூட்டிவிட்டு வெளியேறிவிட்டார்.

இவர்களே நவக்கிரகம் அருகில் பூசை செய்து பாட்டுப்பாடி வழிபட்டு பூசை செய்த பின் பாட்டுப்பாடி அதிகாலை வரை இருந்து வெளியேறினர். 5.4.29 முதல் 12.4.29 வரை தண்டோரா மூலம் அறிவித்து நகரின் பல இடங்களில் பொதுக் கூட்டம் நடத்தினர்.

6.4.29 அன்று கோயில் தர்மகர்த்தா வெங்கட்டராம நாயக்கர் மகன் முத்து நாயக்கர் போலீசில் புகார் செய்தார். 18.4.29 அன்று வழக்கு பதிவு செய்யப்பட்டது. FIR எண் 36/29. இ.பி.கோ 291.297.109 படி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

பாரிஸ்டர் ஜார்ஜ் ஜோசப் வேறு மாவட்டத்திற்கு வழக்கை மாற்றவேண்டும் என்று உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தார். நீதிபதி அனந்த கிருஷ்ணய்யர் தள்ளுபடி செய்தார்.

ஈரோடு ஸ்டேஷனரி சப் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் 9 மாதம் வழக்கு நடைபெற்றது. அரசு சார்பில் வாதாடியவர் வக்கீல் ராஜா அய்யர். குற்றம் சாட்டப்பட்டவர்கள் சார்பில் நாகை கே.ச.சுப்பிரமணியம், சென்னை வழக்கறிஞர் டி.எஸ்.ஆறுமுகப் பிள்ளை, திருச்சி வழக்கறிஞர் ஜே.எல்.ராமானுஜம் ஆகியோர் வாதிட்டனர்.

22.1.1930 அன்று மூவருக்கும் தலா 60 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. பசுபதியும், கருப்பனும் அபராதம் செலுத்தினர். ஈசுவரன் அபராதம் கட்ட மறுத்து 2 மாதம் சிறை செல்லத் தயார் ஆனார். பின் உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்ததில் அபராதம் ரத்து செய்யப்பட்டது. ஈசுவரன் தியாகி எம்.ஏ.ஈசுவரன் தான். அவர் அபராதம் கட்ட மறுத்து சிறை செல்லத் தயார் ஆனதை பெரியார் மிகவும் பாராட்டினார்.

92 வெங்கட நாயக்கர் தர்ம வைத்தியசாலை

வைத்திய வள்ளல்
ஈ.வெ.கிருஷ்ணசாமி நாயக்கர்

தந்தை பெரியார் அவர்களின் மூத்த சகோதரர் ஈ.வெ. கிருஷ்ணசாமி நாயக்கர் 28.9.1877ல் பிறந்தவர். பாகவத பாத தூளி (வைணவ அடியார்களின் அடிப்பொடி) எனத் தன்னை அழைத்துக் கொண்டவர். ஈரோடு கோட்டை அரங்க நாதப் பெருமாள் மீது 1927ல் பதிகம் பாடியவர். சித்தமருத்துவ நிபுணர். "வைத்திய வள்ளல்" என்று பட்டம் பெற்றவர். 31.3.1944 அன்று நடைபெற்ற தமிழக சித்த மருத்துவ மாநாட்டுக்குத் தலைமை தாங்கியவர். 14.9.1934 அன்று தன் தந்தை பெயரால் எண் 42 கச்சேரி வீதியில் "தர்ம வைத்திய சாலை" ஏற்படுத்தினார். அதனைத் தொடங்கி வைத்தவர் நீலம்பூர் மகாராஜா. 15.9.1935 முதல் 14.9.1936 வரை ஓராண்டு சிகிச்சை பெற்றவர்கள் 1) ஆண்கள் 5775: 2)பெண்கள் 2695: 3) ஆண் குழந்தைகள் 3256; பெண் குழந்தைகள் 1783. ஈரோடு நகராட்சி மன்ற உறுப்பினராக இருந்தார். 4.2.1950 அன்று காலமானார்.

முதலில் தீவிர பக்தராக இருந்தவர் பின் பெரியாருடன் இணைந்தார். 1936 ஆம் ஆண்டு குடி அரசு ஆசிரியராக இருந்தார்



R. No. M. 2041 "KUDI-ARASU"

குடி அரசு

93 பெண்ணுரிமை பேணிய பெண்மணி

ஈரோடு மண்டி ஈ.த.வெங்கட நாயக்கர் - சின்னத்தாயம்மாள் தம்பதியர்க்கு நான்கு மக்கள்.

ஈ.வெ.கிருஷ்ணசாமி நாயக்கர் (1877)

ஈ.வெ.இராமசாமி நாயக்கர்(1879)

பொன்னுத் தாயம்மாள் (1881)

கண்ணம்மாள் (1891)

கடைசியாகப் பிறந்த கண்ணம்மாள் மாப்பிள்ளை நாயக்கர் என்று அழைக்கப்பட்ட எஸ். இராமசாமி நாயக்கருக்கு மணம் முடிக்கப்பட்டார்.

கண்ணம்மாள் ஈரோடு நகராட்சியின் முதல் பெண் உறுப்பினர். அப்போது நகராட்சி மன்றத் தலைவர் கே.ஏ.ஷேக் தாவூது சாகிப் அவர்கள். அப்போது நகராட்சிப் பணிகளில் பெண்கள் இல்லை.

12.2.1932 அன்று நடைபெற்ற நகராட்சி மன்றக் கூட்டத்தில் கண்ணம்மாள் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார்.

"ஆண்களோடு பெண்கள் உத்தியோக விஷயத்தில் போட்டி போட முடியாது. எனவே நமது நகராட்சியில் பெண்களுக்கென்றே சில பதவிகளை ஒதுக்க வேண்டும். அதற்குப் பெண்களை மட்டுமே நியமிக்க வேண்டும். அம்மை குத்துதல், டைப்பிஸ்ட், வரிவசூலிப்பவர், வார்டு மேஸ்திரி, ஆபிஸ் அட்டெண்டர் முதலிய பணிகளில் பெண்களையே நியமிக்க வேண்டும். தேவையான பயிற்சி வேண்டுமெனில் பயிற்சியளித்துப் பரீட்சை வைத்துத் தேர்வு செய்ய வேண்டும். 1,2,3 வகுப்புக்களுக்குப் பெண்களையே ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும்".

இவ்வாறு தீர்மானம் கொண்டுவந்து பெண்கள் நிலை பற்றி மிக உருக்கமாகப் பேசினார். அவர் வேண்டுகோளை ஏற்று அவர் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. சில அமுலுக்கும் வந்தன.

நகராட்சி மன்ற உறுப்பினராக இருந்தது போல மாவட்டக் கழக உறுப்பினராகவும் இருந்துள்ளார். முக்கியப் பொறுப்புக்கள் பல இவரிடம் ஒப்படைக்கப்பட்டன. அனைத்துத் தரப்பினரிடமும் நன்மதிப்பைப் பெற்றார்

கே. ஏ. ஷேக் தாவூது சாகிப்

94

காந்தியடிகள் பாராட்டிய ஈரோட்டுப் பெண்கள்

கள்ளுக்கடை மறியலுக்குக் காரணமானவர்களாக காந்தியடிகளால் புகழப்பட்ட ஈரோட்டுப் பெண்கள். தந்தை பெரியாரின் தங்கை கண்ணம்மாள் ராமசாமி, துணைவியார் நாகம்மையார்.

காந்தியடிகள் இரண்டாம் முறை ஈரோட்டுப் பயணத்தில் 25.9.1921 அன்று பெரியார் இல்லத்தில் தங்கினார். அப்போது காங்கிரஸ் மதுவிலக்குக் கொள்கையை ஏற்றிருந்தாலும் போராட்டம் எதுவும் நடக்கவில்லை.

பெரியார் இல்லத்தில் பெரியாரின் மனைவி நாகம்மையாரும், தங்கை கண்ணம்மாளும் காந்தியடிகளிடம் மதுவின் கொடுமையை எடுத்துக் கூறி அவசியம் கள்ளுக்கடைகளை ஒழிக்க வேண்டும். அதற்காகப் போராட்டம் தொடங்க வேண்டும் என்றனர். காந்தியடிகள் ஏற்றுக் கொண்டார்.

கள்ளுக்கடைமறியல் தொடங்கியது. ஈரோட்டில் பெரியார், தங்கப் பெருமாள் பிள்ளை உட்பட 42 பேர் கைதாகினர். பெரியார் தன் தோட்டத்தில் இருந்த 500 தென்னை மரங்களை வெட்டினார்.

காந்தியடிகள் 22.12.1921 'யங் இந்தியா' இதழில் 'ஈரோட்டுப் பெண்கள்' என்ற தலைப்பில் நாகம்மையார், கண்ணம்மாள் இருவரையும் மிகவும் புகழ்ந்து எழுதினார். பம்பாயில் நடைபெற்ற பேச்சு வார்த்தையில் அரசு சமாதானத்துக்கு இசைந்தது. இது குறித்து ஒரு மாநாடு நடைபெற்றதும் பண்டித மதன்மோகன் மாளவியா, சர் சங்கரன் நாயர் இருவரும் கள்ளுக் கடை மறியலை நிறுத்தி வைசிராயுடன் பேசலாம் என்றனர். அந்த மாநாட்டில் காந்தியடிகள் கள்ளுக் கடை மறியலை நிறுத்துவது என் கையில் இல்லை. அது ஈரோட்டில் இரு பெண்கள் கையில் உள்ளது என்றார். இச்செய்தி விரிவாக இந்து ஆங்கில நாள் இதழில் வெளிவந்துள்ளது (19.1.1922).

பெரியார் இல்லம்

95

மாமியாரும் மருமகளும் செய்த திருப்பணி

தந்தை பெரியாரின் தகப்பனார் ஈ.த. வெங்கட நாயக்கர். தாயார் சின்னத் தாயம்மாள். வெங்கட நாயக்கரின் சித்தப்பா பெயர் இராம நாயக்கர். இராம நாயக்கரின் மனைவி பெயர் சென்னம்மாள். இவர் பெரியாரின் தாயாருக்குச் சின்ன மாமியார் முறை ஆகிறார்.

மாமியாரும், மருமகளும் சொந்தமாகச் சிறுவாட்டுப் பணம் சேர்த்து வைத்தனர். அவற்றைத் தங்கள் சொந்தச் செலவுக்குச் செலவளிக்காமல் ஆலயப்பணி செய்ய விரும்பினர்.

இரு குடும்பத்தாருக்கும் ஈரோடு கோட்டையில் உள்ள கஸ்தூரி ரங்கநாதர் கோயிலில் வழிபாடு செய்யும் வழக்கம் உண்டு. வழிபாட்டின் போது பெருமாள் கோயிலில் பிரகாரம் சுற்றுவர். பிரகாரம் மண் பாதையாக இருந்ததாலும். கற்கள் இருந்ததாலும் நடக்கச் சிரமமாக இருந்தது.

இருவரும் கோட்டைப் பெருமாள் கோயில் பிரகாரம் முழுவதற்கும் கடப்பைக்கல் தளவரிசை போட முடிவு செய்தனர். பெரியாரின் தந்தை அதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். பிரகாரம் முழுவதும் கடப்பைக்கல் போடப்பட்டது. இந்த அரிய செய்தியை ஒரு கல்வெட்டாகப் பொறித்து வைத்தார் வெங்கட நாயக்கர். அந்தக் கல்வெட்டு இன்றும் கோயிலில் உள்ளது. திருப்பணி நடைபெற்ற ஆண்டு 1904.

இதைக் குறிக்கும் கல்வெட்டு

ஸ்ரீமதே ராமாநுஜாயநம

ஈரோடு பேட்டையில்

கன்னட தாச பலிஜ

ஜாதி தம்ம நாயக்கர் குமா

ரர் மண்டி ஈ.வெங்கட

நாயக்கர் பெண்ஜாதி சின்

னத்தாயம்மாளும் மேற்படி

யார் சிறிய தகப்பனார் இற

ந்துபோன ராம நாயக்

ர் பெண்ஜாதி சென்னம்மா

ளும் சேர்ந்து தங்கள்

சிறுவாட்டுத் திரவிய

ங்களைக் கொண்டு இந்

த ரெங்கநாதஸ்வாமிச

ன்னிதி சுற்றுப் பிராகாரம்

பூராவும் கடப்பைக்கற்க

ளால் தளவரிசைப் பாவ

ப்பட்ட மேற்படி கைங்கர்ய

த்தை பகவத் முகோல்

லாசார்த்தமாக சமர்ப்பி

க்கப்பட்டது

பாகவத பாத தூளி

ஈத வெங்கட நாயக்கன்

கலியுக வருசம் 5005

பெரியாரின் தாயார்
கோயில் திருப்பணிக் கல்வெட்டு

96 பெரியார் மண்டியில் சமத்துவம்

மகன் இராமசாமி வீட்டை விட்டு வெளியேறி வடநாடு வரை சுற்றி வீடுவந்தார். தந்தை வெங்கட நாயக்கர் மண்டியை இராமசாமி வசம் ஒப்படைத்தார். வீட்டுக்கு அடங்காத பிள்ளையை அடக்க வழி. மண்டியின் பெயர் 'ஈ.வெ.ராமசாமி நாயக்கர் மண்டி' அப்போது இராமசாமி வயது 21.

மண்டியில் மூன்று வேலைக்காரர்கள். அவர்கள் மாத சம்பளம் 10-8-7 ரூபாய். மண்டி மூலதனம் ரூ.10000/- இராமசாமி நாயக்கர் பங்கு ரூ.10000/- வேலைக்காரர்கள் மூவரையும் 'கஷ்டக் கூட்டாளிகள்' என்று எழுதிக் கொண்டார்.

வருட முடிவில் கிடைத்த லாபம் 49 பங்காகப் பிரிக்கப்பட்டது. மூலதனத்துக்கு லாபத்தில் 16 பங்கு. முதலாளிக்கு 16 பங்கு. மூன்று கஷ்டக் கூட்டாளிகட்கும் 16 பங்கு. மீதி ஒரு பங்கு சுவாமிக்கு (ஆம் கடவுளுக்குத்தான்).

படத்தில் தெரிவது ஈ.வெ. ராமசாமிநாயக்கர் மண்டி இருந்த இடம். குடிசைகள் எல்லாம் கோபுரம் ஆகும் இக்கால அதிவேக மாற்றத்திற்குப் பின்னும் 120 ஆண்டுகளாக இக்கட்டிடம் ஈ.ரோடு நேகாஜி சாலை காவல் நிலையம் எதிரில் அப்படியே மாறாமல் இருக்கிறது. இக் கட்டிடம் முளசி இளைய பெருமாள் மலைக்கோயிலுக்கு முளசி நாட்டுக் கவுண்டர் தலைவர் பெரிய ரங்கய்ய கவுண்டர் கொடுத்த கொடை (சர்வே எண் 145, 146)

பெரியார் மண்டி

97

அண்ணாவின் முதல் நாடகம்

அண்ணா அவர்கள் 8.3.1942 அன்று காஞ்சிபுரத்தில் 'திராவிட நாடு' வார இதழைத் தொடங்கினார். உறவினரான ஏ.கே.தங்கவேல் முதலியார் நிலத்தை அடகு வைத்துக் கொடுத்த ரூபாய் 500 தான் முதலீடு.

ஒரு வருடம் கடந்த பின்னர்தான் 'திராவிட நாடு' இதழுக்கு நன்கொடை வழங்குமாறு பெரியார் வேண்டுகோள் விடுத்தார் (விடுதலை 28.4.1943). டி.பி.எஸ்.பொன்னப்பா திராவிட நாடு இதழ் வளர்ச்சிக்காக நாடகம் எழுத வேண்டினார். அண்ணா 'சந்திரோதயம்' நாடகம் எழுதி காஞ்சிபுரத்தில் தொடங்கப்பட்ட திராவிட நடிகர் சங்கத்தில் நாடகப் பயிற்சி நடந்தது.

நாடகத்தை பெரியார் முன்னிலையில் நடத்த அண்ணா விரும்பினார். ஈரோடு சென்ட்ரல் தியேட்டரில் 19.11.1943ல் நாடகம் நடைபெற்றது.

டிக்கட் ரூபாய் 5.3.2.1 பெண்கள் தரை 0.8.0 அணா. நன்கொடையும் வாங்கப்பட்டது. பெரியார் தலைமை. நாடகத்தைப் பாராட்டியவர்கள் சேலம் காலேஜ் பிரின்ஸ்பால் அ.இராமசாமிக் கவுண்டர், நகைச்சுவை அரசு என்.எஸ். கிருஷ்ணன், புரட்சிக் கவி கனக சுப்புரத்தினம் (பாரதிதாசன்). மொத்தம் வசூல் தொகை ரூபாய் 5000-00

நன்கொடையளித்தவர்கள்

1.	பழைய கோட்டை இளைய குமார பட்டக்காரர் ந.அர்ச்சுனன்	ரூ	200-0-0
2.	பெரியார் ஈ.வெ. இராமசாமி	ரூ	150-0-0
3.	ஈரோடு ஈ.எம். அண்ணாமலை பிள்ளை	ரூ	51-0-0
4.	ஈரோடு எம்.ஜி.அங்கப்ப செட்டியார்	ரூ	50-0-0
5.	ஈரோடு அக்கிரகாரம் ஈ.கே.எம் அப்துல் கனி சாகிப்	ரூ	35-0-0
6.	ஈரோடு கான்சாகிப் கே.ஏ.ஷேக் தாவூத் சாகிப்	ரூ.	25-0-0
7.	ஈரோடு எம்.சிக்கய்ய நாயக்கர்	ரூ	25-0-0
8.	ஈரோடு டி. அண்ணாமலைக் கவுண்டர்	ரூ	25-0-0
9.	ஈரோடு அக்கிரகாரம் ஈ.கே.ஹாஜி முகமது பீர் அன்ட் சன்	ரூ	25-0-0
10.	ஈரோடு அகமது பாட்சா சாகிப்	ரூ	25-0-0
11.	ஈரோடு எஸ்.கே.ஷேக் தாவூத்சாயபு அன்ட் கோ	ரூ	25-0-0
12.	எஸ்.கே.எம். முகமது ஹபீப்சாயபு	ரூ	25-0-0
13.	ஈரோடு எஸ்.இராமசாமி நாயக்கர்	ரூ	25-0-0
14.	ஷண்முகம் ரைஸ் மில்	ரூ	20-0-0

15..எஸ்.கே.எஸ். காதர் சாயபு ரூ 20-0-0

16. சேர்மன் ஆர்.கே.வெங்கிடுசாமி ரூ 20-0-0

17. அக்கிரகாரம் எம்.எஸ்.ஏ.முகமது அப்துல்லா ரூ 10-0-0

18. கே.எஸ்.அப்துல் சமத் ரூ 10-0-0

ஊத்துக்குளி ஜமீன்தார் அகத்தூர் முத்துராமசாமிக் காலிங்கராயர் ரூ 25-0-0 அனுப்பி யிருந்தார்.

நடித்தவர்கள் : சி.என். அண்ணாத்துரை, ஈழத்து அடிகள், சி.வி.இராச கோபால், சி.வி.எம்.அண்ணாமலை, எஸ்.வி.லிங்கம், டி.பி.எஸ்.பொன்னப்பா ஆகியோர்

செலவு விபரம்

தமாஷாவரி	ரூ	195-15-0
முனிசிபல் லைசென்ஸ்	ரூ	4-8-0
ஸ்லைடு தயாரிப்பு	ரூ	6-8-0
வண்டி வாடகை	ரூ	15-8-0
மாலைகள்	ரூ	7-12-0
வாழைக்கம்பம், விளம்பரம்	ரூ	10-0-0
2 நாள் சாப்பாடு, காபி	ரூ	10-7-0
சீன் செட்டிங், டிரஸ்	ரூ	25-0-0
விறகு	ரூ	2-0-0

பெரியார் அண்ணா நினைவகம்

98

யார் இந்தப் பன்னீர்செல்வம் ?

ஈரோடு நகரின் மையப் பகுதியில் பன்னீர் செல்வம் பூங்கா உள்ளது. நாள்தோறும் பல்லாயிரக் கணக்கான மக்கள் அதைக் கடந்து செல்கின்றனர். அப்பெயர்பற்றி பெரும்பாலோர்க்குத் தெரியாது.

2007 அக்டோபர், நவம்பரில் 'மாநகராட்சி மலர்' தயார் செய்ய நகராட்சி அலுவலர்கள் சிலர் என் இல்லம் வந்தனர். அவர்கள் கேட்ட கேள்வி ''யார் இந்தப் பன்னீர் செல்வம்'' என்பது.

திருவாரூரை அடுத்துள்ள செட்டியாபுரத்தில் தாமரைச்செல்வம், இரத்தினம் அம்மாள் ஆகியோர் மகன் பன்னீர்செல்வம். பாரிஸ்டர் பட்டம் பெற்று வழக்கறிஞரானார். தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தில் தீவிரப் பங்கு கொண்டார். 1918ல் தஞ்சை நகர்மன்றத் தலைவரானார். 1930ல் சட்டமன்ற உறுப்பினர் ஆனார்.

பன்னீர் செல்வம்

தஞ்சை மாவட்டக் கழகத் தலைவராகி சத்திரங்களில் இருந்த சாதி வேறுபாட்டை நீக்கினார். திருவையாறு வடமொழிக் கல்லூரியை அரசர் கல்லூரி ஆக்கித் தமிழ் இடம் பெறச் செய்தார். வட்ட மேசை மாநாட்டில் காந்தியடிகளுடன் கலந்துகொண்டார்.

நீதிக் கட்சியின் முன்னணித் தலைவர்களில் ஒருவராக விளங்கினார். 1937ல் சட்டமன்ற உறுப்பினர் ஆகி இடைக்கால அரசில் நிதி, உள்துறை அமைச்சரானார்.

1928ல் ''இராவ் பகதூர்'' பட்டமும், 1938ல் ''சர்'' பட்டமும் வழங்கப்பட்டது. தந்தை பெரியார் அவர்களைத் தலைவராக ஏற்றுக் கொண்டவர். ஒருமுறை ஈரோட்டை இழிவாகக் கூறிய இராஜாஜி அவர்கட்கு சட்டமன்றத்தில் இவர் கூறிய பதில்,

'கிறித்தவர்களுக்கு எப்படி ஜெருசலமோ, முஸ்லிம்களுக்கு எப்படி மெக்காவோ, உங்களுக்கு எப்படிக் காஞ்சிபுரமோ அப்படி எங்களுக்கு ஈரோடு, என்பது.

போர்க்கால இங்கிலாந்து அமைச்சரவையில் இந்திய அமைச்சருக்கு ஆலோசகராக 10.1.1940ல் நியமிக்கப்பட்டார். விமானத்தில் இங்கிலாந்து செல்லும் போது ஓமன் கடல் பகுதியில் ஏற்பட்ட விமான விபத்தால் 1.3.1940ல் காலமானார்.

அவர் நினைவாக 'வெல்ஸ்பார்க்' 'பன்னீர்செல்வம் பூங்கா' ஆகியது. மக்கள் வழக்கு பி.எஸ்.பார்க்(பன்னீர் செல்வம் எனலாமே).

99 அன்றைய புலனாய்வுச் சோதனை

சென்னை மாகாண அரசு ஆணைப்படி ஈரோடு குடிஅரசு, விடுதலை அலுவலகங்களைச் சோதனையிட 3.8.1939 அன்று சென்னை சி.அய்.டி. இன்ஸ்பெக்டர் கேசவ மேனன் ஈரோடு வந்தார்.

ஈரோடு தாசில்தார் மூன்று பேரை மத்யஸ்தர்களாக நியமனம் செய்தார். அவர்கள்

ஈரோடு மணியம் வேணுகோபால நாயுடு

அங்கமுத்துப் பிள்ளை

மௌல்வி நயினா முகமது சாயபு ஆகியோர்.

சி.அய்.டி. இன்ஸ்பெக்டர் கேசவமேனன் 'முதலில் மத்யஸ்தர்கள் என்னைச் சோதனையிட்டுக் கொள்ளலாம்' என்றார். இன்ஸ்பெக்டரை மூவரும் சோதனை செய்தனர்.

இன்ஸ்பெக்டர் அலுவலகத்தைச் சோதனையிடும் போது மூவரும் உடன் இருந்தனர். காலை முதல் மாலை வரை சோதனை நடைபெற்றது.

சோதனையிட்ட இன்ஸ்பெக்டர் இறுதியில் விடுதலை ஆசிரியர் அ.பொன்னம்பலனார், தென்னிந்திய நல உரிமைச் சங்கப் பொருளாளர் கி.ஆ.பெ. விசுவநாதன் ஆகியோரின் சில கடிதங்களை மட்டும் மத்யஸ்தர்களிடம் காட்டி எடுத்துச் சென்றார். இதன் முடிவு என்ன வென்று தெரியவில்லை

இப்படி சோதனை நடந்தால் எதையாவது வைத்துப் பிடிக்க முடியாது அல்லவா?

இச்சோதனை பற்றி 7.8.1939 அன்று சென்னை சட்ட சபையில் எதிர்க்கட்சித் தலைவர் செட்டிநாடு குமாரராஜா முத்தைய செட்டியார் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்தார். சர்.ஏ.டி.பன்னீர்செல்வம் அதை ஆதரித்தார். இந்தத் தீர்மானத்தை அவைத்தலைவர் ஏற்றுக் கொள்ளவில்லை.

இன்றைய சோதனைகளில் அந்தத் துறையினர் மட்டுமே சோதனையிடுகின்றனர். முன்பு போல மத்யஸ்தர்களை உடன் வைத்துக் கொண்டு சோதனை செய்தால் எந்தப் புகாரும் வர இடமில்லை. இப்போதுகூட இம்முறையைக் கையாளலாமே.

பெரியாரின் குடி அரசுப் பதிப்பகம் இவ்வாறு பலமுறை சோதனைகட்கு உட்பட்டுள்ளது.

இன்று சோதனைகள் காவலர், பாதுகாப்புப் படை துணையுடன் நடத்தப்படுகிறது. பல அரசியல் காரணங்களுக்காக நடத்தப்படுகின்றன என்ற புகாரும் உண்டு.

100

புயலும் பூகம்பமும்

ஈரோட்டில் புயல் வீசுமா? பூகம்பம் வருமா ? என்று கேட்டால் அவையெல்லாம் கடற்கரையில் தான் வரும். ஈரோடு போன்ற உள் நாட்டுப் பகுதியில் அவற்றுக்கு வாய்ப்பே இல்லை என்போம்.

ஆனால் ஈரோட்டில் புயலும் வீசியுள்ளது. பூகம்பமும் ஏற்பட்டுள்ளது. தமிழ்ப் பேரகராதி புயல் என்பதற்கு 'கொடுங்காற்று' என்று கூறுகிறது. கி.பி.1793ஆம் வருடம் (பரிதாபி வருடம் பங்குனி மாதம் 16) ஈரோட்டில் கடுமையான புயல் வீசியது. ஈரோட்டை ஒட்டிய பல ஊர்களில் அன்று ஏற்பட்ட புயலை ஆவணப் படுத்துவது போல் வெங்கம்பூர் சுவாமிநாதன் ஒரு இலக்கியம் பாடியுள்ளார். அந்த நூலுக்குக் ''கோணக் காத்துப் பாடல்'' அல்லது ''காத்து நொண்டிச் சிந்து'' என்று பெயர். ஈரோட்டைப் பற்றிய பகுதி.

'சிந்தனை வராமலிருந்த ஈரோட்டில்
செந்நெல்களும் வாழைப்பலன் சேதம்
ரொம்ப வாம்
பந்திபந்தி யாயிருந்த கூரை வீடெல்லாம்
பறக்குது காத்திலே இருக்காமல்
வந்த பலன் வீணாகிப்போச்சே இளம்பயிர்
மணலோடு தரையாய்த் தரையாச்சுதே'

என்பதாகும்.

பூகம்பம் என்பதற்கும் பேரகராதி பூமி அதிர்ச்சி என்று கூறுகிறது. 8.2.1900 அன்று அதிகாலை 3.10 மணிக்கு ஈரோட்டுப் பகுதியில் பூகம்பம் ஏற்பட்டது. அறிவியல் ஆய்வின்படி பூகம்பம் ஏற்பட ஓரளவு சாத்தியமான பகுதியில் கோவை மாவட்டம் உள்ளது என்று கூறப்படுகிறது.



பூகம்பத்தின் போது விசயமங்கலம் சமணக் கோயில் முன்பு உள்ள மானஸ்தம்பத்தின் சிகரம் உடைந்து கீழே விழுந்து விட்டது.

101

பூங்காக்கள்



பொன்விழாப் பூங்கா
(கோல்டன் ஜூபிலி பார்க்)

1. சீனிவாசா பார்க்

9.4.1927 அன்று கவர்னர் விஷ்கவுன்ட் கோஷன் திறந்து வைத்தபோது சீனிவாசா பார்க். டி. சீனிவாச முதலியார் பார்க் நிறுவியவர். மூன்று முறை (1911-1917: 1925-1927) நகராட்சித் தலைவராக இருந்தவர். பின் பார்க் 'மக்கள் பூங்கா' என்று மாற்றம் பெற்று (பீப்பிள்ஸ் பார்க்) இன்று வ.உ.சி. பூங்கா என வழங்கப் பெறுகிறது. நகர அடையாளச் சின்னத்தில் இப்பூங்காவே இடம் பெற்றுள்ளது. இங்கு இரு காந்தி சிலைகள் உள்ளன.

2. வெல்ஸ் பார்க்

1932-1933 ஆம் ஆண்டு கோவை மாவட்ட ஆட்சியராக இருந்தவர் G.W.WELLS என்பவர். அவர் பெயரில் ஒரு பூங்கா ஈரோட்டில் ஏற்படுத்தப்பட்டது. WELLS PARK என்று பெயர் சூட்டப்பட்டது.

அப்போது சென்னை மாநிலப்பொதுப்பணித்துறை அமைச்சராக விளங்கிய P.T. ராஜன் (பொன்னம்பலம் தியாகராஜன்) 1.9.1933 அன்று பூங்காவைத் திறந்து வைத்தார். அப்போது நகராட்சி மன்றத் தலைவராக விளங்கியவர் கே.ஏ.ஷேக் தாவூது சாகிப். பின் இப்பூங்கா பன்னீர் செல்வம் பூங்கா என்று பெயர் மாற்றப்பட்டது இன்று பெயர் மட்டுமே பூங்கா என உள்ளது.



வெல்ஸ் பூங்கா – 1933
(பன்னீர் செல்வம் பார்க்) ஈரோடு

3. கோல்டன் ஜூபிலி பார்க்

ஈரோடு நகராட்சிப் பொன் விழா (தாமதமாகவே) 29.30.11.1935 அன்று கொண்டாடப் பட்டது. கோவை மாவட்ட ஆட்சியரின் துணைவியார் Mrs. HOLDSWORTH பொன்விழா நினைவுப் பூங்காவைத் திறந்து வைத்தார். பிரப் சாலையில் கோஷா ஆஸ்பத்திரி வாயில் முதல் பிரப் சர்ச் வாயில் வரை நீள் சதுரமாக பூங்கா அமைந்திருந்தது. பின் இந்தப் பூங்கா பிரப் ரோடு விரிவாக்கத்தால் எடுபட்டுவிட்டது. அப்போதைய நகர் மன்றத் தலைவர் கான் பகதூர் கே. ஏ. ஷேக் தாவூது சாகிப் அவர்கள்.

4. திரு.வி.க.பூங்கா

கிருஷ்ணா தியேட்டர் அருகில் இந்தச் சிறிய பூங்கா உள்ளது. ஈரோடு நகராட்சி ஒரு முறை திரு. வி. க அவர்கட்கு வரவேற்பு அளித்தது. இவர் சமயப் பற்று உடையவர் ஆயினும் பெரியாரின் சீர்திருத்தக் கருத்துக்களை ஆதரித்தவர். தமிழ் அறிஞர் பெயரில் பூங்கா இருப்பது சிறப்புக்கு உரியது.

5. தங்கப் பெருமாள் பிள்ளை பூங்கா

இப்பூங்கா கருங்கல்பாளையத்தில் உள்ளது. 1916ல் பாரதி வாசக சாலையை நிறுவியவர். பாரதியாரை ஈரோட்டுக்கு வரவழைத்தவர். தேசிய இயக்க நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டவர். பெரியாருக்கு குடி அரசு இதழ் தந்தவர். உள்ளூர்த் தலைவருக்கு மரியாதை இப்பூங்கா.

6. பெரியார் நகர் பூங்கா

பசுமை வளாகத்திற்கு எடுத்துக் காட்டாக இந்தப் பூங்கா திகழ்கிறது. திரு. எஸ்கேஎம். மயிலானந்தன் அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒரு அறக்கட்டளை இந்தப் பூங்காவை நிர்வகித்து வருகிறது. பெரியார் நகரில் 450 மரங்கள் நட்டுள்ளனர். கட்டணம் செலுத்தி தினசரி சுமார் 200 பேரும் விடுமுறை நாட்களில் சுமார் 1000 பேரும் பூங்காவின் பசுமையை அனுபவிக்கின்றனர். குழந்தைகள் விளையாடும் இடம் உள்ளது. தனியார் நிர்வகிக்கும் பூங்காக்களில் தலை சிறந்தது. நகர் மக்கள் மட்டுமின்றி சுற்றுவட்டார ஊர் மக்களும் பூங்காவிற்கு வருவது சிறப்புக்கு உரியது.

பெரியார் நகர் பூங்கா

102

மறைந்த ஏரிகள்

தெப்பக்குளம் மறைந்து மைதானம் ஆனது போல் ஈரோட்டில் இரண்டு ஏரிகள் மறைந்துவிட்டன.

கி.பி.948 ஆம் ஆண்டு சேர மன்னன் கோ ரவி கோதை ஆட்சிக் காலத்தில் மூன்று சகோதரர்களிடம் இடம் வாங்கி கொல்லம்பாளையம் பகுதியில் அரசு அதிகாரி' தென்னவன் பேரரையன் ஆன வஞ்சி வேள் தாழி' என்பவன் ஒரு ஏரிகட்டினான். அவன் பெயரால் அது 'தாழி ஏரி' எனப்பட்டது. அந்த ஏரியைப் பராமரித்துப் பாதுகாக்க மூலப் பொருளையும் வைத்தான். பயன் பாட்டில் இருந்த ஏரி காலிங்கராயன் கால்வாய் வரவால் பயன் இன்றி அழிந்து விட்டது. இதைக் குறிக்கும் கல்வெட்டு கொல்லம்பாளையம் கெஞ்சியான்காடு கெங்காடு வேலி ஓரம் ஏரிக்கரைப் பகுதியில் இருந்தது. இப்போது இக்கல்வெட்டு கலைமகள் அருங்காட்சியகத்தில் பாதுகாப்பில் உள்ளது.

பெரியார் நகரில் சிதம்பரம் காலனியின் கிழக்கே ஒரு சிறிய ஏரி இருந்தது. நீர் நிரம்பிய அந்த ஏரி 'பொய்கை ஏரி' என்று அழைக்கப்பட்டது. காலப்போக்கில் அந்த ஏரியை மக்கள் 'பொய்யேரி' என்று அழைத்தனர். இன்று ஏரியே பொய்யாகி விட்டது. ஏரி இருந்த அடையாளம் உள்ளது. அங்குள்ள கருப்பண சாமியை இன்றும் மக்கள் 'ஏரிக்கரைக் கருப்பணசாமி' என்று அழைக்கின்றனர்.



தாழி ஏரிக் கல்வெட்டு
(கி.பி.948)

103 படகுப் போக்கு வரத்து

ஈரோடு - பள்ளிபாளையம் காவிரிப் பாலம் கட்டும் முன் ஈரோட்டு மக்களும் . பள்ளிபாளையம் வட்டார மக்களும் காவிரியைக் கடக்கப் படகுகளையே பயன்படுத்தினர். மூன்று மார்க்கங்களில் படகுப் போக்குவரத்து நடைபெற்றது.

ஈரோடு-கலியனூர்:

கலியனூர்-ஈரோடு:

ஈரோடு-சமயசங்கிலி:

சமயசங்கிலி-ஈரோடு:

ஈரோடு-பள்ளிபாளையம்:

பள்ளிபாளையம்-ஈரோடு

மார்க்கங்களில் படகுப் போக்குவரத்து நடைபெற்றது.

காவிரியில் வெள்ளம் இருக்கும்போது நட்டாற்றீசுவரன் கோயிலுக்குப் போகப் படகு பயன்பட்டது. இப்போது அங்கும் பாலம் கட்டப்படுகிறது. பாலம் இல்லாத இடங்களில் இன்னும் படகுப் போக்குவரத்து உள்ளது.

104 முதல் ரயில் ஓடியது

சென்னைக்கு இருப்புப்பாதை 1856ல் வந்தது. ஈரோட்டிலிருந்து போத்தனூருக்கு முதல் இரயில் 12.5.1862ல் இயக்கப்பட்டது. அப்போது கோயமுத்தூரில் இரயில் நிலையம் இல்லை. மேட்டுப்பாளையம் வரை இருப்புப்பாதை போடப்பட்ட போதுதான் கோவையில் இரயில் நிலையம் ஏற்பட்டது. இரயில் கொம்மக்கோயில் அருகே (பெருந்துறை இரயில் நிலையம்) செல்லும் போது மக்கள் கூட்டம் இரயிலை வழிமறித்துக் கொண்டது. (நெருப்பு வெளியே தெரிந்த காரணத்தால்) கொள்ளிவாய்ப் பிசாசு இரயிலை இழுக்கிறது. எங்கள் ஊர் வழியாக இரயிலைப் போக அனுமதிக்க மாட்டோம் என்று கூறினர். அப்போது புகைவண்டி நிலையம் மூளப்பாளையம் வடபுறம் உள்ள இரயில்வே காலனிப் பகுதியில் இருந்தது.

திருச்சி இரயில் 1.1.1868 முதல் ஓடியது. இரண்டும் அகலப்பாதை. திருச்சி இரயில்பாதை 1879இல் குறுகிய இரயில்பாதையாக மாற்றப்பட்டது. 1929 இல் மீண்டும் அகலப்பாதை யானது.

ஈரோடு போத்தனூர் பாதையை 'தென்னிந்திய இரயில்வே கம்பெனியும்', திருச்சிப் பாதையை மெட்ராஸ் இரயில்வே கம்பெனியும் நடத்தியது. மெட்ராஸ் இரயில்வே கம்பெனியை தென்னிந்திய இரயில்வே கம்பெனி விலைக்கு வாங்கியது. இந்திய அரசு 1945 ஆம் ஆண்டு தென்னிந்திய இரயில்வே கம்பெனியை ரூபாய் 1646703 ரூபாய்க்கு பாங்கி தென்னக இரயில்வே என்று பெயரிட்டது. தந்தை பெரியார் திராவிடன் இரயில்வே என்று பெயரிடப் படவேண்டும் என்றார்.

105

பழைய இரயில் நிலையம்

பழைய இரயில் நிலையம்

1921 இல் பாரதியார் வந்து இறங்கியது பழைய இரயில் நிலையத்தில்தான். புது இரயில் நிலையம் கட்டப்பட்ட பின் பழைய இரயில் நிலையம் என்னவாயிற்று ?

இரயில், இரயில் நிலையங்கட்குத் தேவையான பொருட்கள், தளவாடங்கள் இருப்பு வைக்கும் பெரிய கிடங்காக இந்நிலையம் பயன்படுகிறது. சேலம் -திருச்சி வரையிலும், மேட்டுப்பாளையம், குன்னூர் வரையிலும் பாலக்காடு கோட்டம் மங்களூர் வரையிலும் தேவையான பொருட்கள் இங்கிருந்துதான் அனுப்பப்படுகிறது.



புதிய இரயில் நிலையத்தின் பழைய தோற்றம்

106

கல்விப் பணியில் மகாஜனங்கள்

1871 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16 ஆம் தேதி தொடங்கிய ஈரோடு நகர பரிபாலன சபையினர் 1876 இல் முதல் தொடக்கப் பள்ளியை டவுன் ஸ்கூல் என்ற பெயரில் தொடங்கினர். அடுத்த ஆண்டு சில தனியார் பள்ளிகளையும் ஏற்றனர். ஐந்தாம் வகுப்பு வரையில் மட்டுமே கல்வி.

எம். சிக்கய்ய நாய்க்கர்

உயர்நிலைப்பள்ளி இல்லாத குறையைப் போக்க 1887 இல் தாசப்ப ஐயர். அண்ணாசாமி அய்யங்கார் ஆகிய இருவரும் 'டவுன் ஹைஸ் கூல்' என்ற பெயரில் தொடங்கினர். அவர்களால் பள்ளியைத் தொடர்ந்து நடத்த முடியவில்லை. பள்ளியை மூடி பள்ளித் தளவாடங்கள் அனைத்தையும் லண்டன் மிஷனுக்கு விற்று விட்டனர். அவை வண்டியில் ஏற்றப்பட்டுப் பயணம் செய்ததை இரு பெருமக்கள் பார்த்தனர்.

அவர்கள் கே.ஏ. ஷேக் தாவூத் சாயபு அவர்களின் தந்தை அலாவுதீன் சாயபு. தந்தை பெரியார் அவர்களின் தந்தை ஈ.த. வெங்கட நாயக்கர் அவர்களும் ஆவர். லண்டன் மிஷன் வாங்கிய எல்லாத் தளவாடங்களையும் பணம் கொடுத்து மீட்டனர்.

ஈரோட்டின் பல சமூகப் பெருமக்களையும் இணைத்து 'மகாஜன பள்ளிக்குழு' ஏற்படுத்தினர். அந்தக் குழுவின் சார்பில் 1899 இல் ஈரோடு மகாஜன உயர்நிலைப் பள்ளியை ஏற்படுத்தினர்.

இக்குழு சார்பில் 12.7.1954ல் தொடங்கப்பட்ட மகாஜன கல்லூரிக்கு 12.9.1954ல் சி.சுப்பிரமணியம் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. அனைத்துச் சமூகப் பெருமக்களும் உதவி

மகாஜன உயர்நிலைப்பள்ளி தொடங்கியவர்கள்.
நடுவில் தந்தை பெரியாரின் தந்தை. அவர் வலப்புறம் அலாவுதீன் சாயபு.

மகாஜன உயர்நிலைப்பள்ளி

செய்தனர். டாக்டர் எல்.கே.முத்துசாமி, குட்டப்பாளையம் கே.எஸ்.பெரியசாமிக்கவுண்டர் ஆகியோர் தங்களுக்கு அரசு வழங்கிய தியாகி மானிய நிலத்தை மகாஜன கல்லூரிக்கு வழங்கினர்.

மொடக்குறிச்சி (மண்டிக்காரர்) எஸ்.பி. சுப்பராயக் கவுண்டர், டி.அண்ணாமலைக் கவுண்டர், சின்னியம்பாளையம் S.K.இராமசாமிக் கவுண்டர், வி.ஆர்.ஏ. மாணிக்க முதலியார், எம்.ஜி. அங்கப்ப செட்டியார் போன்ற பல சமூகத்தினர் கல்லூரிக்கு உதவி செய்தனர்.கல்லூரிக் குழுவில் இடம் பெற்றனர்.

அதனால் தான் 'மகாஜன' என்று பெயர் வைக்கப்பட்டது.

முதல் கல்லூரித்தலைவர் கோயம்புத்தூர் C.S. இரத்தின சபாபதி முதலியார் . பின் தந்தை பெரியார் அவர்கட்கும் கல்லூரிக்கும் தொடர்பு இருந்தது. நகராட்சி மன்றம் ஒரு லட்சம் ரூபாய் நன்கொடை அளித்தது.

கல்லூரித் தாளாளர் எம்.சிக்கய்ய நாய்க்கர். 'மகாஜனக் கல்லூரி' பின்னர் 'சிக்கய்ய நாய்க்கர் மகாஜனக் கல்லூரி' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. பின் சிக்கய்ய நாய்க்கர் கல்லூரி என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

1954 வரை பள்ளிக் கல்வியை முடித்தஈரோடு மாணவர்கள் உயர் கல்வி கற்க சென்னை, திருச்சி, கோவை போன்ற ஊர்க் கல்லூரியில் தான் சேர்ந்தனர். அங்கு செல்ல இயலாதவர்கள் உயர்கல்வியை இழந்தனர்.

மகாஜன கல்லூரி ஏற்பட்டதால் கிராமப்புற, ஏழை மாணவர்கள் பயன் பெற்றனர். இப்போது கல்லூரி நிருவாகம் தமிழ்நாடு அரசின் உயர் கல்வித்துறை நிருவாகத்தில் உள்ளது.

அரசு உதவி பெறும் இக்கல்லூரியை அரசுக் கல்லூரி ஆக்க வேண்டும் என்று கோரிக்கை உள்ளது. அப்படி ஆக்கப்பட்டால் கல்லூரிப் பெயரில் 'மகாஜன' சேர்க்க வேண்டும்.

பெயர் மாறிய கல்லூரி

1957—'58

MAHAJANA COLLEGE

1964-1965.

CHIKKAIAH NAICKER MAHAJANA COLLEGE

968—'69

CHIKKAIAH NAICKER COLLEGE

107

சாதிப்பெயர் நீக்கிய தெரு

இன்றைய தெருக்களின் பெயர்களில் சாதிப்பெயர் கூடாது என்பது வழக்கத்திற்கு வந்துள்ளது. ஈரோடு கலைமகள் பள்ளி மேல்புறம் உள்ள 'பாவாடை நாயக்கர் தெரு' இன்று 'பாவாடைத்தெரு' ஆகிவிட்டது.

ஈரோடு நகரம் மரப்பாலம் பகுதியிலிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் தெருவின் பெயர் இன்று 'மண்டபத் தெரு'. ஆனால் பழைய நகர வரை படங்களில் அத்தெரு 'கம்மாளர் மண்டபத் தெரு' என்று உள்ளது.

ஆசாரிகள் ஆன கம்மாளரை ஐந்து வகையாகப் பிரித்து 'பஞ்சகம்மாளர்' என்பர். அவர்கள்,

தட்டார் (பொன் வேலை செய்பவர்)

கொல்லர் (இரும்பு வேலை செய்பவர்)

தச்சர் (மரவேலை செய்பவர்)

கண்ணார் (உலோக வேலை செய்பவர்)

கொத்தர் (கல்வேலை செய்பவர்)

எனப்படுவர்.

முன்பு இந்த ஐந்து பிரிவினர் அங்கு வாழ்ந்தார்கள். அவர்களின் பொது மண்டபம் அங்கு இருந்தது.

நாணயம் தயாரிக்கவும் (அக்கசாலை), கைதிகட்கு விலங்கிடவும், ஆயுதங்கள் தயாரிக்கவும் இவர்கள் தயவு தேவைப்பட்டது. பஞ்சகம்மாளர் செப்பேடு இவர்கள் பெருமையைக் கூறுகிறது. அதில் ஒரு பாடல்

ஆதித்தன் எங்கே அயன்மூவர் தான்எங்கே

வேதச்சொல் எங்கே வினைஎங்கே - நீதிக்குள்

மண்ணாளர் எங்கே மனைவரம்பு தான்எங்கே

கண்ணாளர் கைடமங்கி னால்

என்பது. (கண்ணாளர்-கம்மாளர்)

காலிங்கராயனின் அணை, கால்வாய்ப் பணிக்கு இவர்கள் உதவிய காரணத்தால் சில உரிமைகளைப் பெற்றனர்.

சென்னையில் கிருஷ்ணமாச்சாரியார் தெருவை 'கிருஷ்ணமா தெரு' என எழுதியுள்ளனர்.

'கிருஷ்ணன் தெரு' எனலாமே.

108

"டெக்ஸ்வேலி"

தென்னிந்தியாவின் ஜவுளி வர்த்தகத்திற்கு இதயமாக விளங்கும் ஈரோட்டில் நூல், காடா துணிகள், வீட்டு உபயோக ஜவுளிகள், துண்டுகள், லுங்கி, வேட்டிகள், ஆண், பெண், குழந்தைகள் ஆயத்த ஆடைகள், உள்ளாடைகள் என 10க்கும் மேற்பட்ட ஜவுளிப் பொருட்கள் ரூ5000 கோடிக்கு மேல் வர்த்தகம் நடக்கும் வகையில் அனைத்தும் ஒரே இடத்தில் 18 ஏக்கர் நிலப்பரப்பில், 16 லட்சம் சதுர அடியில் டெக்ஸ் வேலி அமைந்துள்ளது.

குறு, சிறு, நடுத்தர ஜவுளி உற்பத்தியாளர்கள் மற்றும் வியாபாரிகள் தங்கள் பொருட்களை நியாயமான விலைக்கு விற்க, புதிய சந்தை யுக்திகளை, வாய்ப்புகளை அறிய டெக்ஸ்வேலி மிகப்பெரிய அரிய வாய்ப்பாக தமிழகத்திற்கு அமைந்துள்ளது.

சாலையோரங்களிலும், வெயிலிலும் மழையிலும் வியாபாரம் செய்வதைத் தவிர்க்க உலகத் தரத்தில் 4 லட்சம் சதுர அடியில் ஒரு வாரச் சந்தை தயாராக உள்ளது.

வாங்குவோர்-விற்போர் சந்திப்பு, உலக அளவில் ஆடை உலகில் புதிய வடிவமைப்புக்கள், காலத்திற்கு ஏற்ற மாற்றங்களை அறிதல் என ஜவுளித் தொழிலில் உள்ள அனைவருக்கும் கண்காட்சி அரங்கம் 85000 சதுர அடியில் வாரச்சந்தை வளாகத்தின் தரைத்தளத்தில் அமைந்துள்ளது.

வங்கிகள், போக்குவரத்து வசதி, சரக்கு ஊர்திகள், குடோன்கள் அனைத்தும் ஒருங்கிணைந்து உள்ள டெக்ஸ்வேலி ஆசியாவில் ஜவுளித்துறைக்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

109 ஈசுவரன் தந்த கீழ்பவானித் திட்டம்

எம்.ஏ.ஈசுவரன்

1946 ஆம் வருடம் ஈசுவரன் ஈரோடு தொகுதியில் போட்டியின்றி காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சென்னை மாநில முதல்வராக 30.4.1946ல் பதவியேற்ற டி.பிரகாசம் 23.3.1947ல் பதவி விலக நேர்ந்தது.

பல ஆண்டுகளாக 'அப்பர் பவானி' 'லோயர் பவானி' என்ற இரு பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் பரிசீலனையில் இருந்தது. அப்பர் பவானி, நொய்யல்-அமராவதிக்கு இடைப்பட்டது. லோயர் பவானி பவானியாற்றுக்கும் நொய்யலுக்கும் இடைப்பட்டது. லோயர் பவானிப் பகுதியில் ஏற்கனவே காலிங்கராயன், தடப்பள்ளி, அரக்கன் கோட்டை பாசனத் திட்டம் இருந்ததால் அப்பர் பவானிக்கே வாய்ப்பு அதிகமாக இருந்தது.

இந்த நிலையில் பிரகாசத்திற்குப் பதிலாக சிலர் முதல்வராக முயற்சி செய்தனர். ஓ.பி.இராமசாமி ரெட்டியார், சி.என்.முத்துரங்க முதலியார் ஆகியோர் முக்கியமானவர்கள். ஓ.பி.இராமசாமி ரெட்டியார் ஈசுவரனிடம் ஆதரவு கேட்டார். அப்போது ஈசுவரன் அணியில் 21 சட்டமன்ற உறுப்பினர்கள் இருந்தனர்.

ஓ.பி.இராமசாமி ரெட்டியாரிடம் ஈசுவரன் ஒரு நிபந்தனை விதித்தார். உங்கள் ஆட்சியில் லோயர் பவானி (கீழ்பவானி) திட்டம் அமுல் படுத்தப் பட்டால் உங்களை ஆதரிக்கத் தயார் என்றார். ஓ.பி.இராமசாமி ரெட்டியாரும் அதற்கு ஒத்துக் கொண்டார். ஈசுவரன் அணி ஆதரவால் 110 சட்டமன்ற உறுப்பினர்கள் ஆதரவுடன் ஓ.பி.இராமசாமி ரெட்டியார் முதல்வர் ஆனார். அவர் ஆட்சியில் கீழ்பவானி பாசனத்திட்டம் தொடங்கப் பட்டது. எனவே கீழ்பவானி திட்டம் வர ஈசுவரனே காரணம்.

முத்துக் கருப்பண பிள்ளை-வேங்கடலட்சுமி தம்பதியர்க்கு 1899 ஆம் ஆண்டு பிறந்தவர் ஈசுவரன். ஆங்கிலேயர் நடத்தும் கல்வி நிலையத்தைப் புறக்கணிக்க காந்தி கூறியதால் பி.ஏ.படிப்பை 1922 இல் உதறித் தள்ளினார். ஈரோட்டில் 1920 இல் காந்தியடிகளையும், 1921இல் பாரதியாரையும் சந்தித்தார்.

காங்கிரஸ் கட்சியின் அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு மொத்தம் 11½ வருடம் சிறைவாசம் பெற்றார்.

விடுதலை பெறும் வரை திருமணம் செய்து கொள்ளமாட்டேன், காலுக்குச் செருப்பு அணியமாட்டேன் என்று கூறி அவ்வாறே வாழ்ந்தார். வறுமையில் வாடி 1978ல் காலமானார்.

110

பொருட்காட்சி எரிந்தது

இ.கு.மு. அப்துல் கனி சாகிப்

பெரிய தோல் வணிகர் E.K.M. முகமது அப்துல் கனி அவர்கள் (1959-1964) நகராட்சி மன்றத் தலைவராக இருந்தார். அவர் 1960 ஆம் ஆண்டு வ.உ.சி.பூங்காவில் பொருட் காட்சி ஒன்றை நடத்தினார்.

பல சிறு வணிகர்கள் கடன் வாங்கியும், நகைகளை அடைமானம் வைத்தும், பொருட் காட்சியில் பங்கு கொண்டனர். உள்ளூர் வணிகர்கள் சிலர் தங்கள் வாணிகம் பாதிக்கப்படும் என்று புகார் கூறினர்.

ஒரு நாள் இரவு பொருட்காட்சி முழுவதும் எரிந்தது. பங்கு கொண்ட வியாபாரிகள் பதறினர். செய்வது அறியாது விழித்தனர். அந்நிலையில் நகர்மன்றத் தலைவராக இருந்த இவர் தன் சொந்தப் பொறுப்பில் எல்லோருக்கும் நட்டஈடு வழங்கினார்.

பழைய அரசு மருத்துவமனை இருந்த இடத்தை எண்பதாயிரம் ரூபாய்க்கு வாங்கி நகராட்சிக்கு உரியதாக்கினார். இன்று அதன் மதிப்பு பல கோடி ரூபாய் ஆகும்.

அதனால்தான் அங்கு அமைந்துள்ள வணிக வளாகம் இன்றும் 'கனி' மார்க்கெட், என்று அழைக்கப்படுகிறது. தமிழ்நாடு அளவில் அரசியல் செல்வாக்கு உள்ளவராகத் திகழ்ந்தார். 1967ல் அண்ணா அமைத்த கூட்டணியில் இசுலாமிய அமைப்பைச் சேர்த்ததில் இவர் பங்கு உண்டு.

ஈரோடு நகரில் சிறப்புடன் இயங்கும் மதரசா இஸ்லாமிய கல்வி நிறுவனங்கட்கு இவர் பெயர் வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்கது.

111

13ஆம் நூற்றாண்டில் இரண்டு பெரிய சந்தைகள்

இடைக்காலக் கல்வெட்டுகளில் கடைத்தெரு, சந்தை இவற்றைக் குறிப்பதற்குப் "பெருந்தெரு" என்ற சொல்லே பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஈரோட்டில் கி.பி.1215 இல்" ராசராசப் பெருந்தெரு" என்ற பெரிய சந்தை இருந்ததாக பவானி வட்டம் பட்டிலூர் வாகீசுவரர் கோயில் கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

அப் பெருந்தெருவில் வணிகம் செய்த 'வாணியரில் முப்பேறுடையான் பொன்னம் பலவன்' என்பவர் பட்டிலூர் வாகீசுவரர் கோயில் மண்டபம் கட்டியதாகக் கொங்குச் சோழன் வீரராசேந்திரன் கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

காங்கயம் வட்டம் பட்டாலி பால் வெண்ணீசுவரர் கோயிலில் உள்ள கி.பி.1283 ஆம் வருடக் கல்வெட்டு ஈரோட்டில் 'இரட்டுற மொழி சோழப் பெருந்தெரு' இருந்ததாகக் குறிக்கிறது.

அப்பெருந்தெருவில் வணிகம் செய்த வியாபாரி சோலை சூரிய தேவன் என்பவர் அக்கோயிலில் சந்திவிளக்கு வைக்க ஒரு கழஞ்சு பொன் கொடுத்ததாக விக்கிரம சோழனின் பத்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுத் தெரிவிக்கிறது. ஈரோட்டு வணிகர்கள் செல்வச் செழிப்புடன் ஆலயம் பணிகளில் ஈடுபட்டது தெரிகிறது.

கொங்குச் சோழர் காலத்தில் ஈரோட்டின் வணிகச் சிறப்பு இதனால் தெரிகிறது.

பிற்காலத்திலும் கருநாடக மாநிலம் செல்லும் தமிழக வணிகப் பொருட்கள் ஈரோட்டை மையமாக வைத்தே காவேரிபுரம் கணவாய் வழியாகச் சென்றன. காவேரிபுரம் கணவாய் மேட்டூர் அணையில் மூழ்கிய பின்னர்தான் திம்பம் வழி பெரு வழக்கத்திற்கு வந்தது.

இன்றும் ஜவுளி, மஞ்சள் வணிகத்திற்கு தமிழ் நாட்டின் மையமாக ஈரோடு விளங்குகிறது குறிப்பிடத்தக்கது. இது பழைய வரலாற்றின் தொடர்ச்சி எனலாம்.

ஈரோட்டின் கடைத்தெரு 'அங்காடித்தெரு' என்றே குறிக்கப்பட்டது. மிகக் குறுகலாக இருந்த அங்காடித் தெருவை எதிர்ப்புக்கு இடையில் ஓரளவு அகலப்படுத்தியவர் தந்தை பெரியார் அவர்கள் (1917-1920).

1800ல் இரண்டு மாதங்களில் காவேரிபுரம் வழியாக கருநாடகம் சென்ற ஈரோடு வட்டாரப் பொருள்களில் சில.

ஜவுளி 50 பொதி மாடுகளில்

புகையிலை 300 பொதி மாடுகளில்

நெய் 70 பொதி மாடுகளில்

விளக்கெண்ணெய் 10 பொதிமாடுகளில்

பனை வெல்லம் 50 பொதிமாடுகளில்

(புக்கானன் 12-10-1800)

112

ஈரோடு நகர சுதந்திரப் போராட்ட வீரர்கள்

1.	எஸ். அப்துல்கனி	ஈரோடு
2.	அப்துல் ரஜாக்	ஈரோடு
3.	அப்துல் வகாப்	ஈரோடு
4.	அம்ரூதீன் சாயபு	ஈரோடு
5.	கே. அப்பாய் நாயக்கர்	ஈரோடு
6.	கே. அர்த்தநாரீஸ்வர பிள்ளை	ஈரோடு
7.	ஏ. அப்புக்குட்டி	ஈரோடு
8.	எல். அங்கப்ப செட்டியார்	ஈரோடு
9.	கே. அமீர் (ஐ. என். ஏ.,)	ஈரோடு
10.	அப்துல்கறீம் சாயபு	பெரிய அக்ரஹாரம்
11.	கே. பி. ஆறுமுகம்	கருங்கல்காளையம்
12.	கே. ஆறுமுக மூப்பனார்	ஈரோடு
13.	என். ஆறுமுக முதலியார்	ஈரோடு
14.	எஸ். கே. இராமசாமி கவுண்டர்	ஈரோடு
15.	ஆர். அரங்கசாமி செட்டியார்	ஈரோடு
16.	கே. பி. இராமசாமிக் கவுண்டர்	அசோகபுரம்
17.	இரத்தினம்	ஈரோடு
18.	இராமசாமி நாயக்கர்	ஈரோடு
19.	இராமசாமி நாயக்கர்	ஈரோடு
20.	இராமசாமி நாயக்கர்	ஈரோடு
21.	ஈ. வெ. இராமசாமி	ஈரோடு
22.	எம். இப்ராகிம் சாயபு	ஈரோடு
23.	எம். இராமநாதன்	ஈரோடு
24.	கே. ஏ. இராமநாத சர்மா	ஈரோடு
25.	கே. இராஜு நாயுடு	ஈரோடு
26.	பி. இராமசாமி	ஈரோடு
27.	கு. இராஜவேலு	ஈரோடு
28.	கருப்புசாமி பிள்ளை	ஈரோடு
29.	கந்தசாமிக் கவுண்டர்	ஈரோடு

30.	கந்தசாமிக் கவுண்டர்	ஈரோடு
31.	எம். கணபதி பிள்ளை	ஈரோடு
32.	எஸ். கணபதி சுப்பிரமணிய அய்யர்	ஈரோடு
33.	என். கே. கந்தசாமி	ஈரோடு
34.	ஏ. சி. கன்னியப்பன்	ஈரோடு
35.	கே. சி. கருமணன்	கருங்கல்பாளையம்
36.	ஏ. காதர் பாட்ஷா சாயபு	ஈரோடு
37.	எச். காதர் உசேன் சாயபு	ஈரோடு
38.	ஆர். சி. காவேரி	ஈரோடு
39.	பி. எஸ். காளி ரத்தினம்	பெரிய அக்ரஹாரம்
40.	கிருஷ்ணசாமிக் கவுண்டர்	ஈரோடு
41.	ஏ. கிருஷ்ணன்	ஈரோடு
42.	ஆர். சி. கிருஷ்ணன்	ஈரோடு
43.	ஈ. பி. கிட்டப்பன்	ஈரோடு
44.	குருசாமி முதலியார்	ஈரோடு
45.	எம். குப்புசாமி	ஈரோடு
46.	எஸ். குழந்தைசாமி	இடையன்காட்டு வலசு
47.	எம். குணசீலன்	ஈரோடு
48.	பி. குருசாமி	ஈரோடு
49.	கேசவலால் காளிதாஸ் சேட்	ஈரோடு
50.	பி. கோவிந்தசாமி முதலியார்	ஈரோடு
51.	பி. வி. கோவிந்தசாமி முதலியார்	ஈரோடு
52.	ஈ. கே. கோவிந்த சாமி	ஈரோடு
53.	எம். சதாசிவம்	ஈரோடு
54.	கே. கே. சாத்துக் குட்டி நம்பியார்	ஈரோடு
55.	எஸ். சாமியப்பன்	செங்கோடம்பாளையம்
56.	சின்னப்ப கவுண்டர்	ஈரோடு
57.	கே. சின்னபன்	ஈரோடு
58.	என். சின்னப்ப கவுண்டர்	ஈரோடு
59.	எஸ். சித்தையா	ஈரோடு
60.	சுப்பைய ஆசாரி	கருங்கல்பாளையம்
61.	சுப்பராயலு செட்டியார்	ஈரோடு
62.	எஸ். சுப்பிரமணிய செட்டியார்	ஈரோடு

63.	கே.வி.சுப்புரத்தினம் ஐயர். பி.ஏ.பி.எல்..	ஈரோடு
64.	எஸ்.எஸ். சுப்பிரமணியம்	ஈரோடு
65.	எம். சென்னியப்பன்	இடையன்காட்டு வலசு
66.	பி.சென்னியப்பன்	இடையன்காட்டு வலசு
67.	சி. செங்கோடு	ஈரோடு
68.	ஏ.செல்லையா	ஈரோடு
69.	ஆர். செலமேலு	ஈரோடு
70	சேஷாத்திரி ஐயங்கார்	ஈரோடு
71.	ஏ. சொக்கைய செட்டியார்	ஈரோடு
72.	ச.து.சுப்பிரமணிய யோகி (கவிஞர்)	ஈரோடு
73.	எம். தங்கப் பெருமாள்	கருங்கல்பாளையம்
74.	கே.சி.தருமலிங்கம்	ஈரோடு
75.	திருமலை கவுண்டர்	ஈரோடு
76.	எஸ்.துரைராஜ்	ஈரோடு
77.	சி.தேவ நாயக்கர்	ஈரோடு
78.	த.பக்கிரி சாயபு	ஈரோடு
79.	என்.பழனியப்ப கவுண்டன்	ஈரோடு
80.	எம்.பங்கஜத்தம்மாள்	ஈரோடு
81.	எஸ்.பசுபதி	ஈரோடு
82.	எஸ். பாலகிருஷ்ண ராவ்	ஈரோடு
83.	கே. பாவா சாயபு	ஈரோடு
84.	எஸ்.பாட்ஷா சாயபு	ஈரோடு
85.	ஏ. பாப்பனாசாரி	ஈரோடு
86.	பி. பெரியண்ணன்	ஈரோடு
87.	கே. பெரியண்ணன்	ஈரோடு
88.	சி.பெரியண்ணன்	ஈரோடு
89.	ஆர். பெருமாள் முதலியார்	ஈரோடு
90.	ஈ.எம்.எஸ்.மொகமது உசேன்	ஈரோடு
91.	பி.மகமது அப்துல்லா சாயபு	ஈரோடு
92.	மகமது அனீப் சாயபு	ஈரோடு
93.	ஏ.மகமது உசேன் சாயபு	ஈரோடு
94.	கே. மகமது உசேன் சாயபு	ஈரோடு
95.	என்.மாரப்ப ஆசாரி	ஈரோடு

96. என். மாரியப்பன்	ஈ.ரோடு
97. மாஸ்தி நாயக்கர்	ஈ.ரோடு
98. கே. மாரப்பன்	ஈ.ரோடு
99. ஏ.மாரப்ப கவுண்டன்	ஈ.ரோடு
100. ஆர். மாணிக்கம்	ஈ.ரோடு
101. எல்.கே. முத்துசாமி	ஈ.ரோடு
102. ஏ.ஆர். முத்துசாமி	ஈ.ரோடு
103. பி. முத்து	இடையன்காட்டு வலசு
104. எஸ். வி. முத்து	ஈ.ரோடு
105. எஸ். நல்லா கவுண்டர்	ஈ.ரோடு
106. எஸ். நல்லகண்ணு கவுண்டர்	ஈ.ரோடு
107. எஸ். கே. நஞ்சப்பன்	ஈ.ரோடு
108. டி. நாராயண செட்டியார்	ஈ.ரோடு
109. மு. கோ. நாட்டராயன்	ஈ.ரோடு
110. ஏ. நாச்சிமுத்து	ஈ.ரோடு
111. எம். நாகப்பன்	ஈ.ரோடு
112. எஸ். நாச்சிமுத்து கவுண்டர்	ஈ.ரோடு
113. எஸ். நாராயண சிங்	ஈ.ரோடு
114. வி. ஜெயராம நாயக்கர்	ஈ.ரோடு
115. ஜி. வெங்கடாசலம்	ஈ.ரோடு
116. எம். ஏ. வெங்கடாசலம்	ஈ.ரோடு
117. எஸ். பி. வெங்கடாசலம்	ஈ.ரோடு
118. வி. ஜி. வெங்கடாசலம்	ஈ.ரோடு
119. என். வெங்கட்ட நாயக்கர்	ஈ.ரோடு
120. எஸ். வேலப்பன்	ஈ.ரோடு
121. எஸ். வையாபுரி முதலியார்	ஈ.ரோடு
122. பி. அர்த்தநாரியப்ப கவுண்டர்	அக்ரஹாரம்